www.tamilarangam.net

2116

# லெனினிஸ்ட்

உள்ளே உள்ளவை..


- முதலாளிய நாடுகளுக்கு இடையே யுத்தங்கள் தவிர்க்க முடியாதவை. —ஸ்டாலின்
- பாட்டாளிவர்க்கத் தலைமை பற்றி...
- இன்றைய அரசியல் நிலையும் பாட்டாளிவர்க்கக் கட்சியும்
- இன்றைய அரசியல் போராட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி —சௌ என் லாய்.
- தேசியவிடுதலைப்போராட்டமும் புதிய ஜனநாயகப் புரட்சியும்.
- சுன் - யட்சன் பல்கலைக்கழக மாணவர்களுடனான உரையாடல். —ஸ்டாலின்
- சனநாயக வாதிகளுக்கு ஒரு கடிதம்.


1 விலை - ரூபா 10-00
நவம்பர் 1985

உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர சக்திகளுக்கு அறைகூவல்!

## திரிபுவாதத்தை எதிர்த்துப் போரிடுவோம்!

### உலக பொருளாதார நெருக்கடி —

1984 மேயில் அமெரிக்காவின் எட்டு மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றான கொன்ரினென்ரல் இல்லினொய்ஸ் (Continental illinois) வங்குரோத்தான நிலையை அடைந்தபோது அமெரிக்க அரசு அதனால் நிலை குலைந்தது. மேல்நிலை வல்லரசான அமெரிக்க ஏகாதிபத்தியத்தில் 43 வங்கிகள் 1983 லும், 1984 ன் முதல் ஐந்து மாதத்தில் 34 வங்கிகளும் வங்குரோத்தாகி (Bankruptcy) மூடப்பட்டன. அதாவது அமெரிக்க ஏகாதிபத்தியப் பொருளாதாரம் முன்னொருபோதும் கண்டிராத அளவிற்கு மோசமான trad gab - பால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகின்றது. 1984 இற்கான trad gab முன்னொருபோதும் நிகழ்ந்திராத அளவிற்கு 130 billion டொலர்களை எட்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அது 69.4 billion டொலராக 1983 இல் இருந்ததன் இரு மடங்காகும். உலகில் வேறு எந்த நாடும் தொகையாக வாங்குதலிலும் விற்பதிலும் இத்தகைய மிகப்பெரிய ஏற்றத்தாழ்வை சந்தித்து மோசமாகப் பாதிக்கப்படவில்லை.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

மார்க்சிய - லெனினிஸ அரசியல் தத்துவார்த்த ஏடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

*முன் பக்கத்*

*தொடர்ச்சி*

அமெரிக்க ஏகாதிபத்தியம் மிகவும் சக்தி வாய்ந்த முதலாளிய நாடாகவுள்ளது. மற்றைய ஏகாதிபத்திய நாடுகளின் நிலைமையாகும் தன்மையும் கற்பனை செய்யத்தக்கதே. அமெரிக்க ஏகாதிபத்தியத்தில் மட்டுமன்றி, உலகு முழுவதுமே ஆழமான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளன. இதனை எல்லாத் தொழிற்றுறைக்கும் அவசியமான உருக்கின் உற்பத்தியை மையமாக வைத்து ஆராயலாம். 1986 ன் முடிவில் உலகின் மிகப்பெரிய மையமாகத் திகழும் ஐரோப்பிய நாடுகள் 30 million தொன் உருக்கு (இது அவற்றின் 15% கொள்வனவுத் திறனாகும்) கொள்வனவை நிறுத்திவிட உத்தேசித்துள்ளன. இதனால் 159 million தொன் உற்பத்தித் திறன் உடைய ஜப்பான் 97 million தொன் உருக்கை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும். உலகின் மிகப்பெரிய உருக்கு உற்பத்தி நிறுவனமான Nippon Steel அதனது உற்பத்தித் திறனில் 15% த்தை இரண்டு வருடங்களுக்கு குறைத்துள்ளது. ஜப்பானின் ஐந்து பெரிய உருக்குக் கம்பனிகள் 1983ல் 425 million டொலர் நட்டத்தை சந்தித்துள்ளன. மேலும் 1983 ல் பிரெஞ்சின் தேசியமயமாக்கப்பட்ட உருக்குக் கம்பனிகளான Sacilor, Usinor 1.3 billion டொலர் நட்டத்தையும் இங்கிலாந்தின் தேசியமயமாக்கப்பட்ட கம்பனியான BSC 191 million டொலர் நட்டத்தையும் சந்தித்தன. இதே காலத்தில் இங்கிலாந்திலும், ஜப்பானிலும் வங்குரோத்தும் மிகப்பெரிய அளவுக்கு அதிகரித்துள்ளன. பிரிட்டனில் 1972 ல் 3063 என்பதிலிருந்து 1983 இல் 12,607 ஆகவும் ஜப்பானில் 1972 ல் 10,000 லிருந்து 20,000 ஆகவும் அதிகரித்துள்ளன.

ஏகாதிபத்திய நாடுகள் தமது உள்நாட்டுச் சந்தைகள் சுருங்கியதன் மூலமாகவும் பணவீக்கத்தினாலும், வேலையின்மையினாலும், வாங்கும் சக்தியின் வீழ்ச்சியினாலும் மட்டுமன்றி புதிதாக தோற்றம் பெற்று ஏகாதிபத்திய சக்திகளான ருஷ்ய சமூக ஏகாதிபத்தியம், ஜப்பான் ஏகாதிபத்தியம் ஆகியவற்றுடனான கடுமையான போட்டியில் அவை ருஷ்யா, யப்பான் மூன்றும் மண்டல நாடுகளை மட்டுமன்றி, தமது சொந்த நாட்டுச் சந்தைகளையும் கைப்பற்றி ஏகாதிபத்திய சந்தைகளை நிலையாக ஆக்கிரமித்துள்ளன. பாரம்பரிய ஏகாதிபத்திய சக்திகளான இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா என்பன சிறப்பாக மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. அதே சமயத்தில் ருஷ்ய சமூக ஏகாதிபத்தியமும் கூட பொருளாதார நெருக்கடியால் தாக்கப்பட்டு தனது எதிராளிகளான ஏகாதிபத்தியங்களைப் போலவே சுரண்டல் பலவீனத்தால் பாதிக்கப்பட்டபோதும் உலகின் ஒவ்வொரு மூலையிலும் தனது சந்தைகளை இறுக்கப்படுத்தி வருகிறது.

இந்தச் சந்தைகளை பிடிப்பதற்கான வெறித்தனமான போட்டியில் மிக மிக மோசமாகப் பாதிக்கப்படுபவை மூன்றும் மண்டல நாடுகளே. இவற்றில் பல வங்குரோத்தின் எல்லைக்கே சென்றுவிட்டதுடன், தமது மூலவளங்களையும், செல்வத்தையும் இழந்து கொண்டிருக்கின்றன. எண்ணெய் வளமுடைய மத்திய கிழக்கு நாடுகள், தமது பகுதிகளில் நடந்து வரும் போர்களின் காரணமாக (சிறப்பாக ஈரான் - ஈராக் யுத்தம்) பெருந்தொகையான ஆயுதங்களை வாங்குவதனாலும் தமது செல்வ வளங்களை இழந்து வருகின்றன.

பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டலுக்கு உள்ளாகும் அரைக்காலனி நாடான இலங்கையும் கூட ஏகாதிபத்திய பொருளாதார நெருக்கடியின் பிடியில் சிக்கி

www.tamilarangam.net

மூச்சு விடமுடியாது தவிக்கிறது. ஏகாதிபத்தியங்களின் பக்கங்களான U. N. P அரசு நெருக்கடியின் சுமை முழுவதையும் மக்கள் மீது சுமத்தி வருகிறது. இறந்த பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிப்பதனால் மேலும் மேலும் அன்னியச் செலாவணி துண்டு விழுவது தொடர்கிறது. அபிவிருத்தி திட்டங்களுடன்கூட ஏகாதிபத்திய சுரண்டலுக்கு வழி திறக்கிறது. ஆயுதக் கொள்வனவில் நாட்டுச் செல்வம் ஏகாதிபத்தியங்களுக்கு தாரைவார்க்கப்படுகின்றது அதிகரித்து வரும்பணவீக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதலபாதாளத்துக்கு தள்ளுகிறது. விவசாயிகள் நிதி மூலதனத்தின் கோரப் பற்களில் சாகப் பிழியப்படுகின்றனர். அதிகரிக்கும் அரசாங்க வரிகள் மக்களை மேலும் ஏழைகளாக்குகிறது.

## உலகப் பொருளாதார நெருக்கடியின் மூன்றாம் காலகட்டம்

உலகம் முழுவதும், ஏகாதிபத்திய பொருளாதார அமைப்பு முழுவதும் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. இது உலக ஏகாதிபத்திய பொருளாதார நெருக்கடியின் மூன்றாவது கட்டமாகும். முதலாவது உலகப் பொருளாதார நெருக்கடி 1914 - 1918 வரை நீடித்தது. இரண்டாவது காலகட்டம் 1939 - 1945 வரையுமாக இருந்தது. ஏகாதிபத்திய பொருளாதார நெருக்கடி ஏகாதிபத்தியத்தின் உள்முரண்பாடுகளை தீவிரமாக்குகிறது. இந்த முரண்பாடுகளை சமாதான பூர்வமான வழிகளில் தீர்ப்பதற்குள்ள சாத்தியத்தை இல்லாமலாக்குகிறது. பதிலுக்கு நிகழ்ச்சி நிரலில் எதிரிகளுக்கிடையிலான முரண்பாட்டை தீர்க்கும் யுத்தத்தையே முன்வைக்கிறது. ஏகாதிபத்தியத்தின் உள் முரண்பாடுகள் பற்றிய லெனினிய ஆய்வைப் பற்றியும் முதலாவது உலக யுத்தம் பற்றியும் ஸ்டாலின் கூறியது "ஏகாதிபத்தியத்திற்கு 'அழுகி செத்து மடியப்போகிற முதலாளியம்' (moribund Capitalism) என்று பெயரிட்டார் லெனின். ஏன்? ஏனெனில் முதலாளியத்தின் முரண்பாடுகளை எந்த அளவுக்கு தீவிரமாக்குமோ அந்த அளவிற்கு - எந்த எல்லைப் பக்கமாக அடியவுடன் புரட்சி ஆரம்பமாகுமோ அந்த எல்லையைத் தொடுமளவிற்கு ஏகாதிபத்தியம் தீவிரமாக்குகிறது. இந்த முரண்பாடுகளில் மூன்று மிகமிக முக்கியமானவையாக கருதப்படவேண்டும்.

முதலாவது முரண்பாடு: மூலதனத்துக்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையே உள்ள முரண்பாடு.

இரண்டாவது முரண்பாடு: மூலப்பொருட்கள் கிடைக்கக்கூடிய இடங்களையும் அந்நிய நாட்டுப் பிரதேசங்களையும் கைப்பற்ற நடக்கும் போராட்டத்தில் வெவ்வேறு பணக் கோஷ்டிகளுக்கும், ஏகாதிபத்திய வல்லரசுகளுக்குமிடையே உண்டாகி இருக்கும் முரண்பாடாகும்...

மூன்றாவது முரண்பாடு, அடிமைப் படுத்தி அரசாட்சி புரிகிற, விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சில 'நாகரீக' நாடுகளும் அடிமைப்பட்டும், காலனி நாடுகளாயும் கிடக்கிற கோடானுகோடி உலக மக்களுக்கும் இடையேயுள்ள முரண்பாடு ஆகும்.

பொதுப்படையாகப் பார்த்தால், இவைதான் ஏகாதிபத்தியத்தின் பிரதான முரண்பாடுகள ஒரு காலத்தில் தழைத்துச் செழித்த முதலாளியத்தை அழுகி மடியப் போகும் முதலாளியமாக மாற்றியிருக்கும் முரண்பாடுகள் இவைதான்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் மூண்ட ஏகாதிபத்திய யுத்தத்தின் விசேசம் என்ன? (முதல் உலக யுத்தம் - ஆசிரியர்) ஏகாதிபத்தியத்தின் மேற்கண்ட முரண்பாடுகள் அனைத்தையும் அது ஒன்றாகக் குவித்து முடிச்சு போட்டு சாவா, பிழைப்பா என்ற நிலையை உண்டாக்கியது. அதனால் அது தொழிலாளி வர்க்கப் புரட்சிப் போராட்டங்களை துரிதப்படுத்திய தோடல்லாமல், அவற்றிற்கான வசதியையும் செய்து கொடுத்தது."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(லெனினியத்தின் அடிப்படை அம்சங்கள் - பக்கம் - 6, 7, 8, 9 அழுத்தம் நமது)

உலகந் தழுவிய பொது நெருக்கடியின் போது இந்த முரண்பாடுகள் முற்றிப் பழைய நிலையில் வைத்துக் கொள்ளப்பட முடியாதனவாகி தீர்க்கப்படுவதன் அடிப்படையாக 'வெடிக்கும் நிலையை அடைகிறது.' இதன் விளைவாக உலகம் முழுவதும் ஒளி பொருந்திய புரட்சிகர சூழ்நிலை நிலவுகிறது.

''பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றி லெனினியத் தத்துவம் மூன்று ஆராய்ச்சி முடிவுகளை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

1) ..... முதலாளித்துவ நாடுகளிலே புரட்சி நெருக்கடி முற்றுகிறது; அந்த 'எஜமானர் நாடுகளில்' உள்நாட்டு முனையில், தொழிலாளி வர்க்க முனையில், குமுறி வெடிக்கக் கூடிய அம்சங்கள் பெருகுகின்றன.

2) ...... காலனிய நாடுகளில் புரட்சிகர நெருக்கடி முற்றுகிறது, வெளிநாட்டு முனையில் காலனிய நாடுகளின் முனையில், ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெடிக்கும் அம்சங்கள் பெருகுகின்றன.

3) ... வெவ்வேறு தேசத்து முதலாளிகளுக்கு இடையே உள்ள முனையில்-மூன்றுவது முனையில் - நெருக்கடியை முற்ற வைக்கின்றன.

இது ஏகாதிபத்தியத்தை பலவீனப் படுத்துகிறது. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முதல் இரண்டு முனைகளும் ஒன்றுபடுவதற்கு வசதியாக இருக்கிறது. அதாவது உள்நாட்டில் உள்ள புரட்சிகரமான தொழிலாளி வர்க்கத்தின் முனையும், காலனிய நாட்டில் விடுதலையை எதிர்நோக்கும் மக்கள் முனையும் ஒன்றாக இணைவதற்கு வாய்ப்பாக உள்ளது.

ஆகவே இதிலிருந்து நாம் காணும் மூன்றாவது முடிவு இதுதான்:- ஏகாதிபத்திய ஆட்சியில் யுத்தங்கள் உண்டாவதை தடுக்க முடியாது. ஐரோப்பாவில் நடக்கும் தொழிலாளர் வர்க்கப் புரட்சியும் காலனிய நாடுகளில் நடக்கும் விடுதலைப் புரட்சியும் கூட்டு அணி அமைத்து, ஏகாதிபத்தியத்தின் உலக முனைக்கு எதிராக, ஐக்கியப்பட்ட ஒரு உலகப் புரட்சி முனையாக அமைவதையும் தவிர்க்க முடியாது ''
(ஸ்டாலின் - லெனினியத்தின் அடிப்படை அம்சங்கள் பக் - 42, 43, 44, 45)

உலகப் பொருளாதார நெருக்கடி, பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடிப்பதற்கான சூழ்நிலைகளை உண்டாக்கி, புரட்சிக்கான முன்தேவைகளை அமைத்துக் கொடுக்கிறது. அகநிலை அம்சங்களை சரிவரக் கட்டியெழுப்பும் பாட்டாளி வர்க்கக் கட்சி உள்ளபோது, உலகந்தழுவிய ஏகாதிபத்திய சங்கிலியின் பலவீனமான கண்ணியில் புரட்சி வெடிப்பது சாத்தியமானதே. மேலும் பல்வேறு நாடுகளின் சமூகப் புரட்சியானது உலக சோசலிசப் புரட்சியின் வெற்றியை நோக்கிய படிக்கற்களாகும். அது மட்டுமல்ல முதலில் ஒன்று அல்லது ஒருசில நாடுகளில் புரட்சி நிறைவேற்றப்பட்டு, பின் உலகம் முழுவதும் புரட்சி இறுதி வெற்றி அடையும்வரை ஒவ்வொரு நாடாக படிப்படியாக விஸ்தரிக்கப்படுகிற பாதையையே உலக சோசலிசப் புரட்சி தழுவுகிறது. இதை மார்க்சிய - லெனினியம் தெளிவாகக் கூறியுள்ளது.

உலகப் பொருளாதார நெருக்கடியின் விளைவாக முதலாவது உலகயுத்தம் வெடித்தது. உலகின் முதலாவது சோசலிசத் தாயகம் நிறுவப்பட்டு ருஷ்ய பாட்டாளி வர்க்கம் தோழர் லெனின் தலைமையில், ருஷ்யாவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டது. ஐரோப்பாவில் பல்வேறு நாடுகளில் பல்வேறு நிலைமைகளில் வெடித்த புரட்சிகள், இரண்டாவது அகிலத்தின் துரோகத் தலைமையினால் துன்பகரமான தோல்வியைச் சந்தித்தன.

1917ம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகள் புரட்சிகர எழுச்சிகள் நீடித்தன. ஏகாதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பத்தியத்துக்கு மூச்சு விடுவதற்கு ஒரு இடைவெளி கிடைத்தது. அது முதலாளிய நாடுகளிலுள்ள புரட்சிகர இயக்கங்களையும், காலனிகளில் ஏற்பட்ட எழுச்சியையும் ஒடுக்கத் தொடங்கியது.

ஏகாதிபத்தியமானது முதல் உலக யுத்தத்திற்குப் பின் ஐரோப்பாவில் சோசலிசப் புரட்சிகளையும், காலனி நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டங்களையும் ஒடுக்கிய பிறகு சக்தியைச் சேமித்துக் கொண்டு படிப்படியாக யுத்தத்திற்கு முந்தைய நிலையைவிட உயர்நிலைக்கு வளர்ந்தன. புதிதாக வளர்கின்ற நாடுகளில் முதலாளியம் வேகமாக வளர்ந்த போதிலும் ஏற்கனவே வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடுகளில் இந்த வளர்ச்சி தேக்கமடைந்தது. இந்நிலையில், முதல் உலக யுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட இந்த தற்காலிக வளர்ச்சியானது ஏகாதிபத்தியம் செத்துக் கொண்டிருக்கும் முதலாளியம் தான் என்ற பொது வரையறுப்பை மறுத்துவிட முடியாது என லெனின் தெளிவுபடுத்தினர்.

இந்த ஆய்வை உறுதிப்படுத்தும் வகையில் குறுகிய காலத்துக்குள்ளேயே ஏகாதிபத்தியத்தின் எல்லா முரண்பாடுகளும் வளர்ச்சியடைந்தன. 1930ம் ஆண்டு வாக்கில் உலக ஏகாதிபத்தியமானது காலனிகளின் மறுபங்கீட்டுக்காக மற்றொரு உலக யுத்தத்தில் ஈடுபடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏகாதிபத்தியத்தின் இரு தரப்புக்களுமே அந்த யுத்தத்தை சோவியத் யூனியனுக்கு எதிராகத் திருப்ப தங்களால் இயன்றதனைத்தையும் செய்தன. ஆனால் தோழர் ஸ்டாலின் தலைமையில் சோவியத் யூனியன் மேற்கொண்ட சரியான கொள்கைகளினாலும், மூன்றாவது அகிலத்தின் சரியான போர்த்தந்திரங்களினாலும் ஏகாதிபத்தியவாதிகள் தங்களது நோக்கத்தில் வெற்றிபெற முடியவில்லை 1930ம் ஆண்டு வாக்கில் ஏகாதிபத்திய வாதிகளிடையேதான் யுத்தம் வெடித்தது.

இரண்டாவது பொது நெருக்கடியுடன், இரண்டாவது புரட்சிகளின் சுற்றும் தொடக்கி வைக்கப்பட்டது. இந்த அலை 1971, 1975 வரை நீடித்தது. சீனாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பாட்டாளிவர்க்கப் புரட்சி வெற்றிபெற்றது. காலனிய, அரைகாலனிய நாடுகளில் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான மக்கள் ஜனநாயகப் புரட்சிகள் நீடித்தன. இவ்வாறு உலக சோசலிசப் புரட்சி பெரு வெற்றிகளைக் குவித்துக்கொண்டு முன்னேறலாயிற்று. உலக ஏகாதிபத்திய முகாம் தளர்வுற்று வந்தது.

## உலக கம்யூனிச இயக்கத்தின் பின்னடைவு

திரிபுவாதத்தை எதிர்த்த விட்டுக் கொடுக்காத போராட்டம்.

மூன்றாவது பொது நெருக்கடி ஆழமாகிச் சென்றுகொண்டு புரட்சிகர சூழ்நிலை கனிந்து வருவதும், மூன்றாவது உலக யுத்தத்திற்கான ஆபத்து இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கும் காலத்தில் தோழர் மாவோவின் மறைவுக்குப் பின் சீனத்தில் முதலாளியம் மீட்டமைக்கப்பட்டது. உலக கம்யூனிச இயக்கத்தில் நேர்ந்த மூன்றாவது பாரிய பின்னடைவாகும்.

முதலாவது பின்னடைவு இரண்டாம் அகிலத்தின் தகர்வுடன், முதலாவது உலக யுத்தத்தின் ஆரம்ப அறிகுறிகளின் தொடக்கத்தில் நேர்ந்தது. பிற்பாடு Kautsky இரண்டாவது அகிலத்தின் 90 வீதமான கட்சிகளை திரிபுவாத சாக்கடையில் மூழ்கவைத்த போது, லெனினும் போல்ஷ்விக் கட்சியும் திரிபுவாதத்துக்கெதிரான போராட்டத்தை உயர்த்திப்பிடித்து புரட்சிகர மார்க்சியத்தை பாதுகாத்ததுடன், மூன்றாவது அகிலத்தை அமைத்து உலகமுழுமையும் கம்யூனிச சக்திகளை ஒழுங்கமைத்தனர்.

www.tamilarangam.net

சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தில் இரண்டாவது பின்னடைவு தோழர் ஸ்டாலினின் மறைவுக்குப்பின் ஏற்பட்டது. அப்பொழுது குருஷ்ஷேவ் மார்க்சியத்தின் புரட்சிகரக் கோட்பாடுகளின் மீது, தனது 'மூன்று சமாதான'க் கோட்பாட்டை வைத்து தாக்குதலை தொடுத்ததுடன் உலகின் முதலாவது பாட்டாளிவர்க்கத் தாயகமான சோவியத் ருஷ்யாவில் முதலாளியத்தை மீட்டமைத்ததுடன் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் 70 வீதமான கட்சிகளை திரிபுவாதச் சேற்றில் இழுத்துக்கொண்டான். அக்காலத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் மாவோவின் வழிகாட்டலின் கீழ் திரிபுவாதத்திற் கெதிரான போராட்டத்தில் புரட்சிகர மார்க்சியத்தில் உறுதியாக நின்றனர். 'மகத்தான விவாத'த்தின் மூலம் குருஷ்ஷேவின் அழிவுப்பாதையை அம்பலப்படுத்தினர். 1963 ஜூன் 14ம் திகதி 'சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் திசைவழி குறித்த பரிந்துரை' என மகுடமிடப்பட்ட பகிரங்க கடிதத்துடன் முன்னேக்கி செல்வதற்கான மார்க்கத்தை முன்வைத்தனர்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்துக்கு மூன்றாவது பாரிய பின்னடைவு தோழர் மாவோவின் மரணத்திற்குப் பின்னே நேர்ந்தது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை டெங்சியாவோ பிங் தலைமையிலான முதலாளியப் பாதையாளர்களால் கைப்பற்றப்பட்டது. அவர்கள் மார்க்சியத்தின் புரட்சிகரக் கோட்பாடுகளை தூக்கியெறிந்துவிட்டு சீனவில் முதலாளியத்தை அமைப்பதற்கான பாதையில் செல்வதுடன், உலகம் பூராவுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளை திரிபுவாதச் சேற்றிற்கு இழுத்துச் செல்ல வெறித்தனமாக முயல்கின்றனர். இன்று சர்வதேசப் பாட்டாளிவர்க்க இயக்கம் முன்னே இரண்டு விதமான நவீன திரிபுவாத ஓட்டங்களை எதிர்த்துப் போராடி புரட்சிகர மார்க்சியக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடித்து பாதுகாக்க வேண்டிய பணியை எதிர் கொள்கின்றது.

இன்று இரண்டு சர்வதேச திரிபுவாத மார்க்கங்கள் நிலவுகின்றன. இந்த இரண்டு சிறப்பான திரிபுவாத மார்க்கங்களுக்கு எதிராக போராடுவதன் மூலமே சர்வதேச பாட்டாளி வர்க்க புரட்சி இயக்கம் வளர்ச்சியடையவும், முன்னேறவும் முடியும்.

முதலாவதும் மிகுந்த செல்வாக்குடையதுமான நவீன திரிபுவாத மார்க்கம் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மையத்திலிருந்து வெளிப்படுகிறது. நவீன திரிபுவாதியான டெங்கும்பலால் தலைமை தாங்கப்படும், சீன கம்யூனிஸ்ட் கட்சி சீனவில் முதலாளியத்தை மீட்டமைப்பதுடன் திருப்தியடையாமல் உலகம் பூராவுமுள்ள மார்க்சிய லெனினிசக் கட்சிகளை திரிபுவாத நிலைப்பாட்டை எடுக்க உதவி செய்வதற்கு ஊக்கமான தலையீட்டை மேற்கொள்கின்றது. சர்வதேசிய திரிபுவாதத்தின் மையங்களில் பெரியதாக சீனக்கம்யூனிஸ்ட் கட்சி செயற்பட்டு வருகிறது.

திரிபுவாதத்தின் இரண்டாவது மையம் 'புரட்சிகர சர்வதேசிய இயக்கம்' (Revolutionary International Movement) இது அமெரிக்காவிலுள்ள 'புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி' யாலுல் தலைமை தாங்கப்படுவதுடன் பழையனவும் நீண்ட காலத்திற்கு முன்னரே நிராகரிக்கப்பட்டதுமான 'சார்பு நிலை தத்துவங்களை' புதிய வடிவங்களில் முன்வைக்கிறது. இந்த 'தத்துவம்' முக்கியமாக மூன்றும் மண்டல நாடுகளில் அரை நிலப்பிரபுத்துவத் தன்மையை மறுதலிப்பதுடன், அவற்றை சார்புநிலை முதலாளிய நாடுகளாக (dependent capitalist countries) வர்ணிக்கின்றது. இந்தத் தத்துவம் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இருந்த 'புதிய இடது' (New Left) களால் 1970 களின் ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டபோது மார்க்சிய - லெனினிய வாதிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது, ஆகும். இன்று புரட்சிகர சர்வதேசிய இயக்கம் (RIM) புதிய வடிவங்களில் வேடமிட்டு இதையொத்த தத்துவங்களையே முன் வைக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்த இரண்டு திரிபுவாத மையங்களுக்குஎதிரான சமரசஞ் செய்து கொள்ளாத சித்தாந்தப் போராட்டம் இல்லாவிட்டால் சர்வதேச பாட்டாளிவர்க்க இயக்கம் ஒரு அடியைக் கூட முன்னேக்கி வைப்பது சாத்தியமில்லை.

உலக சோசலிசப் புட்சிக்கான புரட்சிகரமான சூழல் நிலவிவரும் அந்த காலத்தில், மூன்ருவது உலகயுத்தமொன்றிக்கான தயாரிப்புக்களை ஏகாதிபத்தியங்கள், குறிப்பாக மேல்நிலை வல்லரசுகளான ருஷ்ய சமூக ஏகாதிபத்தியமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் செய்து வரும் இன்றைய காலத்தில் உலக சோசலிசப் புரட்சியின் நிலை அக்டோபர் சோசலிசப் புரட்சிக்கு முந்தைய நிலையை ஒத்ததாகவே உள்ளது. முதலாம் இரண்டாம் பொது நெருக்கடிகளை அடுத்து சோசலிச தளங்களை அமைத்து, அவற்றை உலக சோசலிசப் புரட்சிக்கான செயலூக்க மிக்க நெம்பு கோலாக பயன்படுத்திக் கொண்டும் முன்னேறிய உலக சோசலிசப் புரட்சி, உலக சோசலிச தளங்களான ருஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதலியவற்றில் குருச்சேவின் திரிபுவாத மார்க்கத்தையடுத்து முதலாளியம் மீட்டமைக்கப்பட்டு இழந்தபோது பின்னடைவை அடைந்தது. மேலும எஞ்சியிருந்த ஒரே ஒரு சோசலிச தளமான சீனவிலும் முதலாளியம் மீட்டமைக்கப்பட்டதுடன் எல்லாத் தளங்களையும் இழந்துவிட்டது. இது மிகப் பாரிய பின்னடைவே. ஆயினும் ஏகாதிபத்தியத்தின் உள் முரண்பாடுகளால் உலக சோலிசப் புரட்சி, ஏகாதிபத்தியத்தின் பலவீனமான கண்ணியில் ஒன்று அல்லது ஒரு சில நாடுகளில் வெடித்து, முன்னேறுவது சர்வநிச்சயமானதே.

ஏகாதிபத்தியங்கள் தமது சந்தைகளை மறுபங்கீடு செய்வதற்கு உலக யுத்தமொன்றுக்கு தயார் செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். ஆனல் உலக யுத்தத்திற்கு தயார் செய்வதாயின் உலக மக்களை ஏகாதிபத்திய யுத்தத்தை புனிதமான தேசிய யுத்தமாக கருத வைக்க வேண்டும். அப்போது தான் ஏகாதிபத்திய அமைப்பிற்கு அழிவின்றி சந்தைகளைக் கைப்பற்றிக் கொள்ள முடியும். அல்லாவிடில் ஏகாதிபத்திய அமைப்பு முறைக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து, உலக சோசலிசப் புரட்சிப் பாதையில் முன்னேறுவர். எனவே 'உள்நாட்டு முனையிலும்' 'காலனி - அரைக் காலனி நாட்டு முனைகளிலும்' தமது அழிவை உறுதி செய்யும் முரண்பாடுகளை பயன்படுத்தி உலக சோசலிசப் புரட்சியை முன்னெடுக்க திடங்கொண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளை அடக்கு முறையினல் அழித்துவிட திட்டம் வகுக்கின்றனர். அதுமட்டுமன்றி கம்யூனிஸ்ட் கட்சிகளை பிளவுபடுத்துவது, பல்வேறுவகையால திரிபுவாதங்களையும் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் நுழைத்து தவருக வழிநடத்தி உலக சோசலிசப் புரட்சியை பின்னடைய வைக்கத் திட்டமிடுகின்றனர். ஏகாதிபத்தியத்தின் இத்தகைய சதிச்செயல்களுக்கு இடமளிக்காது ஒன்று பட்ட பாட்டாளி வர்க்கக் கட்சியை கட்டியமைப்பதன் மூலமே ஒரு நாட்டில் புரட்சி வாகைசூட முடியும்.

பாட்டாளி வர்க்கக் கட்சிகள் விரும்புகிற ஒரேயொரு யுத்தம் உள்நாட்டு யுத்தமே. ஏகாதிபத்திய யுத்தம் வெடிக்குமானல் அதைப் புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தினல் முறியடித்து உள்நாட்டில் பாட்டாளி வர்க்க ஆட்சியை அமைப்பதே பாட்டாளி வர்க்கக் கட்சியின் பணி. இதை விடுத்து ஏகாதிபத்தியங்களின் நாடு பிடிக்கும் போரை, சோசலிச தாய் நாட்டை பாதுகாக்கும் யுத்த மாக்க சோவியத் சமூக ஏகாதிபத்தியம் முயல்கிறது. இதன் பின்னே பல்வேறு குட்டி முதலாளிய, முதலாளிய கட்சிகளும் நமது நாட்டில் இழுபடுகின்றன. பல்வேறு சந்தர்ப்பவாதத் தத்துவங்களையும் கூறி வருகின்றனர்.

எல்லா விதமான சந்தர்ப்ப வாதங்களையும் எதிர்த்த போராட்டத்தினூடாகவே

www.tamilarangam.net

பாட்டாளி வர்க்கம் நிலை தளராது முன்னேற முடியும். லெனின் கூறியது போல "The Fight against imperialism is a sham and humbug unless it is inseparably bound up with fight against opportunism" (ஏகாதிபத்தியம் முதலாளியத்தின் உச்சக் கட்டம்)

ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, ஏகாதிபத்திய யுத்தத்தை 'தந்தையர் நாட்டைப் பாதுகாக்கும் புனிதமான தேசிய யுத்தமாக வர்ணித்து இரண்டாம் அகிலச் சந்தர்ப்பவாதிகளின் துரோகத்தையும் எதிர்த்து போராடியதிற்கான தயாரிப்புக்கள் பற்றி ஸ்டாலின் கூறுவது என்ன? "... இரண்டாவது அகிலத்தின் நடவடிக்கைகள் அதன் வேலைமுறை அனைத்தையும் திருத்தியமைப்பது அவசியமானது. கோழைத்தனமான பிதற்றல், குறுகிய மனப்பான்மை, அரசியல் சதியாலோசனைகள், கட்சி மாறிச்செல்லும் துரோகம், குறுகிய இனவெறி, சமூக சாத்வீக வாதம் முதலியவற்றை அதிலிருந்து விரட்ட வேண்டியது மிகமிக அவசியமாயிற்று. இரண்டாவது அகிலத்தின் ஆயுதச் சாலை பூராவையும் பரிசோதித்து துருப்பிடித்தவற்றை தூக்கியெறிந்து, காலத்திற்கு ஒவ்வாதவற்றை கழித்துவிட்டு, புதிய ஆயுதங்களை வார்க்க வேண்டியது அவசியமாயிற்று. இந்தப் பூர்வாங்க வேலையைச் செய்து முடிக்காமல், முதலாளித்துவத்தை எதிர்த்து யுத்தம் தொடுக்க முனைவதில் பயனில்லை. இந்த வேலையைச் செய்து முடிக்காவிட்டால் தொழிலாளி வர்க்கம் வருங்காலப் புரட்சிப் போராட்டங்களில் போதிய அளவு ஆயுதமில்லாத ஆபத்தான நிலைக்கு ஆளாக நேரிடலாம். நிராயுத பாணியாக நிற்கக்கூடிய கதி கூட ஏற்படலாம்."

(லெனினியத்தின் அடிப்படை அம்சங்கள் — பக்கம் 22 - அழுத்தம் நமது)

ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போட்டி இரண்டு மேல்நிலை வல்லரசுகளாலும் மூன்றாவது உலகயுத்தத்திற்கான தயாரிப்பாகவளர்ந்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் சோவியத் ஏகாதிபத்தியம் ஆகிய இரண்டு மேல் நிலை வல்லரசுகளிலும் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் சந்தைகளைக் கைப்பற்றும் நோக்குடன், இராணுவப் பொருளாதாரத்தை மேலும் வளர்த்து, 70 களின் தேசிய விடுதலைப் போராட்டங்களை தனக்கு சார்பாக மாற்றியமைத்து யுத்த தந்திர ரீதியான தாக்குதல் நிலைக்கு வளர்ந்துள்ளது. இது காலனி, அரைக்காலனி நாடுகளில் நடைபெறும் தேசிய விடுதலை யுத்தங்களை தனது ஏகாதிபத்திய யுத்தத்தின் அங்கங்களாக மாற்ற முற்படுகிறது. இதன் பொருட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுள் திரிபுவாத மார்க்கங்களையும், தேசிய விடுதலை இயக்கங்களுள் குட்டி பூர்சுவா சித்தாந்தங்களையும் திணித்து அவற்றின் தேசியவாத நிலைப்பாட்டை சீரழித்து, தனது நாடு பிடிக்கும் யுத்தத்தின் கருவிகளாக மாற்ற முற்படுகிறது. குட்டி பூர்சுவா சித்தாந்தப் பிடிப்பிலுள்ள தேசிய விடுதலை இயக்கங்களும் கூட இதனை நியாயப் படுத்தவும், சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் நாடு பிடிக்கும் யுத்தத் தேர்க்காலில் தமது 'தந்தையர் நாட்டை விடுவிக்கும் யுத்தம்' என்ற கோசத்தைப் பிணைத்துள்ளனர். சமூக ஏகாதிபத்தியம் பல்வேறு வழிகளால் தேசிய விடுதலை இயக்கங்களுக்குள் ஊடுருவுகிறது. கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள்ளும் நுழைகிறது. 'ஏதாவது ஒரு வழியாக இந்த எல்லாக் குட்டி முதலாளியக் குழுக்களும் கட்சிக்குள் நுழைகின்றன. நுழைந்து, தயக்க உணர்ச்சியையும், சந்தர்ப்ப வாதத்தையும், மனச் சோர்வையும் நிச்சயமற்ற போக்கையும் விதைக்கின்றன. கோஷ்டிப் போக்குக்கும், சிதைக்கும் போக்கிற்கும் இவர்களே பிரதான ஊற்றுக்கண் ஆவர். கட்சிக் குள்ளிருந்து கொண்டே அமைப்புக் குலைவு, அமைப்பில் பிளவு உண்டாக்கும் போக்கிற்கு இவர்களே பிரதான ஊற்றுக்கண் ஆவர். தங்களுடைய பின்னணியில் இப்படிப்பட்ட 'நேச சக்திகளை' வைத்துக் கொண்டு ஒருவன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதென்றால், இருதலைக் கொள்ளியுள் எறும்பு போல ஆபத்தில் சிக்கிக் கொள்ள வழி செய்து கொள்வதாகும். ஆகவே இந்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர்வழிகளை எதிர்த்து ஈவிரக்கமற்ற போராட்டத்தை நடத்துவதென்பது, ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் வெற்றிகரமான போராட்டத்திற்கு ஒரு முன்னிபந்தனையாகும்.'

(ஸ்டாலின் - அதே நூல் பக் 198)

சோவியத் சமூக ஏகாதிபத்... அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆகியவற்... தேய நோக்கங்களை அம்பலப்படுத்துவ... குறிப்பாக சோவியத் சமூக ஏகாதிப... த்தினை அம்பலப்படுத்துவது எமது பணி... ம்.

# II தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சி ...

## உலக சோசலிசப் புரட்சியின் ப...தியே

பின்தங்கிய நாடுகளான காலனி, அரைக்காலனி நாடுகளில் இன்று போரிட்டு வரும் மக்கள் ஜனநாயகப் புரட்சிகள் அனைத்தும் உலக சோசலிசப் புரட்சியின் அங்கங்களே. உலகந் தழுவிய ஏகாதிபத்திய அமைப்பின் காலனி — அரைக்காலனி நாட்டு முனைகளில் உள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு அம்சங்கள் பெருகுவதன் வாயிலாக ஏகாதிபத்திய எதிர்ப்பு வெடிக்கும் நிலையை அடைவதையே இவை குறிக்கின்றன. இந்த நாடுகளில் இன்னமும் முதலாளிய ஜனநாயகப் புரட்சிகள் நிகழவில்லை. இந்த நாடுகளில் உள்ள தேசிய முதலாளிய வர்க்கம் பலவீனமானதாக உள்ளதால் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிக்கு தலைமை தாங்க முடியாத நிலையில் உள்ளது. இந் நிலையில் இந் நாடுகளில் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சி, பழைய வகையினதான முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் பகுதியாக வன்றி, புதிய வகையான ஜனநாயகப் புரட்சியாக, உலக சோசலிசப் புரட்சியின் அங்கமாக அமைகிறது. இதுவே புதிய ஜனநாயகப் புரட்சி.

"... ஏகாதியம் என்றால் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஏராளமான காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் வசிக்கின்ற கோடானுகோடி மக்களை வெட்கங்கெட்டத்தனமாக சுரண்டுவதும் மிக மிக அரக்கத்தனமாக ஒடுக்குவதுமாகும். இந்த சுரண்டலின் மற்றும் ஒடுக்கலின் நோக்கம் கொள்ளைக் காரத்தனமாக லாபங்களைக் பிழிந்து மூட்டை கட்டிச் ...கசக்கிப் ...கும். ஆனால் இந்த நாடுகளை... ...ல்வதா கச் சுரண்டுவதற்காக, இ... ...திகமா களில் புகை வண்டிப் ... நாடு தொழிலகங்கள் மற்றும் ...தகள், தொழிற்சாலைகள் மற்றும் ...லைகள், ...வணிக மையங்கள் ஆகியவற்றை ...வது கட்டாயமாகிறது. அவசியத் ... நிர்ப் பந்தத்தால் கையாளும் இந் ...கொள் கையின் தவிர்க்க வியலாத ...விளைவு என்னவென்றால், இயந்திரத் ...ாழிலா ளிகளுடைய வர்க்கம் உத... ...கிறது; சுதேச படிப்பாளிக் கூட்டம் ...தோன்று கிறது; தேசிய உணர்வு ...படை... கிறது; விடுதலை இயக்கம் ...கிறது. இது முழுக்க முழுக்க உண்... என் பதை எல்லாக் குடியேற்ற ...நாடுகளி லும் சார்பு நாடுகளிலும் ...ந்திருக் கும் புரட்சி இயக்கங்கள் ... நிரூ பிக்கின்றன. இந்தச் சூழ்... பாட் டாளிவர்க்கத்திற்கு முக... ...த்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் ...காலனி நாடுகளையும், சார்பு நாடுக... ...ம் ஏகா திபத்தியத்தின் பின்புலமாக ...ட்டாளி வர்க்கப் புரட்சிக்கு பின்புல... ஆக்கு வதன் மூலம் இது முதல... ...பத்தின் நிலையை மிகவும் பலவீனப்... ...தி முற் றிலும் மாற்றியமைத்து ...றது." (அதே நூல் பக்கம் 8, 9)

இக் சூழ்நிலையில் அரைக்க... ...த்துவ- அரை நிலப் பிரபுத்துவ நாட... இலங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையில் நடந்து வரும் தமிழீழ புதிய ஜன நாயகப் புரட்சி உலக சோசலிசப் புரட்சியின் அங்கமாகவே அமைய முடியும். மூன்றாவது உலகப் பொது நெருக்கடியும், உலக யுத்த அபாயமும் வளர்ந்துவரும் இன்றைய காலகட்டத்தில், உலக சோசலிசப் புரட்சியின் அடுத்த சுற்று ஆரம்பமாகவுள்ளது. புரட்சிகரமான காலகட்டத்தில் நிகழவுள்ள தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சி வேறு பாதையில் செல்ல முடியாது. இத்தகைய சூழலில் தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சி புரட்சியின் நியதிகளுக்கு அமைவாகவும், ஜனநாயகப் புரட்சியின் நியதிகளுக்கு அமைவாகவும் நடாத்தப்படவேண்டியதுடன், தமிழீழத்தின் குறிப்பான சூழ்நிலைகளும் கவனத்தில் கொள்ளப் படவும் வேண்டும். அப்போதுதான் நாம் எல்லா விதமான சந்தர்ப்பவாதங்களுக்கும், வழிவிலகல்களுக்கும் உள்ளாகாது முன்செல்லுவோம்.

- எல்லாவிதமான சந்தர்ப்பவாதங்களையும் திரிபு வாதங்களையும் எதிர்த்து சமரசமற்ற போராட்டத்தை நடத்துவோம்!
- ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்போம்!!
- ஏகாதிபத்தியம் அழியட்டும்!
- வெல்க உலக சோசலிசப் புரட்சி!!

## சந்தர்ப்ப வாதத்தின் சித்தாந்த அடிப்படைகள் பற்றி லெனின்

வர்க்க சமரச நடைமுறை, சோசலிசப் புரட்சிக்கருத்தையும் புரட்சிகர போராட்ட வழிமுறைகளையும் விலக்குதல், முதலாளித்துவ தேசிய வாதத்தை தழுவுதல்: தேசிய இனம், நாட்டினம் என்பவற்றின் எல்லைக் கோடுகள் வரலாற்றில் தற்காலிகமானவையே என்ற உண்மையைப் பாராமல் விடுவது, முதலாளியச் சட்டவியலை வழிபடுவது, பரந்துபட்ட பொதுமக்கள் (அதாவது குட்டி பூர்சுவாக்கள்) ஒதுக்கி விடுவார்களோ என்று அச்சத்தில் வர்க்க நிலைப்பாட்டையும், வர்க்கப் போராட்டத்தையும் துறப்பது — இவை சந்தேகத்திற்கிடமின்றி சந்தர்ப்ப வாதத்தின் சித்தாந்த அடிப்படையாகும்.

(லெனின் நூல் தொகுப்பு பாகம் 7 பக் . 48)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே யுத்தங்கள் தவிர்க்க முடியாதவை

**J. V. ஸ்டாலின்**

இரண்டாவது உலக யுத்தத்திலிருந்து புதிய சர்வ தேசிய சூழ்நிலைகளின் வளர்ச்சியின் காரணமாக முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே யுத்தங்கள் தவிர்க்கமுடியாதவை என்பது மாறிவிட்டது என்று சில தோழர்கள் கருதுகிறார்கள். முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே உள்ள முரண்பாடுகளை விட சோசலிச முகாமிற்கும் முதலாளித்துவ முகாமிற்கும் இடையே உள்ள முரண்பாடுகள் மிகவும் கூர்மையாக உள்ளன என்று அவர்கள் கருதுகிறார்கள். பிற முதலாளித்துவ நாடுகள் தங்களுக்குள் யுத்தத்திற்குச் செல்வதையும், ஒன்றுக்கொன்று பலவீனப் படுத்துவதையும் தடுக்கக்கூடிய வகையில் அமெரிக்கா அவற்றை தனது ஆட்சிக்குள் தேவையான அளவிற்குக் கொண்டுவந்திருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். மறுபடியும் முதலாளித்துவ நாடுகள் ஒன்றுடன் ஒன்று யுத்தத்தில் ஈடுபடக் கூடிய அபாய முயற்சியில் இறங்காமல் இருப்பதற்கு தேவையான அளவிற்கு இரண்டு உலக யுத்தங்களாலும் அவை மொத்த முதலாளித்துவ உலகிற்கு ஏற்படுத்திய சேதங்களாலும் முன்னிலையில் உள்ள முதலாளித்துவ மனங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன என்றும், இவை காரணமாக முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே யுத்தங்கள் இனி தவிர்க்க முடியாதவை அல்ல என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

இந்தத் தோழர்கள் தவறாகப் புரிந்துள்ளார்கள். இவர்கள் மேலே வந்து செல்கின்ற வெளிப்படையான நிகழ்வைப் பார்க்கிறார்கள்; ஆனால் வெளிப்படையாகக் கண்ணுக்குத் தெரியாமல் இதுவரை செயல்பட்டுக் கொண்டு அதே சமயத்தில் வளர்ச்சிகளின் போக்கைத் தீர்மானிக்கின்ற மிகப் பெரிய சக்திகளை அவர்கள் பார்க்கவில்லை.

வெளிப்படையாகப் பார்க்கும்போது, ஒவ்வொன்றும் ''நன்றாகவே செல்வதாக'' தோன்றும்: மேற்கு ஐரோப்பா, ஜப்பான், மற்றும் பிற முதலாளித்துவ நாடுகளை பங்கீட்டு முறையில் (Ration) அமெரிக்கா வைத்துள்ளது; ஜேர்மனி (மேற்கு), பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகியவை அமெரிக்காவின் பிடியில் விழுந்திருக்கின்றது; பணிவாக அதனுடைய கட்டளைகளுக்கு உட்பட்டு வருகின்றன. ஆனால் பொருட்கள் ''எல்லா காலங்களுக்கும்'' ''நல்லதாகவே செல்வதில்'' தொடர முடியும் என்று நினைப்பதும் இந்த நாடுகள் முடிவின்றி அமெரிக்காவின் ஆதிக்கத்தையும் ஒடுக்குமுறையையும் பொறுத்துக்கொள்ளும் என்றும், அவை அமெரிக்காவின் கட்டுத்தளையிலிருந்து தளர்த்திக் கொண்டு சுதந்திரமான வளர்ச்சிப் பாதையை மேற்கொள்ள முயற்சிக்காது என்று நினைப்பதும் தவறானதாக அமையும்.

முதலில், பிரிட்டன், பிரான்ஸ், ஆகியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். சந்தேகமின்றி, அவை ஏகாதிபத்திய நாடுகள் ஆகும். சந்தேகமின்றி, மலிவான மூலப் பொருட்களும் சந்தைகளை பெறுவதும் அவற்றிற்கு மிக அவசியமானதாகும் ''மார்ஷல் திட்ட உதவி'' என்பதின் மறைவில் அமெரிக்கர்கள் பிரிட்டன் பிரான்ஸ் ஆகியவற்றின் பொருளாதாரத்தில் ஊடுருவுகின்ற,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவற்றை அமெரிக்கப் பொருளாதாரத்தின் துணைப் பிரிவுகளாக மாற்ற முயற்சிக்கின்ற அமெரிக்க மூலதனம் பிரிட்டன், பிரெஞ்சுக் காலனிகளில் மூலப் பொருள்களேயும், சந்தைகளேயும் கைப்பற்றுகின்ற. அதன் மூலம் பிரிட்டன், பிரெஞ்சு முதலாளிகளின் உயர்ந்த லாபத்திற்கு சேதம் விளேவிக்க சதி செய்கின்ற இன்றைய நிலேயை அவை (பிரிட்டனும், பிரான்சும் மொ. பெ) முடிவின்றி பொறுத்துக் கொள்ளும் என்று கொள்ள முடியுமா? முதலாளித்துவ பிரிட்டனும், அதன் பின் முதலாளித்துவ பிரான்சும் இறுதியில் அமெரிக்காவின் தழுவலிலிருந்து உடைத்துக் கொண்டு, ஒரு சுதந்திரமான நிலேயையும், உயர்ந்த லாபத்தையும் பெறுவதற்காக அதனுடன் மோதலில் இறங்குவதற்கு கட்டாயப்படுத்தப்படும் என்று கூறுவது உண்மையாகாதா?

வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளான ஜெர்மனி (மேற்கு), ஜப்பான் ஆகியவற்றிற்கு நாம் செல்லலாம். இந்த நாடுகள் இப்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சப்பாத்துக்காலின் கீழ் சிக்கி துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய தொழிற்சாலே, விவசாயம், வியாபாரம், உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை அவர்களுடைய மொத்த வாழ்க்கை எல்லாமே அமெரிக்காவின் ''ஆட்சியால்'' கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனல் நேற்றுத்தான் இந்த நாடுகள் மிகப் பெரிய ஏகாதிபத்திய சக்திகளாகவும், ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பிரிட்டன்' அமெரிக்கா பிரான்ஸ் ஆகியவற்றின் அடித்தளத்தை உலுக்கிக் கொண்டிருந்தவையாகவும் இருந்தன. இந்த நாடுகள் மறுபடியும் தங்களுடைய காலில் எழுந்து நிற்க முயற்சிக்காது என்றும் அமெரிக்க ''ஆட்சியை'' தகர்த்தெறிந்து, சுதந்திர வளர்ச்சியை நோக்கி தங்கள் பாதையைக் கொண்டு செல்லாது என்றும் சிந்திப்பது அதிசயங்களில் நம்பிக்கை கொள்வதாக அமையும்.

முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே உள்ள முரண்பாடுகளேவிட முதலாளித்துவத்திற்கும் சோசலிசத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் பலமாக இருக்கின்றன என்று கூறப்பட்டுள்ளது தத்துவார்த்த அடிப்படையில், நிச்சயமாக, இது உண்மை. இது இன்று மட்டும் உண்மையல்ல; இரண்டாவது உலகயுத்தத்திற்கு முன்பே அது உண்மையாக இருந்தது. மேலும் அது முதலாளித்துவ நாடுகளின் தலேவர்களாலும் ஏறக்குறைய உணரப்பட்டு இருந்தது. இருப்பினும் இரண்டாவது உலக யுத்தமானது சோவியத் ரஷியாவுடன் உள்ள ஒரு யுத்தமாக தொடங்கவில்லே; ஆனல் முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே உள்ள யுத்தமாகத்தான் தொடங்கியது. ஏன்?

முதலாவதாக, ஒரு சோசலிச நாடாக இருக்கிற சோவியத் ரஷியாவுடன் உள்ள யுத்தமானது, முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான யுத்தத்தை விட மிக அபாயமானது ஆகும்; ஏனென்றால் முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான யுத்தமானது சில முதலாளித்துவ நாடுகளின் மேலாதிக்கமானது பிற முதலாளித்துவ நாடுகளின் மீது நிறுவப்படுகின்ற பிரச்சனேயை முன் வைக்கின்ற அந்த சமயத்தில், சோவியத் ரஷியாவுடன் உள்ள யுத்தமானது நிச்சயமாக முதலாளித்துவம் நிலவுவது பற்றிய பிரச்சனேயையே முன்வைக்கிறது. இரண்டாவதாக, முதலாளித்துவ வாதிகள் ''பிரச்சார'' நோக்கத்திற்காக கூறுகிற சோவியத் யூனியன் ஆக்கிரமிப்புத் தன்மையுடையது என்பதை அவர்களே நம்புவது கிடையாது; ஏனென்றல் சோவியத் யூனியனின் சமாதானக் கொள்கை பற்றி அவர்கள் உணர்ந்துள்ளார்கள்; அது தானகவே முதலாளித்துவ நாடுகளேத் தாக்காது என்று தெரிந்துள்ளார்கள்.

சில தோழர்கள் ஜப்பானும் ஜெர்மனியும் நிச்சயமாக செயலில் இறங்காது என்று இப்போது நம்புவதுபோல முதல் உலகயுத்தத்திற்கு பின்பும் ஜெர்மனி நிச்சயமாக செயலில் இறங்காது என்று நம்பப்பட்டது. அப்போது கூட, அமெரிக்காவானது ஐரோப்பாவை பங்கீட்டு முறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில் (Ration) வைத்திருக்கிறது. என்றும் ஜெர்மனி ஒருபோதும் மறுபடியும் தன்னுடைய காலில் எழுந்திருக்கமுடியாது என்றும், முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே இனி யுத்தங்களே கிடையாது என்றும் பத்திரிகைகளில் சொல்லவும், கூக்குரலிடவும் பட்டது இருந்தும்கூட, ஜெர்மனி தன்னுடைய தோல்விக்குப் பின் பதினைந்து அல்லது இருபது ஆண்டுகால கட்டத்தில் தளைகளை உடைத்தெறிந்து, சுதந்திர வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டு மறுபடியும் தன் காலில் எழுந்து நின்றது.

மேலும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் ஜெர்மனி பொருளாதார ரீதியாக புனர் நிர்மாணம் பெறவும், தன்னுடைய பொருளாதார யுத்தத் திறமையை உயர்த்தவும் ஜெர்மனிக்கும் உதவியவர்கள் பிரிட்டன், அமெரிக்காவைத் தவிர வேறு யாரும் அல்ல. அமெரிக்காவும் பிரிட்டனும் ஜெர்மனியின் பொருளாதார புனர் நிர்மானத்திற்கு உதவியபோதும், ஒரு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட ஜெர்மனியை சோவியத் யூனியனுக்கு எதிராக நிறுத்தவும், அதனை சோசலிச பூமிக்கு எதிராக பயன்படுத்தவும் வேண்டும் என்ற ஒரு எண்ணத்துடன்தான் அவை அவ்வாறு உதவின. ஆனால் ஜெர்மனி தன் சக்திகளை முதலில் ஆங்கில — பிரெஞ்சு — அமெரிக்க முகாமுக்கு எதிராக செலுத்தியது. மேலும் ஹிட்லரின் ஜெர்மனி சோவியத் யூனியனின் மீது யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியபோது, ஆங்கில—பிரெஞ்சு அமெரிக்க முகாமானது ஹிட்லரின் ஜெர்மனியுடன் சேர்வதற்குப் பதிலாக, ஹிட்லரின் ஜெர்மனிக்கு எதிராக சோவியத் யூனியனுடன் ஒரு கூட்டணியில் நுழைவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது.

அதன் விளைவாக, முதலாளித்துவ முகாமிற்கும் சோசலிச முகாமிற்கும் இடையில் உள்ள முரண்பாடுகளைவிட சந்தைகளுக்காக முதலாளித்துவ நாடுகளுடைய போராட்டமும், தங்களுடைய போட்டியாளர்களை நசுக்க அவர்கள் விரும்புவதும் பலமானது என்பது நடைமுறையில் நிரூபிக்கப்பட்டது.

அப்படியென்றால், ஜெர்மனியும் ஜப்பானும் மறுபடியும் தங்கள் காலில் எழுந்து நிற்காது என்பதற்கும் அது அமெரிக்காவின் தளைகளை உடைத்தெறிந்து விட்டு சுதந்திரமான வாழ்வை மேற்கொள்ளாது என்பதற்கும் என்ன உத்தரவாதம் உள்ளது? அப்படிப்பட்ட உத்தரவாதம் இல்லை என்று நினைக்கிறேன்.

ஆனால் முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே யுத்தங்கள் தவிர்க்கமுடியாதது என்ற நிலை இன்னும் நீடிக்கிறது என்பது இதிலிருந்து வெளிப்படுகிறது.

பலம்மிக்க மக்கள் சக்தி இன்று அமைதிக்குப் பாதுகாப்பாகவும் மற்றொரு உலக யுத்தத்திற்கு எதிராகவும் முன்னால் வந்திருக்கிறது என்பதால், ஏகாதிபத்தியம் தவிர்க்க இயலாது யுத்தத்தை உருவாக்கும் என்ற லெனினின் தத்துவம் காலாவதியாகிவிட்டது என்று இப்போது கொள்ளப்பட வேண்டும் என கூறப்படுகிறது. இது உண்மையல்ல.

இன்றைய சமாதான இயக்கத்தின் நோக்கமானது அமைதியைப் பேணிக்காப்பதற்கும், மற்றொரு உலகயுத்தத்தைத் தடுப்பதற்கும் பரந்துபட்ட மக்களைப் போராட அழைப்பதேயாகும். எனவே இந்த இயக்கத்தின் இலட்சியமானது முதலாளித்துவத்தைத் தூக்கியெறிந்து, சோசலிசத்தை நிறுவுவது அல்ல—அமைதியைப் பேணிக் காக்கின்ற ஜனநாயக லட்சியத்துடன் தன்னை அது குறுக்கிக் கொள்கிறது. இந்த அம்சத்தில், இன்றைய சமாதான இயக்கமானது, முதல் உலகயுத்த காலகட்டத்தின் போது ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டு யுத்தமாக மாற்றுவதற்காக நடந்த இயக்கத்திலிருந்து வேறுபட்டதாகும்; ஏனென்றால் பின் கூறப்பட்ட இயக்கமானது அதிக தூரம் சென்று, சோசலிச லட்சியத்தைப் பின் தொடர்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சமாதானத்திற்கான போராட்டமானது இங்கும் அங்குமாக சோசலிசத்திற்கான போராட்டமாக வளர்ச்சியடையும் என்பது சாத்தியமே. ஆனால் இன்றைய சமாதான இயக்கமாக அது இனி இருக்காது; முதலாளித்துவத்தைத் தூக்கியெறிவதற்கான ஒரு இயக்கமாக அது இருக்கும்.

எது நடக்கக் கூடியதாக தெரிகிறது என்றால், அமைதியைப் பேணிக்காக்கின்ற ஒரு இயக்கமான இன்றைய சமாதான இயக்கமானது, அது வெற்றி பெற்றால், ஒரு குறிப்பிட்ட யுத்தத்தைத் தடுப்பதிலும், அதனுடைய தற்காலிக ஒத்திவைப்பிலும், ஒரு குறிப்பிட்ட சமாதானத்தை தற்காலிகமாகப் பேணுவதிலும், யுத்த எண்ணம் கொண்ட ஒரு அரசாங்கத்தின் ராஜினாமாவிலும், அதற்குப் பதிலாக தற்காலிகமாக சமாதானத்தைப் பேணுகின்ற ஒரு அரசாங்கம் ஏற்படுவதிலும் முடியும். அது நிச்சயமாக நல்லதுதான். மிக நல்லது கூட. ஆனால், அப்படியிருந்தபோதிலும் கூட, முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான யுத்தங்களை தவிர்க்க இயலாத தன்மையை பொதுவாக துடைத்தெறிய அது போதாது. அது ஏன் போதாது என்றால், சமாதான இயக்கத்தின் அனைத்து வெற்றிகளும் இருப்பினும், ஏகாதிபத்தியமும் நீடிக்கும்; தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். அதன் விளைவாக, யுத்தங்களின் தவிர்க்க இயலாத் தன்மையும் தொடர்ந்து நடைமுறையில் நீடிக்கும்.

யுத்தத்தின் தவிர்க்க இயலாத்தன்மையை துடைத்தெறிய, ஏகாதிபத்தியத்தை அழித்தொழிப்பது அவசியமாகும்.

("சோவியத்தின் சோசலிசப் பொருளாதாரப் பிரச்சினைகள்" என்ற நூலில் வரும் ஒரு அத்தியாயமாகும். இந்நூல் ஸ்டாலின் மறைவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக அவரால் எழுதப் பட்டது.)

**வர்க்கங்கள் என்றால் என்ன?**

வர்க்கங்கள் என்பது

(1) வரலாற்று ரீதியாக தீர்மானிக்கப்பட்ட சமூக உற்பத்தியில் தாங்கள் வகிக்கின்ற பாத்திரத்திலும் (2) உற்பத்தி சாதனங்களுடன் தங்களுக்குள்ள உறவுகளாலும் (பெரும்பாலும் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்டது) (3) உழைப்புக்கான சமூக அமைப்பில் தங்களுடைய பாத்திரத்தாலும் (4) அதன் விளைவாக தாங்கள் செலவிடுகின்ற சமூக செல்வத்தில் உள்ள பங்கின் அளவாலும், அதனைப் பெறும் முறையாலும், ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுகின்ற பெரிய மக்கள் பிரிவாகும்.

— லெனின் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

★ ★ ★

# பாட்டாளி வர்க்கத் தலைமை பற்றி

இன்று பரவலாக பல சிறிய, பெரிய விடுதலைக் குழுக்களினால் ''பாட்டாளி வர்க்கத் தலைமையில் போராட்டத்தை நடத்துவோம்'' என முழங்கப்படுகிறது. ஆனால் அவ்வமைப்புகள் உண்மையிலேயே பாட்டாளி வர்க்கத் தலைமையிலானவையாக உள்ளனவா? அவை போராட்டத்தின் மீது உறுதியாக பாட்டாளிவர்க்கத் தலைமையைக் கட்டியெழுப்பியுள்ளனவா? போராட்டத்தின் மீது பாட்டாளி வர்க்க முத்திரை யிடப்பட்டுள்ளதா? என்று நோக்குவதும் மதிப்பிடுவதும் அவசியமானதாகும். அத்தகைய ஒரு மதிப்பீடு இல்லாத போது பல குழுக்கள் உண்மையில் பாட்டாளி வர்க்கத் தலைமை எனவே, வர்க்கத்துக்கு ஆதரவாக இடதுசாரி நிலையை எடுக்காமலே கூட இருந்து கொண்டு பாட்டாளிவர்க்கத் தலைமை என பசப்பு மொழிகளைக் கூறியபடி தம் பிழைப்பை நடத்தமுடியும். அத்தகைய பசப்பு மொழிகளால் முதிராத பாட்டாளிவர்க்க இளைஞர்கள், தொண்டர்களும் பரந்துபட்ட பாட்டாளிவர்க்க, உழைக்கும் வெகுசனங்களும் ஏமாற்றப் பட்டு அவர்களால் இழுத்துச் செல்லப்பட நேரும். அவ்விதம் நேர்ந்து வந்துள்ளது மறக்கப்பட முடியாததாகும்.

பாட்டாளிவர்க்கத் தலைமையைக் கட்டியெழுப்புவது என்றால் என்ன? பாட்டாளி வர்க்கத்தினரையும், உழைக்கும் வெகுசனங்களையும், தொழிற் சங்கங்களிலும், பிற வெகுசன ஸ்தாபனங்களிலும் திரட்டி வைத்துக்கொள்வதா? அப்படி பரந்த கும்பலாக திரட்டிவிட்டு அதனை பாட்டாளி வர்க்க அணி என்றோ, 'தலைமை' உருவாகி விட்டதென்றோ கூறிவிடமுடியுமா?

''மேலும் தெளிவு பெறுவதற்காக, பிரித்தானியாவிலுள்ள தொழிலாளர் கட்சி (தொழிற் கட்சி)யை எடுத்துக்கொள்வோம். ஆலை, காரியாலய, தொழிலாளர் தொழிற் சங்கங்களை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர்களின் விசேஷ கட்சி ஒன்று பிரித்தானியாவில் உண்டு என்பதை நாம் அறிவோம். அந்த தொழிலாளர்களின் கட்சி என்று அழைக்க யாரும் தயங்க மாட்டார்கள். அது பிரித்தானிய மார்க்ஸிச இலக்கியங்களில் மட்டுமல்ல, ஏனைய மார்க்ஸிசப் படைப்புகள் எல்லாவற்றிலும் அப்படியே அழைக்கப்படுகின்றது.

ஆனால், இந்தக்கட்சியை ஓர் உண்மை யான தொழிலாளர்களின் கட்சி, முதலாளித்துவத்திற்கு எதிராக நிற்கும் தொழிலாளர்களின் ஒரு வர்க்கக் கட்சி என்று சொல்ல முடியுமா? அதை ஒரு வர்க்கத்தின், உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான கட்சி, இருவர்க்கங்களின் கட்சியல்ல என்று கூறமுடியுமா? இல்லை அப்படிக் கூற முடியாது. உண்மையில் பிரித்தானியாவிலுள்ள தொழிற்கட்சி தொழிலாளர்களுக்கும், நகர குட்டி முதலாளிகளுக்கும் உரிய ஒரு அணியின் கட்சியாகும். உண்மையில் இருவர்க்கங்களின் ஒரு அணியின் கட்சி அது. இந்தக் கட்சியில் யாருடைய செல்வாக்கு, முதலாளிவர்க்கத்திற்கு எதிராக நிற்கும் தொழிலாளரின் செல்வாக்கா, குட்டி முதலாளிகளின் செல்வாக்கா பலமானது? என்று கேட்டால், இந்தக் கட்சியில் குட்டி முதலாளிகளின் செல்வாக்கே மேலோங்கியுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

பிரித்தானிய தொழிற்கட்சி முதலாளித்துவ தாராள வாதக் கட்சியின் உண்மையான ஒரு வாலாக ஏன் விளங்குகிறது என்பதை அது உண்மையில் விளக்குகிறது. இருந்தும் அது மார்க்ஸிச இலக்கியத்தில் ஒரு தொழிலாளரின் கட்சியாக அழைக்கப் படுகின்றது. இந்த ''முரண்பாடு'' எவ்வாறு விளக்கப்படவேண்டும். இந்தக் கட்சி ஒரு தொழிலாளரின் கட்சி என்று தெளி



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாகக் கூறப்படும்போது, அதன் உண்மை யான அர்த்தம், இன்று கட்சிக்குள் நில வும் உண்மையான விவகார நிலைமையைக் குறிப்பதல்ல, மாறாக ஒரு தொழிலாளர் கட்சியின் அமைப்பு முறை எவ்வாறு இருக்க வேண்டுமோ, அவ்வாறே எதிர்காலத்தில், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் முதலாளித்துவ உலகிற்கு எதிராக நிற்கும் தொழிலாளர் களின் ஒரு உண்மையான கட்சியாக மாறும் என்பதே அதற்கான விளக்கமா கும். இது உண்மையில் இக்கட்சி தற்காலிக மாக தொழிலாளர்கள், நகர குட்டி முத லாளிகளுக்குரிய ஓர் அணியின் கட்சி என்ற உண்மையை விலக்கவில்லை; மாறாக ஏற் றுக்கொள்கிறது.''

[On The Opposition — J. V. Stalin Page — 676 — 677]

தொழிற் கட்சி பற்றிய இந்த மதிப் பீட்டிலிருந்தே நாம் வெறுமனே தொழிற் சங்கங்களை கட்டிக்கொள்ளும் ஒரு குழு அல்லது கட்சியை பாட்டாளிவர்க்கக் கட்சி என்றோ அது பாட்டாளிவர்க்க தலைமையை கட்டியெழுப்பிவிட்டதாக பிதற்றிக்கொள்வ தையோ குருட்டுத்தனமாக நம்புவது தவ றனதென உணர முடியும். பாட்டாளி வர்க்கத் தலைமை என்பது ''தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க ஸ்தாபனத்தின் உச்ச நிலை வடிவமான'' கட்சியை கட்டுவதில் தங்கியுள்ளது. ''மற்றெல்லா தொழிலாளி வர்க்க ஸ்தாபன வடிவங்களிடையேயும் அதன் அரசியல் தன்மை'' பரவுவதைப் பொறுத்ததாகும். இந்த தலைமை எத்த னைக் கெத்தனை அரசியல் ரீதியானதாக, சித்தாந்த ரீதியானதாக (யாந்திரீக அதி கார ரீதியானதாக அல்ல) நிறுவப்படு கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பாட்டாளி வர்க்கத் தலைமை என்பது உறுதிப்படுத்தப் படுகிறது பிற வர்க்க செல்வாக்குகள் அகற்றப்படுகிறது.

பாட்டாளிவர்க்கத் தலைமை என்பது மாக்சிச — லெனினிசத்தின் அடிப்படையி லமைந்த கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபித வளர்ச்சியும் அதன் தலைமையுந்தான் என் பதனை கொச்சையாகப் புரிந்து கொண்ட தனாலோ, அல்லது சாமர்த்தியமாக மக்களை யும், தொழிலாளவர்க்கத்தின் சிறந்த வழித் தோன்றல்களையும் ஏமாற்றுவதற்காகவோ சில விடுதலை ஸ்தாபனங்கள் தம்முள் ஒரு மையத்தை ஸ்தாபித்துக் கொண்டு அவற் றுக்கு 'கட்சி' என நாமகரணமிட்டு, அது மாக்சிச லெனினிசத்தை ஏற்றுக் கொள்வதாக (?) கூறி வருகின்றனர். இங்கு உண்மையில் கட்சிஎன ஏதாவது உள்ளதா? சில அப்பாவியான வர்க்கப் பற்றுடைய நபர்களைப் பிடித்து வைத்திருக் கும் தந்திரம் தானோ?

இந்த ஸ்தாபனங்கள் தேசிய விடுதலைக் கான பூர்ஸ்வா வேலைத்திட்டங்களையே முன்வைக்கின்றன. செயற்படுத்துகின்றன. நடைமுறையில் தொழிலாளவர்க்கத்தையும் உழவர்களையும் பிற உழைக்கும் வெகுசனங் களையும் வர்க்கப் போராட்டங்களூடே தட்டியெழுப்பி வர்க்க உணர்வூட்டி அணி திரட்டும்பணியில் இவர்கள் ஈடுபடுவ தில்லை. வர்க்கத்தை அணிதிரட் டாது வர்க்கத்துடன் 'நகமும் சதையும்' போன்ற உறவு கொண்டிராது இவர்கள் கட்சியாக இருக்கிறார்களாம்.

இவ் விஷயம் சம்பந்தமாக லெனின் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்:-

''பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிகர கட்சியின் கட்டுபாட்டை கட்டிக் காப்பது எப்படி? அதைப் பரீட்சிப்பது எப்படி? அதைப் பலப்படுத்துவது எப்படி? முதலா வதாக, பாட்டாளிவர்க்க முன்னணிப் படை யின் வர்க்க உணர்வாலும், புரட்சியின் பாலுள்ள அதன் பற்றுறுதியாலும், அதன் உள்ளுரம், தியாகஉணர்வு, வீரதீரம் ஆகிய வற்றாலும், இரண்டாவதாக, மிக விசால மான உழைக்கும் மக்கள் திரளுடன்,— முதன் முதலில் பாட்டாளி வெகுஜனங் களுடனும் இன்னும் பாட்டாளிகளல்லாத உழைப்பாளி மக்களுடனும் தன்னைத் தானே இணைக்கின்ற, நெருக்கமான தொடர்பு வைத்துக்கொள்ளுகின்ற, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, நீங்கள் (இப்படிச்சொல்ல) விரும்பினால், சங்கமிக்கின்ற திறமை யால்...''

[On the Opposition Page 301]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"..முதலாளித்துவத்தின் மீதான வெற்றிக்கு தலைமைதாங்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், புரட்சிகர வர்க்கமான பாட்டாளி வர்க்கத்துக்கும் வெகுஜனங்களுக்கும் அதாவது உழைக்கும் மக்களுக்கும் முழுமையாக சுரண்டப்படுகின்றவர்களுக்கும் இடையில் சரியான உறவு தேவையாகின்றது. கம்யூனிஸ்ட் கட்சி மாத்திரம், அது புரட்சிகர வர்க்கத்தின் உண்மையான முன்னணிப் படையாக இருந்தால், அந்த வர்க்கத்தின் தலைசிறந்த பிரதிநிதிகள் அனைவரையும் கொண்டிருந்தால், விட்டுக்கொடுக்காத (பிடிவாதமான) புரட்சிகரப் போராட்ட அனுபவத்தால் போதிக்கப்பட்டு, உருக்கேற்றப்பட்ட பூரணமான வர்க்க உணர்வும் விசுவாசமும் உள்ள கம்யூனிஸ்டுகளைக் கொண்டிருந்தால், இந்த கட்சி அதன் வர்க்கத்தின் முழு வாழ்வுடனும், அதன் மூலம் சுரண்டப்படுகின்ற வெகுஜனங்கள் அனைவருடனும் பிரிக்கமுடியாதபடி தன்னைத்தானே இணைத்துக் கொள்வதில் வெற்றி பெற்றிருந்தால், இந்த வர்க்கத்தினதும் இந்த வெகுஜனங்களினதும் பூரண நம்பிக்கையை தூண்டிவிடுவதில் வெற்றி பெற்றிருந்தால்,—இத்தகைய ஒரு கட்சிதான் முதலாளித்துவ சக்திகள் அனைத்துக்கும் எதிராக மிகவும் ஈவிரக்கமற்ற, உறுதியான, இறுதிப் போராட்டத்தில் பாட்டாளிவர்க்கத்தை வழிநடத்தக் கூடியதாக இருக்கும்.''

[On the Opposition Page—602]

சட்டபூர்வவேலைகளையும் சட்டவிரோத வேலைகளையும் பகிரங்க ரகசிய வேலைகளை சரியான முறையில் இணைத்து வர்க்கப் போராட்டங்களுடே வெகுசனத்தன்மை வாய்ந்ததும், இரகசியமானதும் உறுதியானதுமான பாட்டாளிவர்க்க கட்சி ஒன்றை கட்டுவதே பாட்டாளிவர்க்க தலைமையை கட்டியெழுப்பும் பெரும் பணியாகும்.

மேலும் பாட்டாளிவர்க்க தலைமையின் கீழ் பிறவர்க்கப்பிரிவுகளைத் திரட்டுவது எப்படி என்ற பிரச்சனையிலும் பல்வேறு திரிபுகளை நாம் காணலாம் பிறவர்க்கங்களை திரட்டும் நோக்கத்துக்காக வர்க்கப் போராட்டங்களைக் கைவிட வேண்டும். சொந்த முழக்கங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். அந்தந்த வர்க்கங்களின் சொந்த குறிக்கோள், திட்டங்கள் கருத்துகளிடையாகவே திரட்டவேண்டும் என பலவாறாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் யாவும் 'ஐக்கியமுறும் நோக்கத்துக்காக' பாட்டாளி வர்க்க சரணடைவை கைக்கொள்ள வேண்டும் எனவும் பிறவர்க்கங்களின் திட்டம், முழக்கங்களை (தலைமையை) ஏற்று அவற்றின் கீழ் அணிதிரள வேண்டும் எனும் பாதையையே முன்வைக்கின்றன. முன்னேறிய பிரிவு பின்தங்கிய பிரிவினருக்காக திட்டம், முழக்கங்களில் விட்டுக் கொடுப்பு செய்யவேண்டும் எனும் கருத் தோட்டமும், இந்த வகையானதாகவே—பிறவர்க்க தலைமையை பாட்டாளிவர்க்கத்தின் மீது நிறுவுவதாகவே அமைகிறது.

பாட்டாளிவர்க்கத் தலைமை என்பது அதனது தத்துவம், திட்டம், யுத்த தந்திரம், ஸ்தாபனமார்க்கம் என்பவற்றின் கீழ் பலதரப்பட்ட வர்க்கங்களையும் ஐக்கியப் படுத்துவதும் அந்த அரசியல் சித்தாந்த மார்க்கத்தால் ஆயுதபாணியாக்கப்பட்ட வர்க்க ஸ்தாபனத்தின் வலுமிக்க திறமையை சமூகத்தின் எல்லா மட்டத்திலும் கட்டியெழுப்புவதுமாகும். இந்த இருவகைப் பட்ட பணிகளிலுமிருந்து விலகி நின்றபடி பாட்டாளி வர்க்கதலைமை என்பதெல்லாம் ஒன்றில் முட்டாள் தனமானதாகவோ வஞ்சகத்தனமானதாகவோ மட்டுமே இருக்க முடியும். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய அரசியல் போராட்டமும் பாட்டாளிவர்க்கக் கட்சியும்

நாடுகள் வர்க்கங்களாகப் பிரிந்துள்
ளன. இது மறுக்கமுடியாத உண்மையா
கும். சுரண்டுபவர்களாயும், சுரண்டப்படுப
வர்களாயும் உள்ள இந்தப் பிளவு சமூகத்
தின் அடிப்படையாக அமைந்து முழு சமூக
அமைப்பையும் இயக்கத்தையும், வளர்ச்சி
யையும் ஆளுகை செய்கின்றது. இவ் வர்க்
கப்பிரிவுகள் பல தரப்பட்டவையாயினும்
கூட இன்று நாம் அடிப்படையான இரு
பிரிவுகளில் இவைஅனைத்தையும் அடக்கி
விடலாம். அது சுரண்டப்படுபவர்களாக
தொழிலாள, விவசாய, அரைப்பாட்டாளி
களும், குட்டிபூர்ஷ்வாக்களில் பெருந்திர
ளாக உள்ள கீழ் நடுத்தட்டுக்களும் முதற்
பிரிவில் சேருவர். முதலாளிகள், நிலப்பிர
புக்கள் என்போர் மறு பிரிவைச் சேர்ந்த
வர்களாக உள்ளனர். இந்த அடிப்படைப்
பிரிவு வர்க்கப்பிரிவாகும். இவ்விருவர்க்கப்
பிரிவுகளும் ஒன்றின் மீது ஒன்று தனது
ஆட்சியதிகாரத்தை நிறுவுவதற்காக நடத்
துகின்ற போராட்டத்தையே நாம் அரசிய
லென்கிறோம். ஆம் அரசியலென்பது எந்த
வர்க்கத்தின் அரசு என்ற பிரச்சினைதான்.
அதற்கான போராட்டந்தான்.

"பொதுவாகவும், மிகப் பெருவாரி
யான சந்தர்ப்பங்களிலும் எப்படியும் இன்
றைய நாகரீக நாடுகளில் வர்க்கங்கள் அர
சியல் கட்சிகளால் தலைமை தாங்கப்பட்டு
வழிகாட்டப்படுகின்றன." பூர்ஷ்வாப் பிரி
வும் சரி பாட்டாளிவர்க்கப்பிரிவும் சரி
தத்தமக்கு தலைமையேற்று வழிநடத்தும்
கட்சியைக் கொண்டிருப்பது இயற்கையா
னது. இக்கட்சிகள் தத்தம் வர்க்கங்களுக்கு
தலைமைதாங்கி ஆட்சியதிகாரத்தை ஸ்திர
மாக நிறுவும்பணியில் வழிகாட்டுகின்றன.

பூர்ஷ்வாகட்சிகள் செய்யும் பணியு
மிதுதான். அக்கட்சிகள் பூர்ஷ்வா உலக
நோக்கையே மக்கள் முன்வைத்துப் பரப்பி
யும் மக்களது பாமரத்தனத்தை பன்மடங்கு
தூண்டியும் மக்கள் மீது முதலாளிய ஆட்சி
யதிகாரத்தை நிலைபெறப் பாடுபடுகின்றன.
அவற்றின் குறிக்கோள் முதலாளிப்பிரிவு
களின் அரசதிகாரத்தை காப்பதும் மக்கள்
மீது முதலாளியத்தலைமையை எல்லாத்
துறைகளிலும் நிறுவி அதனை ஸ்திரப்படுத்தி
காப்பதுமாகும்.

அதேபோன்றே பாட்டாளிவர்க்கக்கட்சி
யும் தனது வர்க்கத்துக்குத் தலைமை தாங்கி
வழிகாட்டலில் ஈடுபடுகின்றது. தனது வர்க்
கத்தை வர்க்கப் போராட்டப்பள்ளியில்
பயிற்றிப் புடம்போட்டு உறுதியாக ஸ்தா
பனப்படுத்தி புரட்சிக்கும் பாட்டாளிவர்க்
கச் சர்வாதிகாரத்தை பூர்ஷ்வாக்கள் மீது
நிறுவுவதற்கும் வழிநடத்திச் செல்கிறது.
சமூகத்தின் எல்லா மட்டங்களிலும், எல்லா
தளங்களிலும் பாட்டாளிவர்க்கச் சர்வாதி
காரத்தை நிறுவவும் வர்க்கப்போராட்
டத்தை நடத்தவும் தனது வர்க்கத்துக்கு
கற்றுக்கொடுக்கிறது.

இத்தகைய ஒரு கட்சியின்றி, தலைமை
அற்றநிலையில் பாட்டாளிவர்க்கமானது
வர்க்க உணர்வுபெற்ற ஒரு சக்தியாக அணி
திரள்வதும் ஒழுங்கு, கட்டுக்கோப்புடைய
ஸ்தாபனமாக்கப்படுவதும் வர்க்கப்போராட்
டத்தில் வெற்றியை நோக்கி சரியாக இட்
டுச்செல்லப்படுவதும் அறவே சாத்திய
மில்லை. உண்மையில் வர்க்கஉணர்வுபெற்று
அமைப்பாக்கப்படாத நிலையில் பாட்டாளி
வர்க்கம் என்பது ஒன்றுமேயில்லை. அது
ஒரு அபத்தமான சொற்சேர்க்கையாக
இருக்கும். கட்சியின் உருவாக்கம், வளர்ச்சி
யுடனேயே பாட்டாளிகள் வர்க்கமாக
அணிதிரள்வதும் பலப்படுத்தப்படுவதும்
பிரிக்கவியலாதபடி தொடர்புபட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதேபோலவே பாட்டாளி வர்க்கத்துடன் தொடர்ச்சியாக உறவை வைத்திருந்து அதனைக் கட்டியெழுப்பி அணிதிரட்டி செல்லும் பணியில் ஈடுபடாமல் 'கட்சி' என்ற பேச்சுக்கே இடமில்லை. பாட்டாளி வர்க்க உழைக்கும் வெகுசனங்களுடன் இடையறாத தொடர்பை பேணும் போதே அது பாட்டாளிவர்க்க கட்சியின் பாத்திரத்தை வகிக்கமுடியும். மற்றப்படிக்கு 'சமூகத்திலிருந்து துண்டித்துக்கொண்ட, மக்களிடம் உறவற்ற 'சதிக்குழு'க்களை கட்சி ஆட்சிக்கு வரும் பாதை என்பதற்கும் மாக்சிசத்திலேயே இடமில்லை. இத்தகைய கேலிக்குரிய பாதைகளை தேர்ந்து கொண்ட சதியாளர் தொடர்பாக லெனின் "ருஷ்ய சமூக—ஜனநாயகவாதிகள் இங்குள்ள அரசியல் நிலைமைகளை என்றும் மறந்துவிடவில்லை. ருஷ்யாவில் சட்டரீதியாக தொழிலாளரின் கட்சியொன்றை உருவாக்க முடியும் என்று அவர்கள் என்றுமே கனவுகண்டதில்லை, அரசியல் விடுதலைக்காகப் போராடும் கடமையிலிருந்து சோஷலிஸத்திற்காகப் போராடும் கடமையை அவர்கள் என்றும் பிரித்தது கிடையாது. ஆனல் சதிகாரர்களால் அன்றி, தொழிலாளி வர்க்க இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புரட்சிகரமான கட்சியால்தான் இப் போராட்டம் நிச்சயம் நடத்தப்படவேண்டும் என்று அவர்கள் எப்போதுமே சிந்தித்து வந்துள்ளனர்; தொடர்ந்தும் சிந்திக்கின்றனர். எதேச்சதிகாரத்துக்கு எதிரான போராட்டம் சதித்திட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் அன்றி பாட்டாளிவர்க்கத்துக்குப் போதனை அளிப்பதிலும் அதை ஒழுங்குபடுத்துவதிலும் அணிதிரட்டுவதிலும் எதேச்சதிகாரத்தின் ஒவ்வொரு வெளிப்பாட்டையும் கண்டிக்கும் தொழிலாளர்கள் மத்தியிலான அரசியல் கிளர்ச்சியிலும் அடங்கி உள்ளது என்று அவர்கள் நினைக்கிறார்கள்."

(புதிய வகையான பாட்டாளிவர்க்கக் கட்சி குறித்து Leain col works vol 2 Page 340—1897)

என்று கூறுகிறார். வர்க்கத்துடன் இடையறாத உறவை வைத்து அதற்கு முன்னணி வகித்து அதற்கு வழிகாட்டும்போதே கட்சி முன்னணிப் படைப்பாத்திரத்தை நிறைவு செய்கிறது. கட்சி கட்சியாகவுள்ளது.

உலகெங்கும் பாட்டாளிவர்க்கத்தின் தலைவனாக அதற்கு வழிகாட்டிச்செல்லும் கடமையைச் செய்யும் கட்சிக்கு இன்று 'கம்யூனிஸ்ட் கட்சி' என்று பெயரிட்டழைக்கப்படுவது வழமையாகிவிட்டது. அது ஒரு பெயர் மட்டுமே. கட்சியினது கடமையை, குறிக்கோளை நிறைவு செய்யும் பணியில் ஈடுபடாது கம்யூனிஸ்ட் கட்சி என பெயர் சூட்டிக்கொள்வதிலேயோ, மார்க்சிய—லெனினிசம் பேசுவதிலேயே எந்தக் கும்பலும் பாட்டாளிவர்க்கக் கட்சியாகிவிடாது. அதனாலேயே நாம் பல 'போலிகளை' திரிபுவாதக் கும்பல்களென கூறுகிறோம்.

ஒரு உண்மையான பாட்டாளிவர்க்கக் கட்சி (கம்யூனிஸ்ட் கட்சி) பாட்டாளி வர்க்கத்தை வர்க்கப்போராட்டங்களூடு அணிதிரட்டி அமைப்பாக்கி பாட்டாளி வர்க்க சர்வதிகாரத்தை நிறுவும் பாதையில் இட்டுச் செல்லவுமாகவே கட்டப்படுகிறது. அக்குறிக்கோளை நோக்கி செல்லும் போது மட்டுமே அது கம்யூனிஸ்ட் கட்சியாக இருக்கமுடியும். வர்க்கத்தை வழிநடத்தும் பணியில் சனநாயக ரீதியான கற்பிக்கும் முறைகளின் வழியே வர்க்கத்துக்கு தலைமை தாங்கிச் செல்வதன் மூலமே சனநாயக மத்தியத்துவத்தை கடைப்பிடிப்பதன் மூலமே அதனால் (கட்சி) வர்க்கத்தின் முன்முயற்சியுடன் மாபெரும் சக்தியை கட்டியெழுப்பும் பணியில் வெற்றியீட்டமுடியும். வர்க்கத்தை வழிநடத்தும் கடமையில் கட்சியின் வழிமுறை சனநாயகத்தை பண்பாகக் (அடிப்படையாகக்) கொண்ட 'மத்தியப்பட்ட' எஃகு போன்ற தலைமையை நிறுவுவதாகவே இருக்கும். இந்த வழியில் செல்வதன் மூலமே, மூலம் மட்டுமே எந்தக் கட்சியும் நிறம்மாறாது பாட்டாளிவர்க்கக் கட்சியின் ஒளிமிகுந்த பாத்திரத்தை ஆற்ற முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று நாம் முதலாளிய சமூகத்திலா வாழ்கிறோம்; இல்லை. நாம் வாழ்வது அரை நிலப்பிரபுத்துவ, அரைக்காலனிய சமூக அமைப்பிலாகும். இது ஏகாதிபத்தியங் களின் பிடியிலான உலகம். மூன்றும் மண் டல நாடுகளில் தேசியப் புரட்சியென்பது (சனநாயக புரட்சி) இன்னமும் நிறைவு செய்யப்படாமலேயே உள்ளது. இன்னமும் இந்த மூன்றும் உலக நாடுகளின் மக்கள்—பெரிதும் அனைவருமே—ஏகாதிபத்தியங்களுக் கும், நிலப்பிரபுத்துவத்துக்கும் அடிமை நிலையிலேயே உள்ளனர். இந்த நாடுகளி லுள்ள— 'நமது நாட்டிலும்தான் — பாட் டாளி வர்க்கத்தினதும் மக்கள் திரளினதும் தேவையும் கடமையுமாக உள்ளது, தம்மை அழுத்திக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் எனும் இரு மலைகளையும் தூக்கி வீசுவதாகவே உள்ளது. அடிமை நிலையிலிருந்து விடுபட்டு சனநாயகப் புரட் சியை நிறைவு செய்வதாகவே உள்ளது.

இந்தப்பணியை நிறைவு செய்வதன் மூலம் மட்டுமே உற்பத்தி சக்திகளையும், சமூகத்தையும் தளையறுத்து சுதந்திரமாக வளரும் பாதையில் கொண்டு செல்லமுடி யும். பாட்டாளிவர்க்கம் பல்கிப் பெருகுவ தும் அது தனது பாட்டாளிவர்க்க சோச லிசப் புரட்சியை வென்று பெறுவதும் இவ் வழியிலேயே சாத்தியம். சமூகமாற்றமும், வளர்ச்சியும் படிமுறைகளுக்கூடாகவே அடையப்படுகிறது என்பதை நாம் நினை வில் கொள்ளவேண்டும் நாம் சமூகவளர்ச் சியில் தாவிக்குதிக்க முடியாது. சோசலி சப் புரட்சி அடையப்பட படிமுறை வளர்ச்சி நிறைவுசெய்யப்பட்டாக வேண்டும். அது ஒரு சனநாயகப் புரட்சியின் நிறைவினூடு மட் டுமே சாத்தியமாகும்.

எனவே சனநாயக ப்(தேசியப்) புரட்சி என்பதே அனைத்துவர்க்கங்களுக்குமான உய் வழியாக உள்ளது உண்மையாகும். எனி னும் கூட இது பழைய தேசியப் புரட்சி களின் வழியிலேயே (1840) சாத்தியமா குமா? என்பதனை நாம் சிந்தித்தாகவேண் டும். சனநாயகப் புரட்சியின் பிரதான எதிரிகளில் ஒன்றுன ஏகாதிபத்தியம் என் பது அன்றிருக்கவில்லை. ஏகாதிபத்தியத்தை —அதாவது சர்வதேசிய முதலாளித்து வத்தை திடமாக எதிர்ப்பதனுலேயே இந்த சனநாயகப்புரட்சியானது இயல்பாகவே உல கப்பாட்டாளிவர்க்க சோசலிசப்புரட்சியின் ஒரு பகுதியாகிறது.

இந்த நாடுகளில் பழைய வகைப்பட்ட உலக சோசலிசப் புரட்சியின் பகுதியாக இராத—பூர்ஷுவா சனநாயகப்புரட்சி சாத்தியமா என்பது சிந்திக்கப்படவேண் டும் இந்தப்புரட்சியின் இயக்கு சக்தியாக முதலாளியம் இனியும் இருக்க முடியுமா? லாபநோக்கு, மக்களைக் கண்டஞ்சும் குணம் சங்களுக்கும் புரட்சிகரத் தன்மைக்கும் இடையே அடிக்கடி தடம் புரண்டுவரும் பூர்ஷுவா வர்க்கம் தலைமைப் பாத்திரத்தை வகிப்பதென்பது சாத்தியம் இல்லை ஊச லாடும் அந்த வர்க்கம் புரட்சியினை உந் திச் செல்லும் இயக்குசக்தியாக இனியும் இருக்க முடியாது. இந்தப்புரட்சியானது உறுதியானதும் புரட்சிகரத்தன்மையில் சற்றும் தளர்ச்சி அற்றதுமான பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலேயே இறுதிவரை இட்டுச் செல்ல முடியும். முதலாளியப் பிரிவினுல் "காவுமட்டும் காவி கடைப்படி யில் விழுத்திவிடும்" அளவுக்குச்செல்வது கூட இயலாததாக உள்ளது. ஏதேனும் ஒரு ஏகாதிபத்தியத்தை சாராது வாழ முடியுமா என்ற அவநம்பிக்கை குரலை ஏற்க்கனவே ஒலிக்கத் தொடங்கியாகி விட் டது. சமூகத்தின் இயல்பும் புரட்சியின் இயக்கு சக்திகளாக இருக்கப் போகின்ற வர்க்கம் எது என்பதுமே எல்லாவற்றை யும் தீர்மானிப்பதாக அமைகிறது. புரட்சி யின் இயக்கு சக்தி பாட்டாளி வர்க்கமாக உள்ளதில் இருந்து சனநாயகப் புரட்சி யானது தனது உருவம். உள்ளடக்கம் இரண் டிலும் மாற்றம் பெறுகிறது. அது உலக சோசலிசப் புரட்சியின் பகுதியாக ஒரு புதிய வகைப்பட்டதாக மாற்றம் பெறுகிறது சனநாயகப் புரட்சியானது பாட்டாளி வர்க்கத்தின் கைகளுக்கு தலைமை தாங்கப் படுவதற்காக வந்தடைந்ததினுலும் அதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரதான சக்தியாக விவசாயிகள் அமைவதினுலும் பாட்டாளி வர்க்கமானது தனது கடமைகளை திட்டவட்டமாக முடிவு செய்வது அவசியமானதாகும். பாட்டாளி வர்க்கமானது இப்புரட்சியை உலக சோசலிசப் புரட்சியின் பகுதியாக — புதிய சனநாயகப் புரட்சியாக முன்னெடுக்கவே முயற்சிக்க வேண்டும். அந்த வகையிலேயே பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய சனநாயகப் புரட்சிப்பாதை அனைத்து மக்களதும் ஒளிரும் பாதை ஆகிறது.

தமிழீழ புதிய சனநாயகப் புரட்சியினை வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கு பாட்டாளி வர்க்கமானது தமிழீழ புதிய சனநாயகப் புரட்சியின் நியதிகளை நன்கறிந்து கொள்வதும் அந்நியதிகட்கு இசைவாக புரட்சியை வழிநடத்திச் செல்வதும் அவசியமாகும். தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியின் நியதிகளை அறிவதற்கு ஒருவர் முதலில் புரட்சியின் நியதிகளை அறிந்து கொள்ளவேண்டும். அதற்கிசைவாகத் தமது மார்க்கத்தை வகுத்துக் கொள்ளவேண்டும். புரட்சியென்பது ஒரு வர்க்கம் இன்னேர் வர்க்கத்தை பலாத்காரமாக தூக்கியெறியும் நடவடிக்கையே. அதனை ஒரு சில நபர்களோ ஒரு சிறு குழுவோ ஒரு படையோ செய்துவிடமுடியாது. மக்களே புரட்சிகளை நடாத்தும் உந்து சக்திகளாவர். மக்கள் மட்டுமே தமது விரோதிகளை தூக்கியெறிந்து தம்மை விடுவித்துக் கொள்ளமுடியும். அந்த வழியில் மக்களை விழிப்பூட்டி அணிதிரட்டுவதே வாலிபர்களின் கடமையாகும். இதனைப்புரிந்து கொள்ளத் தவறியதாலேயே நாமறிந்த "'மார்க்சிய?''(?) தாபனங்களில் பலவும் வெறும் இளைஞர் குழுக்களாகவே இருந்தன. இருந்தும் வருகின்றன.

மேலும் சமூகத்தின் நிலைக்கேற்ப அவர் சனநாயகப் புரட்சியை நிறைவுசெய்பவராதலின் சனநாயகப்புரட்சியின் நியதிகளை அறிந்ததற்கிசைவாக வர்க்கத்தை இட்டுச் செல்லவேண்டும். சனநாயகப் புரட்சியின் இலக்குகள், கடமைகள், இயக்குசக்திகள் ஆகியவற்றைச் சரியாகக் கணித்து பணிகளை சரியாக வழிநடத்தவும் பூர்த்தி செய்யவும் வேண்டும். புரட்சியின் இலக்குகளாக உள்ளவை ஏகாதிபத்தியமும், நிலப்பிரபுத்துவமும் (நில முதலைகளும்?) தான் புரட்சியின் கடமைகளாவன இவ்விரு எதிரிகளையும் தாக்குவது. தூக்கியெறிவது. இவ்விரு பணிகளிலும் ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிவதற்கான தேசியப் புரட்சியே முதன்மையானதும் முதலாவதுமான கடமை என்பதில் கேள்விக்கே இடமில்லை.

இந்த இரண்டு மாபெரும் கடமைகளும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையன. ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவ நிலப்பிரபு வர்க்கத்தின் பிரதான ஆதரவாய் இருப்பதால் ஏகாதிபத்திய ஆட்சி தூக்கியெறியப்பட்டாலொழிய அதற்கு முடிவு கட்டமுடியாது. மாருக நிலப்பிரபுத்துவ நிலப்பிரபு வர்க்கம் ஏகாதிபத்திய ஆட்சியின் பிரதான சமூக அடிப்படையாகவும் விவசாயிகள் புரட்சியின் பிரதான சக்தியாகவும் இருப்பதால் நிலப்பிரபு வர்க்கத்தை தூக்கியெறிவதற்கான விவசாயிகளின் போராட்டத்தில் விவசாயிகளுக்கு உதவியளித்தாலொழிய ஆற்றல் மிக்க புரட்சிப்படைகளை அமைத்து ஏகாதிபத்திய ஆட்சியை தூக்கியெறிவது அசாத்தியமானதாகும். ஆகவே இரண்டு அடிப்படைக் கடமைகளும் அதாவது தேசியப் புரட்சியும் சனநாயகப் புரட்சியும் ஒரே நேரத்தில் வேறுபட்டும் இணைந்தும் உள்ளன.

தேசியப் புரட்சியின் பிரதான உடனடியான கடமை ஏகாதிபத்திய கைக்கூலி அரசினது ஆக்கிரமிப்பை எதிர்ப்பதாக இருப்பதனுலும் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு சனநாயகப் புரட்சி நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதனுலும் இரண்டு புரட்சிகர கடமைகளும் உண்மையில் ஒன்றாகவே இணைக்கப்பட்டிருக்கின்றன. தேசியப் புரட்சியையும் சனநாயகப் புரட்சியையும் புரட்சியின் முற்றிலும் வேறுபட்ட இரண்டு கட்டங்கள் எனக் கருதுவது தவருகும்.

www.tamilarangam.net

இயக்கு சக்திகளான தொழிலாளர், விவசாயிகளையும் பல் வேறுபட்ட குட்டி பூர்ஷ்வா வர்க்கப் பகுதிகளையும் சாத்திய மானளவுக்கு ஜாக்கிரதையுடன் ஓரளவிற்கு தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தையும் அணி திரட்டுவதன் மூலமே நாம் நமது சனநாயகப் புரட்சி கடமையை நிறைவேற்றலாம்.

புதிய ஜனநாயகப் புரட்சியின் நியதிகளை ஒருவர் கணிப்பிடும்போது அது உலக சோசலிசப் புரட்சியின் பகுதி என்பதை கணக்கிடுவது அவசியம். எனவே அது உலக சோசலிசப் புரட்சியின் நியதிகளுக்கிசைவாக இட்டுச்செல்லவேண்டும். தொழிலாளி-விவசாயிகளின் கூட்டு, தொழிலாளர் வர்க்க தலைமை என்பவற்றை உறுதியாக நிறுவுவதன் மூலமே - ஒரு வலுவான கம்யூனிஸ்ட் கட்சியை கட்டுவதன் மூலமே தொழிலாளர் வர்க்கத் தலைமையை புரட்சியின் மீது நிறுவமுடியும். ''தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்கு துணைபோகும் படை என்கிற பாத்திரத்தை வகிக்குமா (இந்தத் துணைபோகும் படை எதேச்சதிகார முறையைத் தாக்கும் சக்தியில் வலிமை மிக்கதாய் இருந்தாலும்கூட அரசியல் ரீதியிலே சக்தியற்றது), அல்லது அது மக்கள் புரட்சியில் தலைவனுகப் பாத்திரம் வகிக்குமா என்பதைப் பொறுத்துத்தான் புரட்சியின் விளைவு இருக்கிறது.'' அத்தகைய கட்சியொன்று ஐக்கிய முன்னணியையும், படையையும் கட்டியும் வழி நடத்தியும் செல்லும்போது தான் புரட்சியின் மீது பாட்டாளிவர்க்க முத்திரை இடப்படும். வலது விலகலுக்குள்ளாகி தனது தலைமையை கைவிட்டு சரணடைவை பாட்டாளிவர்க்கத்துக்கு உபதேசிக்கும் போதும் இடது விலகலுக்குள்ளாகி துணைச்சக்திகளிலிருந்து தனிமைப்படும் போதும் பாட்டாளி வர்க்கமானது தனது இலக்கிலிருந்து விலகி பின்னடைவை சந்திக்கிறது.

தமிழீழத்தில் பாட்டாளிவர்க்க கட்சியின் அனுபவம் சிறிது. ''நமது வர்க்கம் இன்னமும் கட்சி ஸ்தாபனரீதியில் குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. கட்சி அமைப்பு, ஆயுதப் போராட்டம், ஐக்கிய முன்னணி, ஆகிய மூன்று அடிப்படை பிரச்சினைகளைப் பொறுத்தவரை அனுபவமற்றதாயிருக்கிறது. நமது புரட்சியின் விசேட அம்சங்கள் பற்றியோ புரட்சியின் குறிப்பான நியதிகள் பற்றியோ இன்னமும் போதிய தெளிவற்றிருக்கிறோம். நமது தொடர்ந்த பணிகளுக்கூடாகவே நாட்டின் குறிப்பான நியதிகளைப் புரிந்து கொள்ள முடியும்.'' எனவே புதிய ஜனநாயகப் புரட்சி நியதிகட்கமைவாக செல்வதன் வழியில் ஊக்கமுடன் படிப்பதையும், கற்பதையும் கடைப்பிடிப்பதன் மூலமே தமிழீழத்தின் நியதிகளை இனங்கண்டு புரட்சியை சீராகவும், விரைவாகவும் வளர்த்துச் செல்ல முடியும். இந்த வழியிலேயே பாட்டாளி வர்க்கக் கட்சியை கட்டுவதும் வளர்ப்பதும் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்வதும் சாத்தியம்.

அல்லாது எங்கோ மழை பெய்ய இங்கு குடைபிடிப்பதென்பது (எந்தெந்த நாடுகளிலோ நடந்த போராட்டங்களின் பாதை நடைமுறைகளை, குறிப்பான அம்சங்களை அவற்றின் காலம், இடம், இயங்குதினை என்பவற்றினை நோக்காது குருட்டுத்தனமாக பெயர்த்துவந்து பிரயோகிக்க முனைவதென்பது) சுத்தமான அகநிலைவாத தவறின் பாற்பட்ட முட்டாள் தனமாகவே இருக்கும். நாம் தமிழீழத்தின் குறிப்பான சூழ்நிலைகளை 'கற்றலின்' மூலம் உணர்ந்து நமது பாதையை துலக்கப்படுத்தத் தயாராக இருக்கவேண்டும். அத்தகைய திறந்த மனத்துடனுன பரிசீலனைகள் மூலமே சரியான நடைமுறைத்தந்திரங்களையும், ஸ்தாபன மார்க்கத்தையும் வகுத்து முன்னேறமுடியும்.

இன்று தமிழீழம் பரந்த அளவில் 'தமிழீழ விடுதலைப் போராட்டம்' பிரதான போக்காக வளர்ந்துள்ளது. தமிழ் மக்களின் சனநாயக விடுதலையை வென்றெடுப்பதை சாராம்சமாகக் கொண்ட இப்போராட்டம் கடந்த பதினைந்து ஆண்டுகளிலேயே ஒரு போக்காக உருவெடுத்தது. ஆரம்பகாலத்தில் சில இளைஞர்களால் தன்னெழுச்சியாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டம் அவர்களது கடின உழைப்பு, தியாகம் என்பவற்றினை உட்கொண்டு இன்று நாடு பரந்ததாகவும், பிரதான போக்காகவும் வளர்ந்துள்ளது. 70ம் ஆண்டின் முன்னுல் குட்டி பூர்ஷ்வா மாணவர், இளைஞர் மத்தியிலான எழுச்சிப்பாதையாக இருந்துவந்த கம்யூனிஸ்ட் (?) கட்சிகள் தமது குட்டி பூர்ஷ்வா அடிப்படை புதிய போக்கால் அரித்துச் செல்லப்படவே இல்லாதொழிந்துபோயின. குட்டிபூர்ஷ்வா இளைஞர்களின் புதிய 'உணர்ச்சி பூர்வமான போராட்டப்பாதை' எல்லா குட்டி பூர்ஷ்வாக்களின் அபிமானம் பெற்றதும் தமிழ் தேசிய பூர்ஷ்வாக்களின் தலைமையிலானதுமாக வளர்ந்தது இயல்பானதே!

சமூகம் சுரண்டுபவனும் சுரண்டப்படுபவனுமாக அடிப்படையாக பிரிந்துள்ள வர்க்க சமூக அமைப்பில் 'தமிழனுக்கென்ெருருநாடு' 'தமிழீழமே எம்மூச்சு' 'தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்' என்ற குரல்களெல்லாம் ஒரு புறம் தமிழ் மக்களது சனநாயக விடுதலையை வென்றெடுக்கும் போராட்டத்தில் ஈடுபடுவனவாயும் மறுபுறம், தமிழ் பூர்ஷ்வா பிரிவினது சுரண்டலுக்கு தமிழ்ப்பாட்டாளி வர்க்க, மக்கள் திரளை ஆட்படுத்துவனவாயும் உள்ளன என்பதை மறந்துவிட முடியாது. இவை ஒரு புறம் புரட்சிகரமாயும் மறுபுறம் மக்கள் விரோத, பிற்போக்கு குணும்சத்தினவாயும் உள்ளதனுல் தம்பின்னுல் மக்களைத்திரட்ட 'இனவாதப் பிரச்சாரங்களை' பரந்தளவில் கட்டவிழ்த்து விடுவதும் பரத்துபட்ட மக்களது வர்க்கப் போராட்டங்களை நசுக்கி அவர்களது வர்க்க உணர்வின் எழுச்சியை மழுங்கடிப்பனவாயும் உள்ளன. இவர்களது இந்த இனவாத பாஸிஸ உருவத்துக்கு தக்க விளைநிலைமாகவும் அடிப்படையாகவும் குட்டி பூர்ஷ்வாக்கள் உள்ளனர். இவர்களது இத்தகைய செயற்பாட்டினுல் தமிழீழ அரங்கில் ஒலிக்கும் ஒரே குரல் தேசிய பூர்ஷ்வா பிரிவினருதாகவே உள்ளது. சமூகத்தில் [பொருளாதார ரீதியாக ஆளுகை செலுத்தும் வர்க்கங்கள் அறிவாயுத ரீதியாகவும் ஆளுகை செய்வனவாய் உள்ளன என்பது யதார்த்த உண்மை ஆகும். எனவேதான் குட்டி பூர்ஸ்வாக்களை தமது பிரதான துணைசக்தியாக திரட்டியபடி தேசிய பூர்ஸ்வாக்கள் செலுத்தும் இந்த ஆளுகை ஆனது தமிழினத்தின் சிந்தனை, சொல், செயல் மீதும் செல்வாக்கு செலுத்துகிறது.

அதனுலேயே தேசிய பூர்ஷ்வா வர்க்கமானது தனது இயல்பேயான சமரச; மனப்பாங்கு லாப நோக்கு காரணமாக தேசிய விடுதலைப் போராட்டத்திலிருந்து நழுவி 'திம்பு' வழிச் சரணடைவை நோக்கி செல்லும் போது கூட தமிழ்க் தேசிய இனம் ஒட்டு மொத்தத்தில் அப்பாதையை பின்பற்ற வேண்டியுள்ளது. இந்த ஊசலாட்டங்களுக்கேற்ப போராட்டமும் ஊசலாடுகிறது இந்த ஊசலாட்டமும் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கால்களில் தம்மைக் கட்டிக் கொள்வதும் இனியும் தேசிய விடுதலைப் போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுப்பதில் பூர்ஷ்வா பிரிவுகளின் கையாலாகாத்தனத்தை அம்பலப்படுத்தியுள்ளது. பரந்துபட்ட குட்டிபூர்ஷ்வா இளைஞர்களும், மாணவர்களும் படிப்படியாக தமது கடந்தகால மயக்கங்களிலிருந்து விடுபட்டு வருகிருர்கள். தமது தலைவனுக இப் போராட்டத்தில் இருக்கப்போவது யார் என சிந்திக்கத் துவங்குகிறுர்கள். புரட்சியின் இயக்கு சக்தி எது என்ற பிரச்சனை அரங்குக்கு வந்து சேர்கிறது.

தேசிய விடுதலை (புரட்சி) என்பது எல்லா அடக்கப்பட்ட வர்க்கங்களுக்கும் பொதுவான தேவையாகும். எனினும் இரு முகாம்களான பாட்டாளி வர்க்கத்தரப்பு, முதலாளியப் பிரிவுகளின் நலன்களும், குறிக்கோள்களும், முரண்பட்டவை—எதிரானவையாகும். அந்த நிலைமையில் எதிரும் புதிருமான நலன்களையும், குறிக்கோள்களையும் கொண்ட பாட்டாளி வர்க்கமும், முதலாளி வர்க்கமும் இப்போராட்டத்தை தத்தம் தலைமையில் முன்னெடுப்பதற்கும் தத்தம் நலன்களுக்கிசைவாயும் தம் குறிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கோள்களை அடைவதற்காயுமே பயன்படுத்த முயலும். தமது** தலைமையை போராட்டத்**தில் நிறுவுவதற்காக** இவ்விரு பிரிவுகளும் **போராட்டத்தி**லீடுபடுவது தவிர்க்கவியலா**தது**ம், அவசியமானதுமாகும். சமாதான காலங்களில் அமைதியான, அரசியல், சித்தாந்த போராட்டங்களிலும், வேறு சூழ்நிலைகளில் ஆயுதப் போராட்டத்திலும் ஈடுபட பாட்டாளிவர்க்கமானது தவறுமாயின் அது தன்மீது பூர்ஷ்வாக்கள் தலைமையை நிறுவ விட்டுக்கொடுக்கும்.

பாட்டாளி வர்க்கமானது போராட்டத்தில் தனது தலைமையை நிறுவுவதும் தனது பாதையில் அதனை இட்டுச் செல்வதும் மக்கள் சனநாயக சர்வாதிகார அரசை நிறுவவும் வேண்டுமெனின் தன்னைப்பலமாக அணிதிரட்டிக் கொள்ளவேண்டும். தன்னை உறுதியாக ஸ்தாபனப்படுத்தியும் அதன் புரட்சிகர சக்தியை வலுப்படுத்துமாயின் மட்டுமே எல்லா மட்டம், இடங்களிலும் பாட்டாளிவர்க்கக் கட்சியை கட்டி அது போராட்டத்தில் தனது முத்திரையை பதிக்கக்கூடிய தீர்மானகரமான சக்தியாக மாறும். தனது அணியை பலப்படுத்தும் பணியை ஊக்கமுடன், வெற்றிகரமாக செய்யத்தவறும் ஒரு வர்க்கத்தால் தனது லட்சியப்பயணத்தில் வெற்றி பெறவோ ஏனைய வர்க்கங்கள் மீது தனது தலைமையை நிறுவவோ கூட இயலப் போவதில்லை.

“நமது எதிரிகள் யார்? நமது நண்பர்கள் யார்? புரட்சியில் இந்தப் பிரச்சினை முதல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. நம் நாட்டின் கடந்தகாலப் புரட்சிகள் எல்லாம் சாதித்தவை மிக குறைவாக இருப்பதன் அடிப்படைக் காரணம் அவை உண்மையான பகைவனைத் தாக்குவதற்கு உண்மையான நண்பர்களை ஐக்கியப்படுத்தத் தவறியதேயாகும்.”

பாட்டாளி வர்க்கமானது தனது கடமை, இலட்சியத்திற்கான பயணத்தில் பின்னடைவின்றி முன்னேற வேண்டுமாயின் தனது கட்சி ஸ்தாபனத்தை கட்டிப் பலப்படுத்துவதே உடனடியானதும் முதன்மையானதுமான கடமையாகும். அத்தகைய கட்சி ஒழுங்கமைப்போ, வழிகாட்டலோ அற்ற ஒரு வர்க்கத்தை, வர்க்க சக்தியை எண்ணிப்பார்ப்பதே அபத்தமாகும். தனக்கென சொந்த ஸ்தாபன பலங்களை கொண்டிராத வர்க்கமானது அடிமைப்பட்டிருக்க மாத்திரமே தகுதியானதாகும். அத்தகைய வர்க்கமானது ‘பாட்டாளிவர்க்க தலைமை’ என பம்மாத்து வாசகங்களை உச்சரிக்கும் திரிபுவாத, முதலாளியக்கும்பல்களின் வாலாக இழுபடமுடியுமேயொழிய தனது தலைமையை அரசியல், சித்தாந்த, ஸ்தாபனரீதியாக உருவாக்க முடியாது.

தமிழீழ தேசிய (சனநாயக) விடுதலைப் புரட்சியைப் பொறுத்தவரை பாட்டாளி வர்க்கத்தின் முன்பு இன்று இருவிதமான பாதைகளே இருந்து வருகின்றன. ஒன்று இத்தகைய சனநாயக (புரட்சிப்) போராட்டங்களில் கலந்து கொள்ளாது தன்னைத் தனிய வர்க்கப் போராட்டங்களில் மட்டும் குறுக்கிக் கொண்டு சமூகத்தின் பிறவர்க்கங்களிடமிருந்து துண்டித்துக் கொள்வது இத்தகைய செயலானது கடந்தகால கம்யூனிஸ்ட் கட்சிகளது இலட்சியப்பாதையாகும். இதன் மூலம் அவர்கள் சனநாயகப் போராட்டங்களை பூர்ஷ்வாக்களுக்கு கையளித்தும் பிறவர்க்கங்கள் மீதும் பூர்ஷ்வா தலைமையை உறுதிசெய்ய துணை நின்றும் செயற்பட்டார்கள். மற்றது இன்று நடைமுறையில் பிரதான போக்காக விளங்குகிறது. பாட்டாளி வர்க்கமானது தனது சொந்த வர்க்க விடுதலை உணர்வை கைவிட்டு சனநாயகப் போராட்டங்களில் வாலாக இழுபடுவதன் மூலம் போராட்டங்களின் மீது மட்டுமின்றி தம்மீதும் பூர்ஷ்வா தலைமையை நிறுவுவதற்கு விட்டுக் கொடுப்பதாகும்.

இந்தப் போக்குத்தான் இன்று ஆதிக்கம் வகிக்கின்றது. பாட்டாளிவர்க்க வெகுசனங்கள் பலரும் தமது வர்க்க விடுதலை, சுரண்டல் முதலிய அடிப்படை அம்சங்களை மறந்த நிலையில் இப்போராட்டத்திலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இழுத்துச் செல்லப்படுகிறார்கள். இங்கு பல பெரிய, சிறிய குழுக்களும் மார்க்சியம் பேசுகிறார்கள். பாட்டாளிவர்க்கத் தலைமையில் போராடுவோம் என முழங்குகிறார்கள் இக்குழுக்களில் பல வர்க்கப்பற்றுக் கொண்டவர்கள் உள்ளனர். மார்க்சியத்தை பூரணமாக தெரிந்து கொள்ளாமலேயே பாட்டாளிவர்க்க புரட்சியையும் மார்க்சிய சித்தாந்தத்தையும் நேசிக்கிறவர்கள் உள்ளனர். ஆனால் அவர்களும், அந்தக் குழுக்களும் இவர்களும் நடைமுறையில் என்ன செய்கிறார்கள். பாட்டாளிவர்க்கக் கட்சியைக் கட்டும் பணியில் வர்க்கத்தையும் மக்களையும் தட்டியெழுப்பி வர்க்கப் போராட்டங்களிலீடுபடுத்துவதன் மூலம் உணர்வூட்டி அணிதிரட்டும் வேலையை செய்கிறார்களா? இல்லை அவர்கள் தமது வர்க்க உணர்வை கைவிட்டு பாட்டாளி வர்க்கக் கட்சியை கட்டும் பணியை மறந்து வர்க்கத்தை ஸ்தாபனமாகத் திரட்டி அதன் தலைமையை நிறுவி போராட்டத்தில் அதன் முத்திரையை பதிக்கவில்லை. அதற்குப்பதிலாக தேசிய விடுதலைப் போராட்டத்தில் அன்றுண்டு பூர்ஷ்வா தலைமையின் கீழ் அதன் அரசியல் ஸ்தாபன மார்க்கங்களால் கவரப்பட்டு போனார்கள். பாட்டாளிவர்க்கக் கட்சியைக் கட்டும் பணிகளைக் கைவிட்டு தேசிய விடுதலை இயக்கங்களை (பூர்ஷ்வா கட்சிகளை) கட்டியெழுப்பும் பணியில் மூழ்கிப் போகிறார்கள்.

இவ்விரு சந்தர்ப்பவாத மார்க்கங்களுக்குப் பதிலாக தனது வர்க்கத்தை அணிதிரட்டி வர்க்க உணர்வில் புடமிட்டு தனது ஸ்தாபனத்தை பலப்படுத்துவதுடன் இத்தகைய சனநாயகப் போராட்டங்களில் ஈடுபட்டு அவற்றை ஊக்குமுடன் முன்னெடுப்பதன் மூலமே இப் போராட்டம், போராட்ட சக்திகளை தனது தலைமையின் கீழ் வென்றெடுத்து இத்தகு சனநாயகப் புரட்சிப் போராட்டங்களுடே தனதுஅரசை நிறுவவும், தனது விடுதலையை வெல்லவும் முயற்சி எடுப்பதே சரியான பாதையாகும்.

ஆனால் இன்று பாட்டாளி வர்க்கத்துக்கென ஒரு கட்சியில்லை. அது குறிப்பிடக் கூடியளவுக்கு ஒரு சக்தியாக இல்லை. அது நிராயுதபாணியாக நிர்க்கதியாக உள்ளது. இந்த நிலையில் அதனை அணிதிரட்டுவது, கட்சியைக் கட்டுவதென்பது பாரிய பணியாகும். கடின உழைப்பையும், நெஞ்சுறுதியையும் கொண்டிருந்தாலன்றி இப் பணியில் சஞ்சலமின்றி முன்னேறிச் செல்ல முடியாது. "நம் பாட்டாளி வர்க்கம் ஒரு வெற்றிடத்தில் வாழாததும் உண்மையானதும், பல்வேறு வடிவங்களைக் கொண்டதுமான வாழ்க்கையின் மத்தியில் இருக்கிறது. சிறுரக உற்பத்தியின் அடியாக உதித்தெழும் முதலாளியக் கூறுகள். ஒரு சிறுமுதலாளிய சூழலுடன் பாட்டாளி வர்க்கத்தை எல்லாப் புறமிருந்தும் வளைத்துக் கொள்ளுகின்றன. இது பாட்டாளி வர்க்கத்தை ஊடுருவி அதை கலங்கப்படுத்துகிறது. இதனால் பாட்டாளி வர்க்கம் தொடர்ந்து நெஞ்சுரமின்மை, ஒற்றுமையின்மை, தனித்துவக் கொள்கை, ஏற்றத்தாழ்வுக் கேற்ப ஊசலாடும் மனநிலை இவற்றிற்கு திரும்பிச் செல்லக்காரணமாகிறது"

ஆனால், "தவறான போக்கு ஒன்று அலைபோல எம்மை விழுங்க வரும் போது தனிமைப்படுத்தப்படலாமே என்ற அச்சம் எழக்கூடாது. அப் பேரலையோடு மோதவும் துணிந்து வெற்றி கொள்ளவேண்டும். எதிர் நீச்சல் போடுவதே ஒரு மார்க்சிய - லெனினிய கொள்கை"

சந்தர்ப்ப வாதங்களில் விழாது உறுதியுடன் தனது கட்சி ஸ்தாபனத்தை கட்டும் பாதையில் முன்செல்வதே பாட்டாளி வர்க்கத்துக்கு இன்றுள்ள ஒரே கடமையாகும் நாம் பாட்டாளி வர்க்கக் கட்சியினர். இந்த நாடு ஒரு விவசாய நாடாகும். இந்த நாட்டின் அடிப்படை முரண்பாடுகளிலொன்று விவசாயிகளுக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் இடையிலானதாக உள்ளதால் இந்த நாட்டின் (புதிய) சனநாயகப்புரட்சி பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் விவசாயிகளை பிர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தான சக்தியாகத் திரட்டி நிலப்பிரபுக்களின் நிலங்களை பறிமுதல் செய்யும் நிலப் புரட்சியாகவே உள்ளது. இப்புரட்சியை வெற்றிக்கு கொண்டு சென்று அதன் இலக்காக உள்ள நிலப்பிரபுத்துவத்தை தகர்ப்பதற்கு, நாம் தொழிலாள — விவசாயிகளின் நேச அணியொன்றை கொண்டிருந்தாக வேண்டும். இந்த அணியானது தனது போராட்டங்களின் வழியே இயல்பாகவே நடுத்தர விவசாயிகள், குட்டி பூர்ஷ்வா பிரிவினரை தன்னோடு தன்கீழ் திரட்டிக் கொள்ளும். புதிய ஜனநாயகப் புரட்சிக்கு இந்த வர்க்கங்களைக் கொண்டமைக்கப்படும் ஐக்கிய முன்னணி ஓர் அவசியத் தேவையாகும். இந்த ஐக்கிய முன்னணியானது எப்போதும் கீழிருந்து போராட்டங்களின் வழியே கட்டப்படுமென்பது இயல்பான உண்மையாகும்.

தேசிய முதலாளிய வர்க்கமானது இயல்பிலேயே நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டங்களில் அக்கறையற்றதாகவே உள்ளது. அதற்குப்பதிலாக அதுவும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பங்கேற்கத் தயாராகவுள்ளது. அந்த முதலாளிய வர்க்கத்திலும் சமரசப் பாங்கு, ஊசலாட்டம் என்பன உள்ளபோதும் கூட நாம் அதனுடன் ஓர் ஐக்கிய முன்னணியை கட்டுவதன் மூலம் அதனையும் பயன்படுத்தவும் எமது ஏகாதிபத்திய எதிர்ப்பு பணியை சரியாகச் செய்யவும் வேண்டும். இன்றுள்ள சூழலில் இத்தகையதொரு ஐக்கிய முன்னணி அத்தியாவசியமானதே! இதனைக் கட்டுவதன் மூலமே தேசிய முதலாளிகளை சமரசத்திலிருந்து [illegible] போராட்டப்பாதையில் தள்ளமுடியும். இந்த ஐக்கிய முன்னணியானது பொது வி[illegible]மலிருந்தே கட்டப்படமுடியும்.

ஐக்கிய முன்னணியென்பது தம்முள் முரண்பாடுகளை கொண்ட வர்க்கங்கள் பொது எதிரிக்கெதிராக கட்டும் அணியென்பது மறக்கக்கூடாத உண்மையாகும். எனவே அங்கு பொது எதிரிக் கெதிரான அளவுக்கு ஐக்கியம் வலியுறுத்தப்படும் போதும்கூட முதலாளி தொழிலாளி வர்க்கங்களின் முரண்பாடு அடிப்படையானது என்றவகையில் இரண்டும் தத்தம் சுயாதீனப் பாத்திரங்களை ஆற்றுவது அவசியமானதாகும். பாட்டாளிவர்க்கம் அந்தவகையில் சுதந்திரத்துடனும், சுயேட்சையுடனும் செயற்படத்தவறினால் அந்த ஐக்கிய முன்னணி பூர்ஷ்வா வர்க்கத்திடமான சரணடைவாகவே அமையும். பாட்டாளிவர்க்கம் சொந்த ஸ்தாபனத்தை கட்டத்தவறி அப்படியொரு ஐக்கியமுன்னணியில் ஈடுபடுவதென்பது ஒரு பூர்ஷ்வா கட்சியில் புகுந்து கொள்வதும் தனக்குத்தானே விலங்கு மாட்டிக் கொள்வதுமாகும்.

பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமும், முன்முயற்சியும் பாதுகாக்கப்படும் போதே அது பாட்டாளிவர்க்கத்துக்கு துணையான ஐக்கிய முன்னணியாக அமைய முடியும். பூர்ஷ்வா வர்க்கம் அப்போதும் பாட்டாளி வர்க்க சுயாதீனத்தை இல்லாதொழிக்க பாடுபடுகிறது. அதனது வர்க்கப் போராட்டத்தை கட்டுப்படுத்தவும் அதனது அமைப்பு வலுவை குறைக்கவும் முயற்சிக்கும். அதற்காக அது எல்லாத் துறைகளிலும் போராட்டம் நிகழ்த்தும், அது அரசியல், சித்தாந்தத்துறைகளில், ஸ்தாபனத் துறைகளில் பாட்டாளிவர்க்கத்தை கட்டுப்படுத்த வலது சந்தர்ப்பவாதத்தை 'எல்லாம் ஐக்கிய முன்னணியின் மூலம்' என்ற முழக்கத்தை தேசிய விடுதலையை முன்னெடுப்போம். அதுவே புதிய ஜனநாயகப் புரட்சியின் முன்னிபந்தனை எனும் முழக்கங்களை முன்வைக்கிறது. பாட்டாளிவர்க்மானது வர்க்கப் போராட்டங்களை நடத்துவதையும் சுயாதீனமாகச் செயற்படுவதையும் கட்டுப்படுத்த முனைகிறது. வர்க்கப் போராட்டமும், கம்யூனிஸ்ட் கட்சியும், செயலூக்கமுள்ள தொழிற்பாடும் ஐக்கிய முன்னணியை குலைத்துவிடும். அதன் ஒற்றுமை குலைந்துவிடும் எனக் கூறுகிறது. இப்படிக்கட்டுப்படுத்துவதன் மூலம் புரட்சி அணிகளில் பாட்டாளிவர்க்க சக்திகள் பல்கிப் பெருகுவதையும் புரட்சிகர ஐக்கிய முன்னணி ஸ்தாபனத்துக்கு ஒரு புரட்சி

www.tamilarangam.net

கரமான வர்க்கங்களின் அடிப்படை உருவாகுவதையும் வலுப்படுவதையும் தடுக்க கனவு காண்கிறது. அப்படி உறுதியான புரட்சிகர அடிப்படைகள் நிறுவப்படாது விடின் சுலபமாக தனது ஆதிக்கத்தை நிறுவவும் பாட்டாளிவர்க்க சக்திகளுக்கெதிரான 'இரத்தம் சிந்தவைக்கும்' ஒரு எதிர்ப்புரட்சிக்கவிழ்ப்பை சுலபமாகவே நடத்தும் வாய்ப்புகளை உத்தரவாதம் செய்துகொள்ளவும் முனைகிறது. இத்தகைய 'புரட்சி'கரமற்ற தேசியவாத மார்க்கத்தில் எந்த எதிர்ப் புரட்சியாளனும் கூட தேசியவாத முகமூடியை அணிந்துகொள்ளவும் தலைமையை கைப்பற்றி கவிழ்ப்பிலீடுபடவும் முடியும். முதலாளியத்தின் கோரிக்கைக்கிணங்க பாட்டாளிவர்க்கம் ஐக்கிய முன்னணியிலீடுபடுவதற்காக வர்க்கப் போராட்டத்தை கைவிடுமாயின் அது புரட்சியை கைவிடும் சரணடைவாகவே இருக்கும்.

ஆனல் பாட்டாளிவர்க்கப்பாதை இதற்குப்புறம்பானது. அது தனது வர்க்கப் போராட்டப்பாதையில் திடமாகச் செல்வதன் மூலம் புரட்சியின் மீது வர்க்கச் சக்திகளின் செல்வாக்கை வலுப்படுத்தவும் எதிர்ப்புரட்சியாளர்களின் முகமூடிகளை மக்கள் முன் கிழிக்கவும் உறுதியான புரட்சிகர அடிப்படைகளை நிறுவவும் பாடுபடும். அது உறுதியாக நிலப்புரட்சியை மைய அச்சாகக் கொண்ட புதிய ஜனநாயகப் பாதையில் முன்னேறிச் செல்வதன் மூலம் உருவாகிவளர்ந்துசெல்லும் மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசின் நிறுவுதலாக தேசிய விடுதலையை பெறமுயலும். எனவே தான் பாட்டாளிவர்க்கம் புதிய ஜனநாயகப் பாதையின் மூலமே தேசிய விடுதலை எனும் முழக்கத்தை உறுதியுடன் முன்வைக்கிறது.

அந்த அடிப்படையிலேயே நாம் பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணியில் ஈடுபடுகிறோம். பூர்ஷ்வா வர்க்கத்தின் பாத்திரம் முற்போக்கானதாக இருக்கும் வரை அங்கு ஐக்கியம் நிலவும். பிற்போக்கானதாக மாறும்போது அங்கு போராட்டம் தோன்றும். பாட்டாளிவர்க்கமானது தேவையான போதுகளில் பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கிய முன்னணியில் ஈடுபடவும் ஐக்கிய முன்னணியில் உடைத்துக் கொள்ளவேண்டியவேளையில் அப்படிச் செய்யவும் வேண்டும். அதன் மூலமே கட்சி உறுதியாக முன்னேறமுடியும்.

கட்சி, மக்கள்படை, ஐக்கிய முன்னணி இம் மூன்றும் புரட்சியின் முக்கியமான சக்திகளாகும். எனினும்கூட கட்சி அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதுவே எதிரியின் நிலைகளை தகர்த்து (புதிய) சனநாயகப் புரட்சியை வெற்றிக்கு கொண்டு செல்ல ஆயுதப்போராட்டம், ஐக்கியமுன்னணி எனும் இரு ஆயுதங்களையும் கையாளும் வீரனாகும். இவற்றை எச்சரிக்கையுடனும், லாவகமாகவும், கையாளுவதைப் பொறுத்தே வீரனது வெற்றி தங்கியுள்ளது.

இந்த நிலையிலேயே பாட்டாளிவர்க்கமானது தன்னைத் திரட்டிக்கொள்வதான கட்சிப்பணிகளிலீடுபடுவதும் ஆயுதப்போராட்டத்தை நடத்துவதும் ஐக்கிய முன்ணணியைக் கட்டியமைப்பதும் அத்தியாவசியமான பணிகளாகக் கொள்கிறது. இம் மூன்றிலும் பாட்டாளிவர்க்கக் கட்சியைக் கட்டும் பணியே அசாதாரணமான முக்கியத்துவம் வாய்ந்த கடமையாகும். அத்தகைய ஒரு வீரனை உருவாக்க தவறுவோமாயின் படைக்கலன்களாலென்னபயன்? அவை பூர்ஷ்வாக்களின் கைகளிலல்லவா சிக்கும். நாம் ஐக்கிய முன்னணி, ஆயுதப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணரத்தவறக்கூடாது. அப்போதும் கூட கட்சியின் நலன்களுக்காகவே அனைத்தும் என்பதை நினைவில் நிறுத்தவேண்டும். ஒரு வலுமிக்க கட்சியை கட்டுவதே பாட்டாளி வர்க்கத்தின் உடனடிப் பெரும் பணியாகும்.

''கட்சியை தைரியமாக வளருங்கள்! ஆனால் தீய பிரகிருதிகள் ஒருவரையும் உள் நுழைய அனுமதியாதீர்!''

பாட்டாளிவர்க்கக் கட்சியைக் கட்டியெழுப்புவோம்!

சனநாயக புரட்சிகர சக்திகளை திரட்டி பாட்டாளிவர்க்கத் தலைமையை நிறுவுவோம்!

நிலப்புரட்சிப்பாதையில் முன்னேறுவோம்!

புதிய ஜனநாயகப் புரட்சிப்பாதையில் தேசிய விடுதலையை வென்றெடுப்போம்! ★

## போராட்ட வடிவங்களையும் ஸ்தாபன வடிவங்களையும் பற்றி மாவோ

சீனாவில் யுத்தம்தான் முக்கிய போராட்டவடிவமாகும்; படைதான் முக்கிய ஸ்தாபன வடிவமாகும். வெகு ஜன ஸ்தாபனம், வெகு ஜன போராட்டம் போன்றவை கூட மிகவும் முக்கியமானவை ஆகும்; உண்மையிலேயே அவை தவிர்க்க முடியாதவையும் ஆகும்; எந்தச் சூழ்நிலையிலும் அவற்றை கவனத்தில் கொள்ளாமல் இருக்கக் கூடாது; ஆனால் அவற்றின் நோக்கமெல்லாம் யுத்தத்திற்கு சேவை செய்வதேயாகும். 1919ம் ஆண்டு மே 4ம் தேதி இயக்கக் காலகட்டத்திலிருந்து 1925ம் ஆண்டு மே 30ம் தேதி இயக்கக் கால கட்டம்வரை இருந்தது போல எல்லா ஸ்தாபனமும் போராட்டமும் ஒரு யுத்தம் தொடங்குவதற்கு முன்னால் யுத்தத்திற்கான தயாரிப்பில் ஈடுபடும். யுத்தம் தொடங்கியபின்னால் எல்லா ஸ்தாபனமும் போராட்டமும் நேரடியாகவோ மறைமுகமாகவோ யுத்தத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக வடக்கு நோக்கிய படையெடுப்பு கால கட்டத்தின்போது, புரட்சிக இராணுவம் தன்னுடைய பின்னணிப் பகுதிகளில் எல்லாஸ்தாபனமும் போராட்டமும் யுத்தத்துடன் ஒன்றிணைக்கப்பட்டது; வடக்குப்பகுதி யுத்த நிலப்பிரபுக்களின் பிரதேசங்களில் அவை மறைமுகமாக யுத்தத்துடன் ஒன்றிணைக்கப்பட்டன. மீண்டும் விவசாய புரட்சி யுத்தகால கட்டத்தில் செம்பகுதியிலுள்ள அமைப்பும் போராட்டமும் யுத்தத்துடன் நேரடியாக ஒன்றிணைக்கப்பட்டன. மீண்டும் தற்கால கட்டத்தில்—அதாவது எதிர்ப்பு யுத்தத்தின் போது—ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளின் பின்னணிப் பகுதிகளில் எதிரி தங்கியிருக்கின்ற பிரதேசங்களிலும் எல்லா ஸ்தாபனமும் போராட்டமும் நேரடியாகவோ மறைமுகமாகவோ யுத்தத்துடன் ஒன்றிணைக்கப்படுகிறது.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய அரசியல் போராட்டத்தில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி

சௌ என் லாய் 1926 டிசம்பர் 11

1926 குளிர் காலத்தில், வட திசைப்படையெடுப்பில் அடுத்தடுத்துப் பல வெற்றிகள் ஈட்டப்பட்ட போது, தொழிலாளர்கள்—விவசாயிகள் இயக்கம் துரித முன்னேற்றம் அடைந்து வரும்போது, கோமிந்தாங்கிலுள்ள வலதுசாரி சக்திகள் தமது எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி, கோமிந்தாங் கம்யூனிஸ்ட் ஒத்துழைப்புக்கும் தொழிலாளர் விவசாயிகள் இயக்கத்திற்கும் எதிரான உணர்வைக் கிளப்பி விட்டனர். சென்து ஷியூவைத் தமது தலைவராகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் அஞ்சிநடுங்கி, பாட்டாளிவர்க்கத்தின் தலைமையை உயர்த்திப்பிடிக்கத் துணிவின்றி, கோமித்தாங் வலதுசாரி அணியினருக்கு விட்டுக்கொடுத்து, சலுகைகளும் வழங்கினுர்கள். இந்த சூழ்நிலையின் போதுதான் இக் கட்டுரை எழுதப்பட்டு, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் குவாந்துங்—குவாங்ஸி கமிட்டியின் ஏடான "...மக்கள் வார இதழ்..." 037 வது வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டது.

இன்றைய அரசியல் போராட்டம் அரை—நிலப்பிரபுத்துவ சக்திகளைத் தூக்கியெறிந்து ஜனநாயகத்தை நிறைவேற்றும் ஒரே ஒரு இலட்சியத்தைக் கொண்டது என்று நாம்—உறுதியாக நம்பியிருக்கையில், கோமிந்தாங்குடன் கூடவே, மேலதிகமான ஒரு செயலூக்கமிக்க கம்யூனிஸ்ட் கட்சிக்கான தேவை என்ன? என்று சிலர் ஆச்சரியப்படுகிறுர்கள். ஓர் தீவிர செயற்பாடுடைய கம்யூனிஸ்ட் கட்சியிருக்கும் வரை, கோமிந்தாங்குடன் மோதல்களும் இறுதியில் ஒரு பிளவும் ஏற்படுவது சர்வநிச்சயம் என்று அவர்கள் கூறுகிறுர்கள்.

இந்தப் பிரச்சனை பற்றி கடந்த மூன்று ஆண்டுகளாக அதிகம் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வந்துள்ளது. நமது இன்றைய அரசியல் போராட்டத்தை மேலும் பலப்படுத்தவும், புரட்சிவாதிகளின் பரஸ்பர ஒருமைப்பாட்டையும் பரஸ்பர விளக்கத்தையும் விரிவுபடுத்தவுமே பின்வரும் குறிப்புகள் தேவைப்படுகின்றன.

(1) தேசியப் புரட்சி (என்பது) சீனுவின் எல்லா அடக்கப்பட்ட வர்க்கங்களுக்குமுள்ள பொதுவான விடுதலைப் பாதையாகும். இருந்தும் புரட்சியின் போக்கில் ஒவ்வொரு வர்க்கமும் அதற்கென சொந்த நோக்கங்களைக் கொண்டிருக்கும். குறிப்பாக, சனநாயகப்புரட்சி நிறைவேற்றிக் கொள்ளப்படும் போக்கில் ஒவ்வொரு வர்க்கமும் அடைவதற்கு அதனதன் சொந்த நலன்களைக் கொண்டிருக்கும். வர்க்கங்களின் நலன்கள் மிகமோசமாக வேறுபடுவதிலிருந்து, மோசமாக அடக்கப்படும் வர்க்கங்களான தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் விசேசமாக தமது நலன்களுக்காக வேலை செய்கின்றதும், தமது லட்சியத்திற்கு சேவிக்கின்றதும், தமது முன்னணிப் படையாக விளங்குகின்றதுமான கம்யூனிஸ்ட் கட்சியை வைத்திருப்பதானது ஓர் அவசியமானதாகியுள்ளது இயற்கையானதே! தொழிலாளர் விவசாயிகளுக்குச் சேவை செய்வதும், தேசிய புரட்சிப் பாதையில் அவர்களுக்கு வழிகாட்டிச் செல்வதுமான ஒரு கம்யூனிஸ்ட் கட்சியிருப்பது, புரட்சிக்காக உழைக்கும் பல்தரப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்க்கங்களின் தலைமையிலுள்ள கோமிந் தாங்குக்கு எவ்வழியிலும் இடைஞ்சலாக இருக்காது. மாறுக, இரண்டு கட்சிகளும் தமது நடைமுறை வேலைகளைப் பரஸ்பரத் பூர்த்தி செய்தும் ஆதரித்தும் நன்மையடை யவே செய்யும்.

(2) தேசியப் புரட்சியானது அடக்கி ஒடுக்கப்பட்ட சகல வர்க்கங்களினதும் பொது லட்சியமாய் இருந்த போதிலும், தேசிய முதலாளி வர்க்கம் சமரச மனப் பாங்குள்ளதாகவும், குட்டி முதலாளி வர்க் கம் அடிக்கடி ஊசலாடுவதாகவும் உள்ள அதே வேளையில், பாட்டாளி வர்க்கம் ஒன் றுதான் நீடித்த போராட்டத்தில் மிகவும் சமரசமற்ற புரட்சிகர வர்க்கமாய்த் திகழ் கிறது. தேசியப் புரட்சியின் உடனடிக் குறிக்கோள்களான தேசிய விடுதலையையும், ஜனநாயகத்தையும் அடைய வேண்டுமா ஞல், நாம் பாட்டாளி வர்க்கத்தைச் சார்ந்திருக்கவும, விவசாயிகளுடனும் கைவினைஞர்களுடனும் ஒன்றுபடவும், அணி சேர்ந்து எதிரிக்கு எதிரான ஒரு சமரச மற்ற போராட்டத்தில் குட்டி முதலாளி வர்க்கத்தையும் தேசிய முதலாளி வர்க்கத் தையும் தட்டியெழுப்பி அணிசேர்க்க வேண் டும். ஆகவே, தொழிலாளர் விவசாயிகளுக் குச் சேவை செய்யும் கம்யூனிஸ்ட் கட்சி தேசிய புரட்சி லட்சியத்தை துரிதப்படுத் துவதில் புரட்சிசக்திகளுக்கு தலைமை கொடுக்கவும் இதர வர்க்கங்களின் சமரச சுபாவத்தினுல் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளில் இருந்து பாதுகாக்கவுமே வேலை செய்கிறது. இத்தகைய நடவடிக்கை கள் இன்று தேசியப் புரட்சிக்கு தலைமை கொடுக்கும் கோமிந்தாங்குக்கு நன்மை செய்யவும் அதன் புரட்சிகர குணும்சத்தை வலுவாக்கவுமே செய்யும். அங்கு மோதல் களுக்கோ அல்லது பிளவுக்கோ அபாயம் ஒன்றும் கிடையாது. காரணம், அங்கு மோதல்கள் ஏற்பட்டால், புரட்சிகர தொழி லாளர் விவசாய வெகுஜனங்களுக்கும். ஏகாதிபத்திய எதிரிகளுடன் சமரசம் செய் யும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையி லுள்ள மோதல்களாகவே அவை அமை யும். அங்கு ஒரு பிளவு ஏற்பட்டால், அது ஒருபுறம் கோமிந்தாங்கின் புரட்சிகர இடது சாரிகள், கம்யூனிஸ்ட்டுக்களின் நேச அணிக் கும், மறுபுறம் புரட்சியைக் கைகழுவி விடும் வலதுசாரி அணிக்கும் இடையில் ஏற்படும் பிளவாகவே இருக்கும். கோமிந் தாங்கானது புரட்சிகரமானதாகவும் தேசி யப்புரட்சியின் தலைமைப் பாத்திரத்தை வகிப்பதாகவும் இருந்து வந்தால், அத் தகைய மோதல்களையோ பிளவுகளையோ பற்றி எண்ணிக் கவலை கொள்ள அதற்கு எக்காரணமும் இல்லை. இன்னும், மே 30 இயக்கம் முதல், புரட்சிகர தொழிலாளர் களும் விவசாயிகளும், சிறப்பாக தொழி லாளர்கள் தமது ஏகாதிபத்திய—எதிர்ப்பு நிலைப்பாட்டிலும் வேலைநிறுத்த தந்திரோ பாயங்களிலும் அழுத்தமாக நின்று, பிரித் தானிய ஏகாதிபத்திய வாதிகளோடு சமர சம் செய்ய முயன்ற முதலாளி வர்க்க உறுப்பினர்களுடன் அடிக்கடி மோதிக் கொண்டார்கள். லியாஒ சொங் காய் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, கோமிந்தாங்கின் இடதுசாரி அணி கம்யூ னிஸ்ட்டுக்களுடன் சேர்ந்து, அக்கொலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கும், கம்யூனிஸம், சோவியத் யூனியன் தொழிலாளி—விவசாயி இயக்கம் இவற்றை எதிர்க்கும் நபர்களுக் கும் எதிராகப் போராடியது. அத்தோடு, புரட்சிக்கு முழுக்குப் போட்டுக் கொண்ட பலர் கோமிந்தாங் அணிகளிலிருந்து உடைத்துக் கொண்டு வெளியேறினர். இது தேசியப் புரட்சிக்கோ அல்லது கோமிந் தாங்குக்கோ எவ்விதத்திலும் தீமையான தல்ல. மாறுக, புரட்சிகர சக்திகள் மேலும் ஐக்கியப்பட்டன. தேசியப்புரட்சி நாம் இன்று காணுமளவுக்கு முன்னேற்றம் அடைந்தது. உ—

(1) தேசியப்புரட்சியில் தொழிலாளர் விவசாயிகளுக்கு தலைமை தாங்குவதில் கம் யூனிஸ்ட் கட்சியின் நோக்கம் அந்நிய ஏகாதிபத்தியத்தையும் சீனுவின் அரை நிலப்பிரபுத்துவ சக்திகளையும் தூக்கியெறி வதாகும். அதன் கோரிக்கைகள் ஜனநாய கத்தின் எல்லைகளை மீறிச் செல்லமாட்டா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால், தொழிலாளர்கள் தமது வாழ்க்கைத் தரத்தை சிறிது விருத்தி செய்வதற்கான நியாயமான கோரிக்கைகளை முதலாளிகள் அடக்கியொடுக்கும்போது அல்லது விவசாயிகளின் விடுதலை இயக்கத்தை நசுக்குவதற்கு நிலப்பிரபுக்கள் பாரம்பரிய சக்திகளனைத்தையும் அணிதிரட்டும் போது, கம்யூனிஸ்ட்டுகள் தொழிலாளர் விவசாயிகளுடன் நின்று, அவர்களுடைய துன்பதுயரங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு இறுதிவரை போராடுவார்கள். ஜனநாயகத்திற்காகப் பாடுபடும்போது, கம்யூனிஸ்ட்டுகள் தொழிலாளர் விவசாயிகளின் பக்கத்தில் நின்று, ஏனையோர் செய்வதிலும் பார்க்க அவர்களுடைய போராட்டங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் பெரும் முக்கியத்துவத்தை இயற்கையாகவே அளிப்பர். இது தேசியப் புரட்சியின் எல்லைகளை கடப்பதாக அமையாது, பதிலுக்கு அதைத் துரிதப்படுத்துவதாக அமையும்.

(2) தேசியப் புரட்சியின் ஒரே ஒரு நோக்கம் இன்றைய சீனாவின் விடுதலையே என்பதை நாம் அறிவோம். அதே வேளையில் நமது புரட்சி உலகப் புரட்சியின் ஒரு பகுதியாகும். எனவே, புரட்சிகர கோமிந்தாங் தேசியப் புரட்சியில் தலைமைச்சக்தி என்பதையும், இப்போதுப்போராட்டத்தை நடத்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கோமிந்தாங்கில் சேர வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றோம். அப்படிச் செய்யும்போது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதன் தனித்துவத்தை இழந்து விட்டது; அதற்குச் சுதந்திரமான கருத்துக்கள் ஒன்றும் இனிமேல் இல்லையென்று அர்த்தமாகிவிடாது. கோமிந்தாங் கம்யூனிஸ்ட்டுக்களுடன் ஒரு நேச அணியை அமைத்துள்ளது; கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கோமிந்தாங்குடன் சேர்ந்துள்ளனர் என்பது இரு கட்சிகளுக்குமுள்ள நெருக்கமான உறவையும் கோமிந்தாங்கின் தலைமை நிலையையுமே காட்டுகிறது. ஆகவே, கம்யூனிஸ்ட்டுகள், கோமிந்தாங்கையும் தேசிய அரசாங்கத்தையும் ஆதரிக்கும் அதே வேளையில், ஜனநாயக எல்லைக்குள் நின்று தொழிலாளர் விவசாயிகளின் அரசியல், பொருளாதார கோரிக்கைகளை முன்வைத்து இருந்த போதிலும் ஒன்றன்பின் ஒன்றாக அவற்றை நிறைவேற்றுமாறு கோமிந்தாங் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும்.

(3) கோமிந்தாங் இடதுசாரி வலதுசாரி பிளவுகள் இல்லாத ஒரு புரட்சிகர கட்சியாக இருக்கும் என்பதாக நமது ஆர்வமிகு நம்பிக்கை இருந்தது. ஆனால் விசயங்கள் நாம் விரும்பியது போல நடைபெறவில்லை. தேசிய புரட்சி பல்வேறு வர்க்கங்களின் ஒரு நேச அணியால் நடத்தப்படுகிறது. அவற்றின் குணாம்ச வேறுபாடுகள் கோமிந்தாங்குள் பிரதிபலித்து, கோஷ்டிகள் தோன்றுவதற்கு இயற்கையாகவே இடமளிக்கிறது. கோமிந்தாங் வலதுசாரி அணி கம்யூனிஸ்ட்டுக்களையும், சோவியத்யூனியனையும் தொழிலாளர் விவசாயிகளையும் எதிர்ப்பதிலும், பாரம்பரிய சக்திகளுடன் கூட்டுச் சேர்வதிலும் ஊக்கமாகச் செயற்பட்டது வெளிப்படை; அதே சமயம், அதன் இடதுசாரி அணி தேசிய புரட்சிக்காகவும், ரஷ்யாவுடன் நேசஅணி, கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைப்பு, தொழிலாளர் விவசாயிகளின் நலன்களுக்கு ஆதரவு என்ற மூன்று புரட்சிக் கொள்கைகளையும் கடைப்பிடிப்பதன் மூலம் ஜனநாயகத்தின் நிறைவேற்றத்திற்காகவும் உறுதியாக உழைக்கின்றது. டாக்டர் சன்யற் சன் கோமிந்தாங்கை புனரமைத்து முதல் இத்தகைய வேறுபட்ட சுபாவங்களை எதிர்நோக்கும் போது, கம்யூனிஸ்ட்டுகள் வலதுசாரி அணிக்கு எதிராக சித்தாந்த, நடைமுறைப் போராட்டங்களை நடத்துவதில் இடதுசாரி அணியுடன் தொடர்ச்சியாக சீராக அணிவகுத்து நின்றார்கள். அதே வேளையில், வலதுசாரி அணியினர் ஜனநாயகத்தின் அர்த்தத்தைப் பூரணமாக கிரகித்து, படிப்படியாக இடது பக்கம் திரும்புவார்கள் என்றும், கோமிந்தாங்கின் விசுவாசமான உறுப்பினர்கள் எல்லாரும் இடதுசாரிகளாக மாறுவர் என்றும் கம்யூனிஸ்ட்டுகள் எப்பொழுதும் நம்பியிருந்தார்கள். நமது நிலை இவ்வாறாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கும் போது, கோமிந்தாங்கைப் பிளப் பதற்கு நாம் ஒருபோதும் விரும்பவில்லை. அது முழுவதும் புரட்சிகரமானதாக மாறுவ தையும் நாம் தடுக்கவில்லை.

(4) தொழிலாளர் விவசாயிகள் நலன் களில் அக்கறை, அரசியல் போராட்டத் தில் கம்யூனிஸ்ட்கட்சியின் நோக்கம், கோமிந்தாங் மீது வைத்துள்ள நம்பிக்கை —என்ற மூன்று காரணங்களையும், பொறுத் தவரையில் நாம் நமது கருத்துக்களை வெளிப் படையாகத் தெரிவிக்க வேண்டும். "கம் யூனிஸ்ட்டுகள் தமது [கருத்துக்களையும் நோக்கங்களையும் மறைப்பதை வெறுக்கி ன்றார்கள்" என்று மார்க்ஸ் கூறினார். ஆகவே, கம்யூனிஸத்தைப் பரப்பும் நோக்கில், நாம் அடிக்கடி நமது அரசியல் கருத்துக்களைப் பகிரங்கமாகக் கூற வேண்டும் கோமிந் தாங் அரசாங்கத்தின் கீழ், நமது அரசியல் கருத்துக்கள், விமர்சனங்கள் எல்லாம் நன் நோக்கங்கொண்டவையே. அது அவற்றை யேற்றுக் கொள்கின்றோம் என்று நாம் இயல்பாகவே நம்புகின்றோம். ஏனென்றால், ஏகாதிபத்திய [வாதிகள், யுத்தபிரபுக்கள், அரை—பிரபுத்துவ சக்திகள் ஆகியோரின் பகைமையான விமர்சனங்கள். பிரிவினை வாதப் பிரச்சாரத்திலும் பார்க்க அவை அடிப்படையில் வேறுபட்டவை. கோமிந் தாங்கிலுள்ள தோழர்கள் இத்தகைய நன்நோக்கமுடைய விமர்சனங்களை ஏகாதி பத்திய வாதிகளும் பிற்போக்கு வாதிகளும் வேற்றுமைகளை விதைப்பதற்காகப் பரப் பும் [வதந்திகளுடனும் முயற்சிகளுடனும் சமப்படுத்த முனைகிறார்கள். அல்லது, உண் மைகளை அலட்சியம் செய்துவிட்டு அர சாங்க உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள் ஆகியோரின் சட்ட விரோத செயல்களை ஆட்சேபித்து, கோமிந்தாங் அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளை விமர்சனம் செய்பவர்களை, கோமிந்தாங் முழுவதையுமே குற்றம் சாட்டுவதாகவும், தேசிய அரசாங்கத்திற்கு சதிசெய்வதாக வும் கருதலாம். அப்படிச் செய்தால், நிரப ராதிகள் மீது யதேச்சாதிகாரக் குற்றச் சாட்டுகளை சுமத்துபவர்கள் ஆவர். உதா ரணமாக, சமீப மாதங்களில் அரசாங்க உத்தியோகத்தர்களும் ராணுவ அதிகாரி களும் தொழிலாளர்களை அடக்கியொடுக்கி விவசாயி இயக்கத்தை சீர்குலைத்த சம்பவங் கள் பல இடம் பெற்றன. இந்த "சட் டத்தை மீறுபவர்களை" நாம் விமர்சித்த போதும் தொழிலாளர் விவசாயிகள் கோரிக் கைகளை முன் வைத்த போதும், கோமிந் தாங் அரசாங்கம் குற்றவாளிகளைத் தண்டிப் பதன் மூலம் தொழிலாளச் விவசாயிகள் பற்றிய அதன் சொந்தக் கொள்கையை பாதுகாக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம் கோமிந்தாங்கிலுள்ள இடதுசாரித் தோழர் களின் பிரசுரமான "தேசிய வார இதழ்" கூட "கோமிந்தாங் அரசாங்கத்திலுள்ள எந்த ஒரு அதிகாரியும் விவசாய — தொழி லாளர் இயக்கத்திற்கு உதவவும், அதைப் புரட்சிக்கு சேவையாற்றுமாறு செய்யவும் தவறக்கூடாது. விவசாய தொழிலாளர் இயக்கத்திற்கு சேதம் விளைவிக்கின்ற அல் லது அதைக் குறைத்து மதிப்பிடுகின்ற உறுப்பினர்களை நமது கட்சி வைத்திருக்கக் கூடாது. நமதுகட்சியின் கீழுள்ள அரசாங் கம் இச் சம்பவங்களைக் கையாளும் பொழுது உருக்குப் போன்ற கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். நமது கட்சி மக் களின் நம்பிக்கையையும் ஆதரவையும் வென் றெடுக்கும் என்பது நமது இடைவிடாத நம்பிக்கை. ஆனால் துர்அதிஷ்டவசமாக அதிகாரத்திலுள்ள இந்தக்கட்சி அங்கத்த தவர்கள் செய்ததெல்லாம் அவர்களை அந் நியப்படுத்தியதேயாகும். எவ்வளவு கவலைக் குரிய விஷயம் இது" என்று கூறியிருந்தது "..... இக் கட்சி வெகுஜன ஆதரவை இழப் பதையோ அல்லது அழிவதையோ கூட நாம் விரும்பவில்லை. இதுவே 'கட்சியின் பாதுகாவலர்களின்' இடைவிடாத கவலை யாகும். படிப்படியாக விழித்தெழுந்து வரும் மக்களை புரட்சியின் பெயரில் குருட்டுத்தன மாகச் செயற்படத் தள்ளிவிடக் கூடாது. அன்றி, ஸ்தாபனப்படுத்தப்பட்ட மக்களை உண்மைக்கு புறம்பான வாக்குறுதிகள் மூலம் ஏமாற்றி மாய்மாலம் செய்யக் கூடாது. இல்லை, நாம் அவர்களுக்கு அந்த வேலையைச் செய்ய முடியாது. தற்பொழுது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நமது கட்சிபற்றி மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய அவசியத் தேவை இருக்கின்ற சமயத்தில், இத்தகைய சதிவேலைகள் மக்களை அந்நியப்படுத்தி, நீங்கள் கண்டிக்கின்ற செங்கெங் போன்ற நபர்கள் முன்னணிக்கு வரவும், மக்கள் ஆதரவைப் பெறவும் மாத்திரம் துணைசெய்யும். இன்னும், இது கட்சியையும் ஊறுபடுத்த மட்டுமே செய்யும். செங்கெங் போன்ற அனைவரையும் நீங்கள் கொல்ல வேண்டுமென்ருல், அதை எவ்வாறு செய்யப் போகிறீர்கள். இது முடிவில்லாத ஒரு கடமையாகும். இவைதான் உண்மைகள் இவை கவலைக்குரியனவாகும்........'' இத்தகைய கடுமையான விமர்சனங்களுடன் ஒப்பிடும் போது, நமது விமர்சனங்களை மிதமிஞ்சியவை என்று எப்படிக் கூற முடியும்? கடந்த மூன்று ஆண்டுகளாக நம்முடன் எவ்வளவும் சம்பந்தமில்லாத வதந்திகள், கயிறு திரிப்புகள், குழப்பங்கள் அனைத்தையும் கம்யூனிஸ்ட் தூண்டுதல், தொல்லை கொடுப்புகள் என்று சொல்லப்பட்டு வந்தன. நமக்கும் இது போதும் என்ருகி விட்டது. கோமிந்தாங் இடதுசாரி அணியிலுள்ள தோழர்கள் கூட இத்தகைய அநீதியான குற்றச் சாட்டுக்கள் பலவற்றிற்கு இலக்காகிருர்கள். அவர்களுக்கு மறுத்துரைக்கப்படும் அர்த்தம் யாது? கோமிந்தாங்கிலுள்ள நமது புரட்சிகரத் தோழர்கள் நாம் எந்த நிலைப்பாட்டிலிருந்து விமர்சனம் செய்கிறோம். என்பதை விளங்கிக் கொள்ளும் வரை, அவர்கள் போராட்டத்தை தொடரும் வரைக்கும் தேசிய புரட்சியானது இறுதியில் வெற்றி பெறுவது நிச்சயம்.

இறுதியில் உரக்கப் பிரகடனம் செய்வோமாக;

புரட்சி வாதிகள் அனைவரும் ஒன்று படுங்கள்!

அடக்கியொடுக்கப்பட்ட வர்க்கங்கள் அனைத்தும் ஒன்றுபடுக!!

**குறிப்புகள்:-**

(1) சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தஸ்தாவேஜு சிலவற்றில் ''அரை—நிலப்பிரபுத்துவ சக்திகள்'' என்ற சொற்ருெடர் யுத்தபிரபுக்கள், அதிகார வாதிகள், அந்நியநிறுவனங்களின் தரகு முதலாளிகள், நில பிரபுக்கள், பிரதேச கொடியர்கள் முதலியோரைக் குறித்தது. இதே அர்த்தத்தில்தான் இந்தொடர் இங்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது.

(2) கோமிந்தாங் டாக்டர் சுன் யட் சன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியாகும். 1905ல் டாக்டர் சுன் யட் சன் தலைமைதாங்கிய ஸிங் சொங் ஹுய் (சீனுவின் மறுமலர்ச்சிக்கான இயக்கம்), ஹுவா ஸிங் ஹுய் (சீனுவின் புனர் வாழ்வுக்கான இயக்கம்) குவாங் பு ஹுய் (அந்நிய ஒடுக்குமுறையை உடைக்கும் இயக்கம்), ஆகியவற்றுடன் இணைந்து, ரொங் மெங் ஹுய் அல்லது சீனப்புரட்சிக் கழகத்தை அமைத்தது. 1811 புரட்சியை நடத்திய இக்கழகத்தின் தலைவராக டாக்டர் சுன் யட் சன் பதவி ஏற்ருர். இக்கழகம் 1912ல் வேறு சில சிறிய கட்சிகளுடன் சேர்ந்து கோமிந்தாங்காக (தேசிய கட்சி) புனரமைக்கப்பட்டது. அது வட திசை யுத்தபிரபு யுவன் ஷிகாய் என்பவனுடன் ஒரு சமரசத்திற்கு வந்து, அடிப்படையில் ஒரு அதிகாரத்துவ அரசியல்வாதிகளின் குழுவாக மாறியது. யுவன் ஷிகாயின் ஆட்சியை எதிர்ப்பதற்காக, 1914ல் டாக்டர் சுன் யட் சன் கோமிந்தாங் உறுப்பினரில் ஒரு பகுதிக்குத் தலைமை தாங்கி சீன புரட்சிக் கட்சியை உருவாக்கினர். 1919 அக்டோபரில் அது சீன தேசியகட்சி (கோமிந்தாங்) என்று பெயரிடப்பட்டது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் உதவியுடன் டாக்டர் சன் 1924 ஜனவரியில் தேசியக் கட்சியைப் புனரமைத்தார். புனரமைக்கப்பட்ட இத் தேசிய கட்சி அல்லது கோமிந்தாங் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத் ஏகாதிபத்திய — எதிர்ப்பு, நிலப்பிரபத்துவ —எதிர்ப்பு கருத்துக்களையேற்று, டாக்டர் சுன்னின் மூன்று மக்கள் கோட்பாடுகளுக்கு புதிய உள்ளடக்கத்தை (அர்த்தத்தை)— கொடுத்து, ரஷியாவுடன் நேச அணி, கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைப்பு, தொழிலாளர் விவசாயிகளுக்கு உதவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யென்று முப்பெரும் கோட்பாடுகளை வகுத்துக் கொண்டது. இது கோமிந்தாங்—கம்யூனிஸ்ட் ஒத்துழைப்பின் முதலாவது கட்டத்தை தொடக்கி வைத்தது. இந்த ஒத்துழைப்பின் அடிப்படையில் வடதிசைப் படையெடுப்பு நடத்தப்பட்டது. இந்தக் கால கட்டத்தில் கோமிந்தாங் தொழிலாளர், விவசாயிகள், குட்டி முதலாளிகள், தேசிய முதலாளிகள் ஆகியோரின் ஒரு ஜனநாயக புரட்சிகர நேச அணியாக விளங்கியது. 1927 ஏப்பிரலில், சியாங்கை ஷேக் நடத்திய எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து, கோமிந்தாங் சாராம்சத்தில் பெரும் நிலப்பிரபுகளையும், பெரும் முதலாளிகளையும் பிரதிநிதிப்படுத்தும் ஒரு பிற்போக்குக் கும்பலாக மாறியது.

(3) மே 30 இயக்கம் என்பது 1925 மே 30ல் ஷங்காயில் நடந்த வதைகளால் மூட்டிவிடப்பட்ட ஒரு தேசிய ரீதியான ஏகாதிபத்திய — எதிர்ப்பு, தேசபக்த இயக்கமாகும். அன்றைய தினம் ஷங்காயில் ஏறக்குறைய 10,000 மக்கள் சர்வதேச குடியிருப்பில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டார்கள். பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளால் அவர்கள் மிருகத்தனமாக வதை செய்யப்பட்டது மக்கள் அனைவரினதும் கோபத்தைக்கிளறிவிட்டது. பெருந்தொகையான தொழிலாளர்களும், மாணவர்களும், வர்த்தகர்களும், விவசாயிகளும் பல ஆர்ப்பாட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் நடத்தியதோடு அது ஒரு தேசிய ரீதியிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசபக்த இயக்கமாக வளர்ந்தது.

(4) ஏகாதிபத்தியவாதிகள் தூண்டுதலினால் கோமிந்தாங் வலதுசாரி அணியினர் 1925 ஆகஸ்ட் 20ல் குவாங்சோவில் லியாஓ சொங் காய் என்பவரைக் கொலைசெய்வித்தார்கள். லியாஓ கோமிந்தாங்-கம்யூனிஸ்ட் ஒத்துழைப்பைப் பேணிக்காத்த கோமிந்தாங் இடதுசாரி அணியின் தலைவராவர். இத்தகைய ஒரு பெரிய மனிதனின் கொலையை விசாரிப்பதற்காக, லியாஓவின் கொலை விசாரணைக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அதில் சௌ என் லாய் அவர்கள் ஒரு உறுப்பினர் ஆகவிருந்தார்.

(5) கார்ல் மார்ஸ் - பிறெடறிக் எங்கெல்ஸ்:- கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை. ஆங்கிலப் பதிப்பு. பெய்ஜிங் அந்நிய மொழி பதிப்பகம் 1973. பக்கம் 77.

(6) மாஓ சே துங் "ஷைகாங் சம்பவம் முதல் விவசாயிகளின் இயக்கம் வரை", "தேசிய வார இதழ்" இல. 3, (1926 அக்டோபர் 23) இக் கட்டுரை, பிரதேச கொடியவருடனும் தீய பெருங் குடியினருடனும் கூட்டுக் சேர்ந்து விவசாய இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரான கெங்கெங் என்பவரை கட்டுக்கொன்றதற்காக குவாங்துங் மாகாண ஷைகாங் மாவட்டத்தின் ராணுவ, நிர்வாக அதிகாரிகளை அம்பலப்படுத்தி கண்டித்துள்ளது.

> யுத்தத்தில் ஆயுதங்கள் ஓர் முக்கியமான அம்சம்; ஆனல் தீர்க்கமான அம்சம் அல்ல. தீர்க்கமான அம்சம் மக்கள் அன்றி பொருட்கள் அல்ல. பலப்போட்டி என் என்பது இராணுவ பலம், பொருளாதார பலம் இவற்றின் போட்டி மாத்திரமல்ல; மனவுறுதி இவற்றின் போட்டியுமாகும். இராணுவ பொருளாதாரபலமும் மக்களால் தான் ஓச்சப்படுகிறது.
>
> - மாஓ -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய விடுதலைப் போராட்டமும் புதிய சனநாயகப் புரட்சியும்

## 1

தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக பல்வேறுவிதமான கருத்துகளிடையே மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திரிபுவாதிகளும், சித்தாந்த வரட்டுவாதிகளும், தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக ஊக்கமான விவாதத்தில் ஈடுபடுவதற்கு மார்க்சியத்தை பயன்படுத்திவருகிறார்கள். மார்க்சியம் எந்தவொரு வரலாற்று ரீதியான பிரச்சனைகட்கும் ஒரே தீர்வை மட்டுமே பொருந்துவதாக உபதேசம் செய்வதில்லை. சமூக இயங்கியலைப் புரிந்துகொள்ளவும் பிரச்சனையின் தன்மையை விளங்கிக்கொண்டு அதற்கேற்ற தீர்வுகளைக் கண்டுகொள்ளவும் மார்க்சிசம் கற்றுக்கொடுக்கிறது. தேசிய இனப்பிரச்சினைகளை மார்க்சிசம் வரலாற்றில் பல்வேறு வழிகளில் தீர்த்துவைக்க வழிகாட்டியுள்ளது. வரலாற்றில் ஏகாதிபத்திய உருவாக்கத்திற்கு முந்திய காலகட்டத்திலும், ஏகாதிபத்திய காலகட்டத்திலும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக அது புதிய வழிமுறைகளை எங்களுக்குப் போதித்துள்ளது.

கம்யூனிஸ்ட்டுக்கள் மார்க்சியத்தை தமது சொந்த தத்துவமாக, விடிவுக்கான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்கிறார்கள். மாக்சிசம், வர்க்கமுரண்பாடுகளும், அதன் காரணமான கொடிய சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறைகளும் நிலவும் இந்த சமூகத்தின் விடிவுக்கான வழியை கம்யூனிஸ்டுகளுக்கு கற்றுக்கொடுக்கும் பாட்டாளி வர்க்கத்தின் தத்துவமாகும். பாட்டாளிவர்க்கம் சமூக அதிகாரத்தை கையிலெடுத்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு, அதன்மீதான தளைகளை உடைப்பதற்கு வழிகாட்டுகிறது மாக்சிசம். எனவே அது, எந்த வரலாற்றுக் கால கட்டத்திலும், பாட்டாளிவர்க்கத்தின் நலன் அதன் விடுதலை என்ற நோக்கிலேயே சமூகப் பிரச்சனைகளை அணுகுகிறது. வர்க்க சமுதாயத்தில் அனைத்தும் வர்க்க சார்பானவையே என்று போதிக்கும் மாக்சிசம், பாட்டாளி வர்க்கத்தை சார்ந்து நின்று கம்யூனிஸ்ட்டுகளுக்கும் மக்களுக்கும் வழிகாட்டுகிறது.

தேசிய இனப்பிரச்சினையிலும், மாக்சிச வழிகாட்டல், பாட்டாளி வர்க்க சார்பானதாகவே, உலகெங்கும் வாழ்கின்ற ஒடுக்கப்படும் பாட்டாளிவர்க்கத்தின் விடுதலையை நோக்கமாக கொண்டதாகவே செயற்படுகிறது.

## 2

### தேசிய இனப்பிரச்சினையும் மாக்சிசமும்

தேசிய இனப்பிரச்சினை பற்றி மாக்சிசம் நமக்கு போதிப்பது என்ன? தேசிய இனப்பிரச்சினை என்பது, வெறுமே ஒரு சனநாயகப்பிரச்சினை அல்ல. மாறாக அது பொருளியல் அடித்தளங்களை தன்னகத்தே கொண்டே எழுகின்றது. தேசங்கள் உருவாதலின் வரலாற்றுத் தேவையையும், அது உருவாதலில் ஏற்படும் தடைகளையும் பற்றி ஆராய்வு செய்து தேசிய இனப்பிரச்சினையின் தோற்றத்தினை மாக்சிசம் விளக்குகிறது கூடவே அதற்கான தீர்வுகளையும் அது தனது ஆய்வில் சுட்டிக்காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய இயக்கங்களின் தன்மைபற்றி லெனின் எழுதுகிறார்-

'உலக முழுவதிலும் முதலாளித்துவமானது நிலப்பிரபுத்துவம் மீது இறுதி வெற்றி கொள்ளும் காலகட்டம் தேசிய இயக்கங்களுடன் இணைந்துள்ளது. விற்பனைப் பண்ட உற்பத்தியின் முழுவெற்றிக்கு உள்நாட்டு மார்க்கட்டை பூர்ஷ்வாக்கள் கைப்பற்றவேண்டியது அவசியம்; ஒரே மொழி பேசும் மக்களைக் கொண்ட அரசியல் ரீதியில் ஐக்கியப் படுத்தப்பட்ட நிலப்பரப்புகள் அதற்கு வேண்டும். அம்மொழியின் வளர்ச்சிக்கும் அதன் இலக்கியம் உருப்பெற்று திகழ்வதற்கும், முட்டுக்கட்டையாக உள்ள தடைகள் அற்றப்பட வேண்டும். இங்கேதான் தேசிய இயக்கங்களின் பொருளாதார அடித்தளம் இருக்கிறது மனித உறவுகளுக்கு முக்கியசாதனம் மொழி. நவீன முதலாளித்துவத்திற்கு ஏற்ற அளவில் உண்மையிலேயே சுதந்திரமான, விரிவான வாணிகத்திற்கும், மக்கள் சுதந்திரமாகவும் பல்வேறு வர்க்கங்களாக அமைவதற்கும், இறுதியாக மார்க்கட்டுக்கும், ஒவ்வொரு சிறிய, பெரிய உடைமையாளனுக்கும், விற்போருக்கும் வாங்குவோருக்குமிடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்கும் மிகமிக தேவையான சூழ்நிலைகள், மொழியின் ஐக்கியமும் தடையற்ற வளர்ச்சியும்தான்.

ஆகவே, ஒவ்வொரு தேசிய இயக்கத்தின் போக்கும் நவீன முதலாளித்துவத்தின் தேவைகள் மிக நன்றாகப் பூர்த்தி செய்யப்படவாய்ப்புள்ள தேசிய அரசுகள் அமைப்பதற்கான வழியிலானது.'

[தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதமும் சில பிரச்சனைகள்-லெனின்; பக்கம் 73]

எனவே பொருளாதார அடித்தளங்களைக் கொண்டே தேசங்களும், தேசிய அரசுகளும் உருவாகின்றன. தேசம் பற்றி ஸ்ராலின் வகுத்த வரையறை ஒரு முழுமையான, தேசம் பற்றிய கருத்தை சுருக்கமாகத் தருகிறது

'ஒரு தேசம் என்பது பொதுவானமொழி, ஆட்சிப்பகுதி, பொருளாதார வாழ்வு மற்றும் மன இயல்பு ஆகியவற்றைக் கொண்டு வரலாற்று ரீதியாக உருவாகிய நிலையான மக்கள் சமூகமாகும்'

[மார்க்சிசமும் தேசிய இனப்பிரச்சனையும் — ஸ்ராலின். பக்கம்-10]

இது தேசங்கள் உருவாகுவதையும், தேசங்களைப் பற்றியும் ஒரு பொதுவான மார்க்சிய வரையறையாகும். அவ்வாறுயின் தேசிய இனப்பிரச்சனை எவ்வாறு உருவாகிறது?

'ஒரு தேசிய இனத்தின் பொருளாதார வாழ்வு, மொழி, கலாச்சாரம் இவற்றின் தங்குதடையற்ற வளர்ச்சி அனுமதிக்கப்படவில்லையெனின் அங்குதேசிய இனப்பிரச்சனை ஆரம்பமாகிறது. ஒரு நாட்டின் ஆளும் வர்க்கம் அங்கு ஜனநாயகத்தை அனுமதிக்கவில்லையெனின், ஜனநாயக அமைப்பைக்கொண்டு சுயேட்சையான முதலாளித்துவ வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும்போது அந்நாடுகளில் தேசிய ரீதியில் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்புக்கள் இருக்குமேயானல் அப்பொழுது அங்கு நிலவும் ஜனநாயகமற்ற ஆட்சி முறையானது அத்தேசிய இனங்களின் சுயேட்சையான வளர்ச்சிக்கு விலங்கிடுகிறது. அதன் மூலம் அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கே விலங்கிடுகிறது. அப்போது தேசிய இன ஒடுக்குமுறையும் அதனை எதிர்த்து தேசிய இயக்கங்களும் தோன்றுகின்றன. இம்முரண்பாட்டை தேசிய இனப்பிரச்னை என்கிறோம்.'

[தேசிய சுயநிர்ணய உரிமைப் பிரச்சனையும் முதலாளித்துவ தேசியவாதமும் - பக் 6,7]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாருக உருவாகும் தேசிய இனப் பிரச்சனைகள் வரலாற்று ரீதியில் மூன்று வகையான தீர்வுகளுக்குள்ளாகியிருப்பதைப் பார்க்கிருேம். ஏகாதிபத்தியத்திற்கு முந்திய முதலாளித்துவத்தின் ஆரம்பநிலையில், நிலப் பிரபுத்துவ ஆட்சிகளைத் தகர்த்து தேசங்கள் தனியரசுகளாக உருவாகியதை நாம் காணலாம். அதாவது, இந்த நிகழ்ச்சிகள், உலக முதலாளித்துவப் புரட்சியின் அம்சங்களாக இருந்தன. இவைகளை மார்க்சிசம் ஆதரித்தது. இவை பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கு வாய்ப்பான சூழ்நிலைகளை உருவாக்கும் முற்போக்கான நிலையை எடுப்பதனுல், மார்க்சிசம் இந்த வகையான தீர்வினை ஏற்றுக் கொண்டது. அடுத்தகட்டமான முதலாளித்துவ வளர்ச்சி தாமதமாகவே முன்னேறிய கிழக்கைரோப்பிய நாடுகளில் எழுந்துவந்த தேசிய இனப்பிரச்சனை. இப்பிரச்சனையில் மார்க்சிசம் முதலாவது தீர்வினை கைக்கொள்ளவில்லை. மாருக அன்று வரலாற்று ரீதியாக ஏற்பட்ட சமூக மாற்றங்களை அது கணக்கிலெடுத்துக் கொண்டது. உலக முதலாளித்துவம் அதன் உச்சக்கட்டமான ஏகாதிபத்திய நிலையை எடுத்ததைத்தொடர்ந்து, முதலாளித்துவமானது] வரலாற்று ரீதியாக தன் புரட்சிகரத்தன்மைகளை இழந்து பிற்போக்கு நிலையை எடுக்கத் தொடங்கியது. இந்தநிலையில் முதலாளித்துவ அரசுகள் தோற்றம் பெறுவதன் சாத்திய மின்மையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, முதலாளித்துவப் புரட்சிக் காலத்தின் முடிவை மார்க்சிசம் தெளிவுபடுத்திற்று, பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்டத்தின் ஆரம்பத்தை அது சுட்டிக்காட்டிற்று. முதலாவது பிரச்சனையில் முதலாளித்துவப் புரட்சியை ஏற்றுக்கொண்டு, முதலாளித்துவப் புரட்சியின் ஒரு அம்சமாக தேசிய இனப்பிரச்சனைகளுக்கான தீர்வினைப் பார்த்த மார்க்சிசம், இப்போது அதை பாட்டாளிவர்க்கப்புரட்சியின் ஒரு அம்சமாகப் பார்த்தது. உலக சமூக இயக்கப் போக்கின் வளர்ச்சிக்கான பாதையைத் திறந்துவிட, இனி முதலாளி வர்க்கமல்ல, பாட்டாளிவர்க்கமே தலைமையேற்று புரட்சியைத் தொடர வேண்டுமென மார்க்சிசம் அறைகூவியது. பாட்டாளி வர்க்கப் புரட்சியை நடாத்தி சோசலிச அரசினை உருவாக்கவும், அங்கு தேசிய இனப்பிரச்சினையை தீக்த்துவைக்கவும் மார்க்சிசம் போதித்தது.

> 'முதலாளித்துவப் புரட்சியிலிருந்து பாட்டாளிவர்க்கம் ஒதுங்கி நிற்கக் கூடாது. அதன்பால் அசிரத்தையாக இருக்கக்கூடாது. புரட்சித்தலைமையை முதலாளிவர்க்கம் எடுத்துக் கொள்வதை அனுமதிக்கக் கூடாது. அதற்கு மாருக புரட்சியை சாதித்து முடிவுக்கு கொண்டு வருவதற்கு தானே அதில் சக்திமிக்க பங்காற்ற வேண்டும். முரணற்ற பாட்டாளிவர்க்க சனநாயகத்துவத்திற்கு மிகுந்த உறுதியுடன் போரிடவேண்டும் என்று பாட்டாளி வர்க்கத்திற்கு மார்க்சிசம் போதிக்கிறது.'
>
> [சமூக ஜனநாயக வாதத்தின் இரு போர்த்தந்திரங்கள்– லெனின்]

மூன்ருவது வகையான கட்டம் ஏகாதிபத்திய காலகட்டம்; உலக முதலாளித்துவம், சர்வதேசிய நிலையை எடுத்து ஏகாதிபத்தியமாகி உலகத்தை கூறுபோட்டுவிட்ட காலகட்டம்; ஈவிரக்கமற்று பின்தங்கிய நாடுகளையும் இன்னும், முதலாளித்துவப் புரட்சிகூடத் தொடங்காத ஆசிய, ஆபிரிக்க நாடுகளையும் வெறியோடு ஆக்கிரமித்துவிட்ட காலகட்டம். முதலாளித்துவம் சர்வதேசரீதியாக தனக்குள்ளே இருந்த முரண்பாடுகளின் விளைவாக செத்து மடிந்து கொண்டிருந்த நிலையில் உருவெடுத்தது தான் ஏகாதிபத்தியம். இதன் காரணமாகவே பிறவியிலேயே ஊனமுற்றிருந்த இந்த ஏகாதிபத்தியம், தன்னைப் பாதுகாக்க அசுரத்தனமாக முயன்றுகொண்டிருந்தது. அனைத்து உலகத்தையும் அடிமைகொள்வதில் தீவிரமாக இயங்கியது. ஸ்ராலினின் வார்த்தைகளில் சொன்ஞல் "ஏகாதிபத்தியமென்பது அடிமைப்பட்டுக் கிடக்கும் ஏராளமான குடியேற்ற நாடுகளிலும் சார்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளிலும் வசிக்கின்ற கோடானுகோடி மக்களை வெட்கம் கெட்டதனமாக சுரண்டுவதும் மிகமிக அரக்கத்தனமாக ஒடுக்குவதுமாகும். இந்தச் சுரண்டல் மற்றும் ஒடுக்கலின் நோக்கம் கொள்ளைக்காரத்தனமாக ஸர்ப்பங்களை கலக்கிப் பிழித்து மூட்டை கட்டிச் செல்வதாகும்.''

இக்காலகட்டத்தில் காலனி, அரைக்காலனி நாடுகளில் தேசிய இனப்பிரச்சனை பிரதானமாகத் தோன்றியது. ஏகாதிபத்திய ஒடுக்கலிலிருந்து விடுபட தேசிய விடுதலைப்போரில் குதித்து காலனிய, அரைக்காலனிய நாட்டு மக்களின் 'தேசிய இனப்' பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதிலும் மாக்சியம் இன்னும் ஒருபடி முன்னேறியது. மாக்சியம் உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அம்சமாகவே இப்பிரச்சினையையும் அணுகியது. முதலாளியப் புரட்சிக்காலம் முடிவுற்றுவிட்டதையும் பாட்டாளிவர்க்கப் புரட்சிக்காலம்தொடங்கிவிட்டதையும் வலியுறுத்திய மாக்சியம், காலனி நாடுகளின் சிறப்பான தன்மைகளை கணக்கில் எடுத்துக்கொண்டது. இந்நாடுகளின் தேசிய விடுதலைக்கான தேசிய ஜனநாயகப் புரட்சியின் புதுவடிவத்தை விளக்கிய அது, பாட்டாளிவர்க்கம் எவ்வாறு அதை உலக சோசலிசப்புரட்சியின் ஒரு அம்சமாக மாற்றுவது என்று தெளிவு படுத்திற்று.

'இந்தச் சகாப்தத்தில் ஏகாதிபத்தியத்திற்கு, அதாவது சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்திற்கு அல்லது சர்வதேச முதலாளித்துவத்திற்கு எதிரான காலனி அரைக்காலனி நாடுகளில் நடாத்தப்படும் எந்தப்புரட்சியும் இனிமேல் பழைய உலகபூர்ஷ்வா ஜனநாயகப்புரட்சியின் வகையினைச் சேர்ந்ததாக இருக்க முடியாது. அது புதியவகையைச் சார்ந்ததாகவே இருக்கும். இனி அது பழைய உலக பூர்ஷ்வா, அல்லது உலக முதலாளித்துவப் புரட்சியின் ஒரு பகுதியாக இருக்கவில்லை. அது புதிய உலகப் பாட்டாளி வர்க்கத்தின் சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக இருக்கிறது. இம்மாதிரியான புரட்சிகரமான காலனி, அரைக்காலனி நாடுகள் உலக முதலாளித்துவ எதிர்ப்புரட்சி அணியின் நேசசக்திகளாக கருதப்படக்கூடாது. ஆனால் அவை உலக சோசலிசப் புரட்சி அணியின் நேசசக்திகளாக கருதவேண்டும்.

காலனி, அரைக்காலனி நாட்டு மக்கள் நடாத்தும் இந்தப் புரட்சியின் முதல் கட்டம், தனது சமூகக் குணும்சத்தின்படி அடிப்படையில் இன்னமும் பூர்ஷ்வா ஜனநாயகத்தன்மைகளையே கொண்டிருக்கிறது; அப்புரட்சியின் முதல் கட்டத்தின் ஸ்தூலமான திட்டமான தேவைகள் முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் பாதையில் உள்ள தடைக்கற்களை அகற்றுவதாகவே உள்ளது; இப்படி இருந்தபோதும் இத்தகைய புரட்சி இனிப் பூர்ஷ்வா வர்க்கத்தால் தலைமை தாங்கப்படுவதும், பூர்ஷ்வா வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவ சமூகத்தை உருவாக்கும் நோக்கம் கொண்டதுமான பழைய வகையைச் சார்ந்த பூர்ஷ்வாப் புரட்சியாக இருக்கவில்லை. ஆனால் இது பாட்டாளி வர்க்கத்தால் தலைமைதாங்கப்படும் புதியவகைப்பட்ட புரட்சிகரவர்க்கங்கள் அனைத்தின் கூட்டு சர்வாதிகாரத்தின் கீழ் அரசை அமைப்பதாகும். இவ்வாறாக இந்தப்புரட்சி சோசலிச வளர்ச்சிக்கான பாதையை விரிவாக்குவதற்கு உண்மையிலேயே சேவை செய்கிறது. இந்தப் புரட்சியின் வளர்ச்சிக் காலத்தில் எதிரிகளின் நிலமைகளில் உள்ள மாறுபாடுகள் காரணமாகவும், நேசஅணியில் உள்ள நேச சக்திகளிடையே ஏற்படும் மாறுபாடுகளின் காரணமாகவும் இன்னும் பல துணைக் கட்டங்கள் (Sub Stages) ஏற்படலாம். ஆனால் இந்தப் புரட்சியின் அடிப்படையான குணும்சத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது; சோசலிசப் புரட்சி ஏற்படும்வரையில் இதன் குணும்சம் ஒன்றாகவே இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'இந்தப் புரட்சி ஏகாதிபத்தியத்திற்கு ஒரு பெரும் இடியாகும். ஆகவே ஏகாதிபத்திய வாதிகளினால் அனுமதிக்கப் படாது கடுமையாக எதிர்க்கப்படுகிறது. இதற்கு மாறாக சோசலிசத்தால் இது வரவேற்கப்படுகிறது. சோசலிச பூமியும், அகில உலக பாட்டாளி வர்க்கமும் இப்புரட்சியை ஆதரிக்கின்றன. இவ்வாறு இந்த வகையினைச் சார்ந்த புரட்சி தவிர்க்க இயலாதவாறு உலக பாட்டாளிவர்க்க சோச்லிசப் புரட்சியின் ஒரு அங்கமாகிவிட்டது.

[புதிய ஜனநாயகம் - மாவோ பக் 10, 11]

ஆக, வரலாற்று ரீதியாக தேசிய இனப் பிரச்சனை சம்பந்தமான இம் மூன்றுவித தீர்வுகளையும், மாக்சியம் உலக சோசலிசப் புரட்சி, பாட்டாளிவர்க்க விடுதலை என்ற அடிப்படையில் நின்றே அணுகிவந்துள்ளது. ஆயினும் இன்றுள்ள பல திருத்தல் வாதிகள் மாக்சியத்தை திரித்துப்புரட்டி பாட்டாளிவர்க்க விடுதலைக்கும், உலக சோசலிசப் புரட்சிக்கும் துரோகமிழைத்து வருகின்றனர். தேசிய இனப்பிரச்சினையை பாட்டாளிவர்க்க விடுதலையை நோக்கமாகக் கொண்டோ, உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாகவோ பார்க்கப் பிடிவாதமாக மறுத்துவருகிறார்கள். தேசிய இனப்பிரச்சினைக்கான போரை, தேசிய சனநாயகப் புரட்சியை பூர்ஷ்வா வர்க்க நலன்களின் அடிப்படையில் நின்று இவர்கள் கையாள்கிறார்கள். இதன்மூலம் இவர்கள் வரலாற்று இயக்கவிதியை மறுத்து வருகிறார்கள்.

## 3

## காலனி நாடுகளில் தேசிய இனப்பிரச்சினை

மாக்சியம் வரையறை செய்த மூன்றுவது, ஏகாதிபத்திய சகாப்தத்திற்கான நிலைமைகள் இன்னும் மாற்றமுறாததால், உலக பாட்டாளி வர்க்கப்புரட்சியின் அம்சமாக மாக்சியம் வகுத்த தீர்வே இன்னமும் காலனி நாடுகளின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமைகிறது.

காலனி நாடுகளின் தேசிய இனப்பிரச்சனையின் பிரதான தன்மைகள் என்ன? காலனி நாடுகளின் வளர்ச்சியானது ஏகாதிபத்தியங்களின் சுரண்டல் ஒடுக்குமுறையாலும், நிலப்பிரபுத்துவத்தின் பின்தங்கிய உற்பத்திமுறைகளைக் கொண்டிருப்பதாலும் தடைசெய்யப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் உற்பத்தி சக்திகளுக்கு நிலவும் உற்பத்தியுறவுகள் பெருந்தடையாக அமைவது இந்தப்பிரச்சினையின் அடிப்படையாகின்றது. ஆனால் இத்தடைகளை அகற்றி முன்னேறும் ஜனநாயக வாழ்வுக்கு விரோதமாக, அந்த முயற்சிகளை மோசமாக நசுக்கி விடுவதில் ஏகாதிபத்தியத்துடன் நிலப்பிரபுத்துவம் மிகவும் தீவிரமாக கூட்டுச்சேர்ந்து முயன்று வருகிறது.

இதனால், காலனி நாடுகளின் தேசிய இனப்பிரச்சினை இரண்டு அடிப்படைத்தளைகளை உடைப்பதோடு சம்பந்தப்பட்டதாகும். ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவமும் மக்கள் விரோதநிலை எடுத்து உள்ளமையால் தேசிய விடுதலை, இவ்விரண்டு மக்கள் விரோத சக்திகளிடமிருந்தும் தேசத்தை விடுவிப்பதாகும். எனவே தேசிய விடுதலை என்பது இயல்பாகவே ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவத்திற்கு மரண அடிகொடுப்பதன் மூலமே சாதிக்கப்படும் ஒன்றாக அமைகிறது.

காலனி நாடுகளின் பாட்டாளி வர்க்கம், இத்தேசிய இனப்பிரச்சனையை தனது வரலாற்றுக் கடமையின் ஒரு அங்கமாகவே கருதி அதனை தலைமையேற்று தீர்த்துவைக்கும்படி மார்க்சியம் போதிக்கிறது. பாட்டாளிவர்க்கம், தனது விடுதலையை வென்றெடுக்கவும், ஒரு சோசலிச சமூக அமைப்பை நிறுவவும், இந்த தேசிய விடுதலையை நிறைவு செய்வது முன் நிபந்தனையாக அமைகிறது. தேசிய விடுதலை முழுமையாக முதலாளித்துவ எல்லைகளை கடக்காத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு சனநாயகப் புரட்சியாகவே அமைய முடியும். எனினும், பாட்டாளி வர்க்கம் இவ்விடத்தில் தன்னை பார்வையாளனாக-சம்பந்தப்படாது வைத்திருக்க முடியாது ஏகாதிபத்திய சகாப்தத்தின் அனைத்து சனநாயகப் பிரச்சினைகளுக்கும். தீர்க்கமான முடிவை நிறுவ பாட்டாளிவர்க்கம் தான் தலைமைதாங்கி, சனநாயகப் புரட்சியினை நிறைவு செய்தாகவேண்டும்.

தேசிய விடுதலைக்கான பிரச்சினையில், சனநாயகப் புரட்சிக்கான காலகட்டத்தில் முதலாளிவர்க்கம் உள்ளிட்ட அனைத்து வர்க்கங்களும் ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ மக்கள் விரோத சக்திகளால் மோசமாக நசுக்கப்பட்டு வருகின்றனர் என்பதால் இவர்களனைவரும் புரட்சிகர தன்மை மிக்கவர்களாக, ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்க ஆர்வமுள்ளவர்களாகவே செயற்படுவர். ஆயினும், இப்பிரச்சினையில் இவ்வர்க்கங்களுக்கு புரட்சிக்கான தலைமைப் பாத்திரத்தைக் கொடுத்துவிட்டு, பாட்டாளிவர்க்கம் வெறும், துணைப்படையாளாக தன்னை வைத்திருப்பது, இரண்டு விதங்களில் சமுதாய வளர்ச்சிக்கு குந்தகமாக அமைகிறது. ஒன்று, சனநாயகப் புரட்சியை இம்முதலாளி வர்க்கம் எப்போதும் மக்கள் விரோதிகளிடம் காட்டிக்கொடுக்கும் ஊசலாட்டத்தைக் கொண்டிருக்கும். மற்றது உலக சோசலிசப் புரட்சிக்கான கடமையைச் சாதிப்பதில் பாட்டாளிவர்க்கம் தான் ஆற்றவேண்டிய பங்கை இழந்துவிடுகிறது. இப்பிரச்சினையை அதாவது சனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் நிலையைப்பற்றி லெனின் இவ்வாறு எழுதுகிறார்:

> தொழிலாளி வர்க்கம் முதலாளிவர்க்கத்திற்கு துணைபோகும் படை என்ற பாத்திரத்தை வகிக்குமா (இந்தத் துணை போகும் படை எதேச்சதிகார முறையைத் தாக்கும் சக்தியில் வலிமைமிக்கதாய் இருந்தாலும்கூட அரசியல் ரீதியில் சக்தி அற்றது) அல்லது அது மக்கள் புரட்சியில் தலைவனுகப் பாத்திரம் வகிக்குமா என்பதைப் பொறுத்துத்தான் புரட்சியின் விளைவு இருக்கிறது.
>
> [ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகவாதத்தின் இருபோர்த் தந்திரங்கள் – லெனின் – பக் - 8]

எனவேதான் காலனி நாடுகளில் பாட்டாளிவர்க்கம், ஜனநாயகப் புரட்சியை தலைமையேற்று நிகழ்த்துகிறது. ஏகாதிபத்திய நிலப்புரபுத்துவ தளைகளை உடைத்தெறிந்து விடுதலை பெறப் போராடும் பரந்துபட்ட வெகுஜனங்களின் அனைத்துப் போராட்டங்களிலும் அது தலைமை ஏற்று ஊக்கமுடன் செயற்படுகிறது. தேசிய விடுதலைப் போராட்டத்தை உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக செயற்படுத்த செயல்படும் பாட்டாளி வர்க்கம், ஜனநாயகப்புரட்சியில் பிறவர்க்கங்களுடன் கூட்டுச் சேர்ந்து கொள்கிறது. பிறவர்க்கங்களின் தடுமாற்றங்களை– ஊசலாட்டங்களை தடுத்து நிறுத்தி புரட்சியை இறுதிவரை இட்டுச் செல்கிறது.

**லெனின் சொல்கிறார் :**

> எதேச்சாதிகாரமுறையின் எதிர்ப்பை பலத்தின் மூலமாக நசுக்கவும், விவசாயி மக்களின், முதலாளி வர்க்கத்தினரின் தடுமாற்ற நிலையை முடக்கம் செய்துவிடவும் திரளான விவசாய மக்களுடன் கூட்டணி வகுத்துக் கொண்டு பாட்டாளிவர்க்கம் ஜனநாயகப் புரட்சியை நடத்தி முடிக்கவேண்டும்.
>
> [அதே நூல் பக் - 133]

ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து பாட்டாளிவர்க்கம் மேலும் முன்னேறி சோசலிசப் புரட்சியை நிறுவவேண்டும். பாட்டாளிவர்க்கம் ஜனநாயகப்புரட்சியில் தலைமையேற்பதன்மூலம் இதை வெற்றிகரமாக சாதிக்கவேண்டும். அப்போது எதிர்க்கும் சக்திகளை முறியடித்து முன்னேற வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெனின் மேலும் சொல்கிறார் :

முதலாளிவர்க்கத்தின் எதிர்ப்பை பலத்தின்மூலமாக நசுக்கவும், விவசாயி மக்களின், சிறு முதலாளி வர்க்கத்தினரின் தடுமாற்ற நிலையை முடக்கம் செய்து விடவும் மக்களிடையே உள்ள அரைப் பாட்டாளி வர்கத்தன்மையுள்ள பகுதிகளோடு கூட்டணி வகுத்துக்கொண்டு பாட்டாளிவர்க்கம் சோசலிசப்புரட்சியை சாதித்து முடிக்கவேண்டும்.

[அதே நூல், பக் - 133]

எனவே, காலனிய அரைக்காலனிய நாடுகளின் பாட்டாளிவர்க்கம், தனது தேசத்தின் ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க பரந்துபட்ட விவசாயிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொள்கிறது. பின்தங்கிய விவசாய உற்பத்தியின் தன்மையால் நிலப்பிரபுத்துவத்தின் கீழ் ஒடுக்கப்படும் பெருந்திரளான விவசாயிகளை அணி திரட்டி விவசாயப் புரட்சி மார்க்கத்தை அவர்களுக்கு கற்றுக் கொடுக்கிறது. நிலப்புரட்சியை செய்வதற்கு விவசாயிகளுக்கு வழிகாட்டுகிறது. அதனூடே பரந்துபட்ட விவசாயிகள் படையை தேச விடுதலைக்காக தயார் செய்கிறது.

காலனிய அரைக்காலனிய நாடுகளில், பாட்டாளிவர்க்கம் அல்லது அதன் முன்னணிப் படையான கம்யூனிஸ்ட்கட்சி, தேசிய விடுதலையை வென்றெடுக்க, சனநாயகப் புரட்சியை நடாத்தி முடிக்க ஒரு புரட்சிகரமான திட்டத்தை முன்வைக்கிறது. ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ மக்கள் விரோதிகளுக்கு எதிரான அனைத்து புரட்சிகரமான மக்கள் பிரிவினரையும் அது ஐக்கிய முன்னணிக்கு கீழ் திரட்டுகிறது. அது அவர்கள் முன், ஒரு புதிய முறையான சனநாயக திட்டத்தை முன்வைக்கிறது. விவசாயப் புரட்சி மார்க்கத்தை (நிலப்புரட்சி) ஜனநாயகப் புரட்சியின் பிரதானமான அம்சமாக சுட்டிக்காட்டி, பாட்டாளிவர்க்கம் முன்வைக்கும் திட்டத்தைத்தான் நாம் 'புதிய சனநாயகம்' என்கிறோம்.

ஒவ்வொரு காலனி அரைக்காலனி நாடுகளில் நடைபெறும் புரட்சிகள், அதற்கென்றே சிலவேறுபாடான விசேசமான குணும்சங்களைக் கொண்டுள்ளது. ஆனால் இந்த வேறுபாடான அம்சங்கள் மிகவும் சிறுபான்மையாகும். காலனி அரைக்காலனி நாடுகளில் புரட்சி நடைபெறுகிறவரையிலும் அந்நாடுகளின் அரசும் அரசாங்க அமைப்பும் (State and Goverment Sturcture) அடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சி கொண்ட பல்வேறு வர்க்கங்களின் கூட்டு சர்வாதிகாரத் தலைமை கொண்ட புதிய ஜனநாயகக் குடியரசாகத்தான் அவசியம் இருக்கும்.

[புதிய ஜனநாயகம் பக் - 22, 23]

அதாவது காலனி அரைக்காலனி நாடுகளின் புரட்சியானது, புதிய சனநாயகப் புரட்சி வடிவத்தையே எடுக்கிறது எனவே இந்நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்கள், அந்நாட்டு மக்களின் ஜனநாயக வாழ்வுக்கு உத்தரவாதம் செய்ய வேண்டுமாயின், புதிய சனநாயகப்புரட்சித் திட்டத்தை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்பது நியதியாகிறது. பாட்டாளிவர்க்கத்தைப் பொறுத்தவரை, காலனி நாடுகளில் அதன் திட்டம் புதிய சனநாயகம் ஆன போதிலும், ஏனைய வர்க்கங்களின் விடிவுக்கும் இதுவே ஒரே காரிய சாத்தியமான திட்டமாக அமைந்து விடுகிறது.

இப்புதிய சனநாயக அரசின்கீழ், அத்தேசத்தில் வாழும் பல்வேறு தேசிய இனங்களின் பிரச்சனைகள் சுமுகமாகத் தீர்த்துவைக்கப் படுகின்றன. இனங்களுக்கிடையே சமத்துவமும், அவர்களது கலாச்சார பண்பாட்டம்சங்களுக்கு தங்கு தடையற்ற வளர்ச்சிக்கு ஏதுவான சனநாயக அரசும் இங்கு நிறுவப் படுகிறது. இது இனங்களிடையே ஐக்கியத்தைப் பேணுவதையும், அனைத்து இனப் பாட்டாளிவர்க்கத்தின் 'ஒன்றித்த' சோசலிச நிர்மாணத்தை நோக்கிய போராட்டத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யும் நடாத்துகிறது. உலக சோசலிசப் புரட்சியின் வரலாற்றுக் கடமையை தனது தேசத்தில் நிறைவு செய்கிறது.

## 4

## தமிழீழத்தின் தேசியப் பிரச்சினையும் புதிய சனநாயகப் புரட்சியும்

இலங்கை ஒரு அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ நாடாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழ்கின்ற, ஒரு மக்கள் விரோத, ஜனநாயகமற்ற அரசினைக் கொண்ட நாடாகவும் உள்ளது. தமிழ்-சிங்கள தேசிய இனங்களுக்கிடையே பகைமையை உருவாக்கியும், இனங்களுக்கிடையே ஐக்கியத்திற்கான வாய்ப்புகளை முற்றாக மறுத்தும் இங்குள்ள ஏகாதிபத்திய சார்பு தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கங்கள் செயற்பட்டுவந்துள்ளன. இதன்காரணமாக, இன்று தமிழ்த் தேசிய இனம் பிரிந்து செல்கின்றதற்கான தனது சுயநிர்ணய உரிமையை அடைவதற்காக தவிர்க்கவியலாது, தமிழீழ விடுதலைக்கான போராட்டத்தை நடாத்திவருகிறது.

மேலோட்டமாக இந்த விசயத்தைப் பார்த்தால், தமிழ்த் தேசிய இனம் தனியாகப் பிரிந்துபோவது ஒரு நியாயமான கோரிக்கையாகவும், ஆகவே அதைப் பெற்றுக் கொள்ள இலங்கை மக்கள் விரோத பிற்போக்கு அரசை எதிர்த்து நடாத்தும் போராட்டம் நியாயமானதாகவும் தோன்றும். ஆயினும் இக்கோரிக்கை உண்மையில் நியாயமானதாகவும், இப்போராட்டம் சரியானதாகவும் இருந்தபோதிலும், நிகழ்ச்சிகளை வெறுமனே தோற்றங்களை வைத்துக் கொண்டு ஆராய்வதை மார்க்சியம் மறுத்துரைக்கிறது. தேசிய ரீதியாக ஒடுக்கப்படுகிற மக்கள் தாம் பிரிந்து ஓர் தனி அரசாகப் போவதை எவ்வளவுக்கு எவ்வளவு முக்கியமானதாகக் கருதுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு முக்கியமாக, அப் பிரிந்து போதல் போராட்டத்தையும் அம்மக்களது சனநாயக வாழ்வுக்கான போராட்டத்தையும் (சனநாயகப் புரட்சியையும்) வெற்றிகரமாக உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அம்சமாக நிறைவு செய்தலை முக்கியமானதாக மார்க்சியம் கருதுகிறது. எனவே தேசிய விடுதலைப் போராட்டம் தமிழீழத்தில் முன்னெடுக்கப்படுகின்றதை மட்டும் கருத்தில் எடுத்துக் கொண்டு பாட்டாளிவர்க்கம் அக்கறையற்று இருந்து விடக்கூடாது. 'எல்லா வகையான தேசிய ஜனநாயகப் பிரச்சினைகளிலும், தான் தலையிடுவதன் மூலமாகவும், தலைமை தாங்குவதன் மூலமாகவும் அதனை வெற்றிக்கு இட்டுச் செல்லப்பணியாற்ற வேண்டும்.

ஆனால் இன்று தமிழீழத்தில் பாட்டாளிவர்க்கத்தின் நிலை என்ன? பாட்டாளி வர்க்கம் இப் போராட்டத்தில் ஆற்றுகிற பங்கு என்ன? உண்மையில் பாட்டாளி வர்க்கத்திடம் இன்று இரண்டு விதமான சந்தர்ப்பவாதப்போக்குகள் நிலவுகின்றன. ஒன்றில் பாட்டாளிவர்க்கம், தான் ஒரு வர்க்கம் என்ற உணர்வேதுமின்றி, நடைபெறுகிற போராட்டத்தில் இழுபட்டுச் செல்கிற போக்கு, இன்னொன்று, இதில் எவ்வித பங்குமின்றி அசிரத்தையாக இருக்கும் போக்கு இந்த இரண்டு சந்தர்ப்பவாதப் போக்குகளும் பாட்டாளி வர்க்க விடுதலைக்கு விரோதமான பாதையையே, பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களைப் பேணுவதையே நோக்கமாகக் கொண்டு, திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சிகளாலும் மற்றும் பிற்போக்குவாதிகளாலும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. இவை மிகவும் மோசமான தவறுகளாகும். பாட்டாளி வர்க்கம் விழிப்பூட்டப்படுவதும், இத்தேசிய சனநாயகப் புரட்சியில் ஒரு செயலூக்கமான தலைமைப் பாத்திரத்தை வகிக்கவைப்பதும் இன்று கம்யூனிஸ்ட்டுக்கள் மத்தியிலுள்ள பிரதான கடமையாகும்.

இன்று தமிழீழத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தை கம்யூனிஸ்ட்டுக்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் மிக அவதானமாக ஆராய வேண்டும். அதனிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும். இப்போராட்டத்தை எவ்வாறு மேலும் முன்னேக்கி வளர்த்தெடுக்க கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது இன்று கம்யூனிஸ்டுக்கள் முன்னுள்ள பிரதான கேள்வியாகும்.

***லெனின் சொல்கிருர் :***

> புரட்சி நமக்கு கற்றுக் கொடுக்கும், திரளான மக்களுக்கும் கற்றுக்கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனல் இன்று ஒரு போராடும் அரசியல் கட்சியின் முன்நிற்கும் கேள்வி இதுதான் 'புரட்சிக்கு நாம் எதையாவது கற்றுக் கொடுக்கமுடியுமா? புரட்சி மீது பாட்டாளிவர்க்க முத்திரை இடுவதற்கு சொல்லளவில் அல்லாது செயலளவில் புரட்சியை ஒரு உண்மையான, ஒரு நிர்ணயமான வெற்றிக்கு இட்டுச்செல்வதற்கு ஜனநாயகப் போக்குள்ள முதலாளி வர்க்கத்தின் நிலைப்பாடின்மையையும் அரைமனத் தன்மையையும் துரோகத் தன்மையையும், செயல் சக்தியற்றதாக செய்வதற்கு, நம்சமூக ஜனநாயகப் போதனையின் தவறின்மையையும் முழுதும் புரட்சிகரமான ஒரே வர்க்கமாகத் திகழும் பாட்டாளிவர்க்கத்துடன் நமக்குள்ள பிணைப்பையும் நம்மால் பயன்படுத்திக்கொள்ள இயலுமா?
>
> [சமூக ஜனநாயக வாதத்தின் இரு போர்த்தந்திரங்கள் பக் - 6, 7]

ஆம்! 'இக்குறிக்கோளை நோக்கியே நம் முயற்சிகள் அனைத்தையும் நாம் செலுத்த வேண்டும்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப் போராட்டம் நமக்குக் கற்றுத்தருவது என்ன?

இதுபல விசயங்களை எமக்கு கற்றுத்தந்துள்ளது. இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற போராட்டம் ஆரம்பத்தில் தமிழீழத்தின் தேசியவாத பூர்ஷ்வாக்களினதும், நகர்ப்புற குட்டி பூர்ஷ்வாக்களின் தலைமையிலும் தொடங்கிற்று. தேசியரீதியான ஒடுக்குமுறையின் கீழ் மோசமாகப் பாதிக்கப்பட்ட இவ் வர்க்கங்கள், தனிநாடு ஒன்றை உருவாக்கும் நோக்கில் தமது செயல்களை ஆரம்பித்தன. இலங்கை அரசின் அரச இயந்திரத்தையும் அதன் நிர்வாகத்தையும், தமிழீழப் பகுதிகளில் ஸ்தம்பிக்கச் செய்வதும், தமிழீழத்தில் ஒரு குடியரசை நிறுவுவதும் இவர்களது நோக்கமாக இருந்தது. அரச இயந்திரத்திற்கெதிரான இவர்களது போராட்டம், இராணுவ ரீதியில் ஸ்ரீலங்காப் படைகளை இங்கிருந்து அப்புறப்படுத்தும் நோக்கில் ஆயுதக் கிளர்ச்சியாக மாறியது.

தமிழீழத்தின் குட்டிபூர்ஷ்வா இளைஞர்களின் ஆயுதமேந்திய போராட்டம் விரிவு பெறத் தொடங்கியதும், தமிழீழத் தனியரசை அமைக்கின்ற நோக்கில் அது செயற்படத்தொடங்கியும், தமிழீழ ஆளும் வர்க்கங்கள், இப்போராட்டங்களை தமது நோக்கங்களுக்கேற்ப பயன்படுத்த தொடங்கின.

தேசியரீதியாக ஒடுக்கப்படுகிற ஒரு தேசத்தின் ஒடுக்கப்படுகிற அனைத்து வர்க்கங்களும் ஒடுக்குமுறையாளர்களையும், ஒடுக்கும் அரச இயந்திரத்தையும் எதிர்த்து போராட கிளர்ந்தெழுவது இயல்பே. ஆனல், ஒவ்வொரு வர்க்கங்களும், தமக்கேயுரிய உலக நோக்கில், அந்தப் போராட்டத்தை நடத்தவும், தமது நலன்களைப் பேணும் விதத்தில் அதை முடிவுக்கு கொண்டு வரவும் முயன்று வருகின்றன. தமிழீழமும் இதற்கு விதிவிலக்கானதல்ல. தமிழீழத்தின் பூர்ஷ்வா வர்க்கம் இத் தேசிய விடுதலைப் போராட்டத்தை தனது வர்க்க நலனின் அடிப்படையிலேயே நடாத்தி முடிக்க முயன்று வருகிறது. ஆயினும், தமிழீழத்தின் பூர்ஷ்வா வர்க்கம், ஒரு காலனி நாட்டின் பூர்ஷ்வா வர்க்கம் என்ற முறையில், இரட்டைத்தன்மை கொண்டதாக உள்ளது. ஏகாதிபத்தியங்களின் பக்கமாகவும், தேசிய நலனை உயர்த்திப் பிடிப்பதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவும் பூர்ஷ்வா வர்க்கம் இரண்டாகப் பிரிகிறது. ஏகாதிபத்தியங்களை சார்ந்து நின்று தமிழீழத்தின் தேசிய விடுதலையை அந்நிய சக்திகளின் கைகளில் விட்டுக்கொடுக்க விரும்பும் இப் பெரும் பூர்ஷ்வா மற்றும் தரகுமுதலாளிய பிரிவுகள், பரந்துபட்ட மக்களின் நலன்களுக்கு விரோதமான, மக்கள் விரோத நிலையை எடுக்கின்றன. தேசிய விடுதலைக்கும், தேசத்தின் சுதந்திரத்திற்கும் துரோகமிழைத்து தமது சுரண்டல் நோக்கங்களை நிறைவேற்றத் துடிக்கின்றன. தேசிய விடுதலை இயக்கங்களை தமது தலைமையில் வென்றெடுப்பதன் மூலம் இதனை சாதிக்க முயல்கின்றன. மற்றைய பிரிவான தேசியவாத பூர்ஷ்வாப் பிரிவு தேசத்தின் சுதந்திரத்தை உயர்த்திப் பிடித்தபோதும், தொடர்ந்தும் ஊசலாடும் தன்மையுடனேயே செயற்பட்டுவருகிறது.

பரந்துபட்ட மக்களைச் சார்ந்து நிற்பதா, பெரும் பூர்ஷ்வா வர்க்கப் பிரிவினைச் சார்ந்து மக்கள் விரோத நிலையை எடுப்பதா என்ற ஊசலாட்டம் அல்லது அரை மனத் தன்மை காரணமாக தேசிய பூர்ஷ்வா வர்க்கம் ஒரு உறுதியான தலைமையைக் கொடுக்கமுடியாமல் உள்ளது. இதனால் குட்டிபூர்ஷ்வாக்கள் மற்றும் புரட்சிகர வர்க்கப் பிரிவுகள், தேசியவாத பதாகையுடன் நடைமுறையில் செய்துவரும் நடவடிக்கைகள், பரந்துபட்ட மக்களை சார்ந்து நிற்பதற்குப் பதில் மக்களிடமிருந்து அந்நியப்பட்ட நிலையில் நிகழ்ந்தேறுகின்றன. அல்லது, பெரும் பூர்ஷ்வா வர்க்கப் பிரிவினரின் நலன்களுக்கு இசைவாகப் போய் முடிகின்றன.

தமிழீழத்தின் பாட்டாளிவர்க்கம் இப் பிரச்சினையில் இன்னும் உணர்வு பெற்றதாக, போராட்டத்திற்கு வழிகாட்டும் தலைவனாக தன்னை ஸ்தாபித்துக் கொள்ளவில்லை. கடந்தகால திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சிகளும் நிகழ்கால பிற்போக்குத் தலைமைகளும் பெயரளவில் பாட்டாளி வர்க்கத் தலைமையை குறிப்பிட்டபோதும், தலைமை குறித்து மிகவும் எச்சரிக்கையாக அது பாட்டாளிவர்க்கத்தின்பால் செல்லாவண்ணம் பார்த்துவந்திருக்கிறார்கள்.

கடந்த ஐம்பதாண்டுகால திரிபுவாதச் சகதியினுள் புதைந்து போயிருக்கும் பாட்டாளி வர்க்கத்தை மீட்டெடுத்து, புரட்சிப் புத்துணர்வுடன் போராட்டத்தில் குதிக்கவைக்கும் அவசியத்தை இப் போராட்டம் நமக்கு கற்றுத்தந்துள்ளது. தேசிய விடுதலைப் போராட்டத்தில்—சனநாயகப் புரட்சியில் தலைமையேற்க வேண்டிய பாட்டாளி வர்க்கம் அணிதிரட்டப்படவேண்டிய அவசியத்தையும், அதன் முன்னணிப்படையான கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றின் அவசியத்தையும் இச் சூழ்நிலை எமக்குப் போதித்துள்ளது. செயலூக்கமிக்க கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றைக் கட்டுவதையும், தமிழீழத்தின் சனநாயகப் புரட்சியை தலைமையேற்று நடாத்தி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக மாற்றியமைப்பதையும் பாட்டாளிவர்க்கத்தின் பிரதான கடமைகள் என்பதை இப்போராட்டம் எமக்கு கற்றுத்தந்துள்ளது.

தமிழீழத்தின் தேசிய விடுதலை என்பது தமிழீழத்தின் மீதான ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ தளைகளை துடைத்தெறிகிற, பாட்டாளிவர்க்கம் தலைமையேற்று நடாத்துகின்ற புதிய வகைப்பட்ட சனநாயகப் புரட்சியேயாகும். புதிய சனநாயக அரசை நிறுவுவதும், தமிழீழ சோசலிச அரசை நிறுவுவதுமாகிய தனது கடமையில், தமிழீழப் பாட்டாளிவர்க்கம், தன்னை சகல திரிபுவாத சகதிகளிலும் இருந்து மீட்டெடுத்து ஒரு புதிய கம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் ஸ்தாபனமாக்கிக் கொள்ளவேண்டும். தமிழீழத்தின் பரந்துபட்ட விவசாயிகளுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளவும் விவசாயப் புரட்சியினூடாக புரட்சியை முன்னேக்கித்தள்ளவும், தமிழீழப் பாட்டாளிவர்க்கம் கற்றுக்கொடுக்க வேண்டும். அனைத்து தேசபக்தப் பிரிவினதும் ஐக்கிய முன்னணியைக் கட்டவும், தரகு முதலாளிய நிலப்பிரபுத்துவ மக்கள் விரோத சக்திகளை தனிமைப்படுத்தி, அனைத்து ஊச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாடும் சக்திகளுக்கும் ஒரு பலமான நம்பிக்கை யூட்டும் கோட்டையாக கம்யூனிஸ்ட்கட்சி தன்னை உருவாக்கிக் கொள்வதன் மூலம் பரந்துபட்ட மக்கள் திரளினருக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.

தமிழீழத்தின் தேசிய விடுதலை நாம் முன்னரே குறிப்பிட்டபடி புதிய சனநாயகப் புரட்சியின் நியதிகளையே கொண்டுள்ளது; மற்றெந்த காலனிய அரைக்காலனிய நாடுகளின் பாட்டாளிவர்க்கத்தின் திட்டத்தினையொத்தே 'புதிய சனநாயகமே' தமிழீழத்தின் பாட்டாளிவர்க்கத்தின் திட்டமாக உள்ளது. பூர்ஷ்வாக்கள் தேசிய விடுதலையைச் சாதிக்க, பரந்துபட்ட வெகுசனங்களை தம்மோடு அணிதிரளுமாறு அறைகூவி அழைக்கிறார்கள்; தேசியவாத உணர்வை (சரியாகச் சொன்னால் 'வெறி'யை) ஊட்டி அவர்களை தம்பின்னாலே வருமாறு அழைக்கிறார்கள்; நமது நாடு, நமது மொழி, நமது தேசம் என 'தேசபக்த' அறைகூவலை விடுக்கிறார்கள். மக்கள் மத்தியில் நிலவும் முரண்பாடுகளை மூடிமறைத்து தேசியவாத அலையில் அள்ளுண்டு வருமாறு மக்களிடம் கோருகிறார்கள்.

ஆனால் பாட்டாளிவர்க்கம் இதை மறுக்கிறது. மக்களிடையே நிலவும் வர்க்க முரண்பாடுகளை மாக்சியம் அதற்கு சுட்டிக் காட்டுகிறது. மாக்சியம் பாட்டாளிவர்க்கத்திற்கு ஒரே நேரத்தில் தேசபக்தர்களாயும், சர்வதேசிய வாதிகளாயும் இருக்கக்கூடிய முரணற்ற நிலையைப் போதிக்கிறது. எனவே அது மக்கள் ஆக்கிரமிப்பாளர்களையும், மக்கள் விரோதிகளையும் ஒழிக்க ஒன்று கூடுமாறு அறைகூவல் விடுக்கிறது; பூர்ஷ்வாக்களின் கபடத்தனமான நோக்கங்களை அம்பலப்படுத்தி, மக்களின் உண்மையான புரட்சிகர உணர்வை தட்டி யெழுப்பி புரட்சிக்கு அணிதிரளுமாறு அறைகூவி அழைக்கிறது. பரந்துபட்ட மக்களை அணிதிரட்ட 'புதிய சனநாயக' திட்டத்தின் அடிப்படையில் ஈடுபடுகிறது.

தமிழீழத்தின் தேசிய விடுதலை என்பது புதிய சனநாயகப் புரட்சியேயன்றி வேறல்ல; மற்றெல்லாத்திட்டங்களும் ஏமாற்றுக்களே என அடித்துக் கூறுகிறது.

# 5

## தேசிய விடுதலையா புதிய சனநாயகப் புரட்சியா எனப் பிரித்துப் பார்க்கிற பிரச்சினை

இந்தப் பிரச்சினை சாராம்சத்தில் ஒரு விசயத்தை தெளிவு படுத்திவிடுகிறது. அது தான், இவர்கள் குறிப்பிடும் 'தேசியவிடுதலை' என்பது 'தமிழீழ விடுதலை'யே—அதாவது, ஒரு புதிய அரைக்காலனியை, சிலவேளை நவகாலனியை இந்த நாட்டில் தோற்றுவிக்கிற பெரும் பூர்ஷ்வா வர்க்கக் குரலே இது என்பதை. உண்மையில் காலனி நாடுகளின் தேசியவிடுதலையும் புதிய சனநாயப் புரட்சியும் பிரிக்கப்பட முடியாதவை என்பதை மாக்சியம் எமக்குப் போதிக்கிறது. ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ தளைகளை உடைத்தெறிந்து ஒரு சுதந்திரமான தேசத்தை மீட்டெடுக்கிற உறுதியும் பலமும் கொண்டதாக பூர்ஷ்வா வர்க்கம் காலனி நாடுகளில் இருக்கமுடியாது என்பதை மாக்சியம் அறுதியிட்டு கூறுகிறது. எனவே தேசிய விடுதலையே முதன்மையானது என்று கூறும் கோசம், 'தமிழீழம்' என்ற ஒரு புதிய நாட்டை உருவாக்கும் ஏகாதிபத்திய கைக்கூலிக் குரலாகவே இருக்கமுடியும். அல்லது ஏகாதிபத்தியங்களின் நோக்கங்களுக்கு சார்பாக சுயபிரக்ஞை இன்றி எழுப்பும் குரலாகவே இருக்கும்.

தேசிய விடுதலையா, புதிய சனநாயகப் புரட்சியா என்ற பிரச்சினையை மேலோட்டமாக பார்த்தால், வெறும் சிறுபிள்ளைத்தனமான கேள்விபோலவே தோன்றும். ஆனால் இது மிகவும் ஆழமான பிரச்சினை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரட்சியை இருவேறுதிசை மார்க்கங்களுக்கு இட்டுச்செல்கின்ற பிரச்சினை; ஒன்று பாட்டாளிவர்க்கப் புரட்சிகரப் பாதை. மற்றையது ஏகாதிபத்திய அடிவருடிகளின் பாதை அல்லது, அவர்களுக்கு சாதகமான பாதை. புரட்சிப்பாதை மக்களை புரட்சியின் நோக்கில் அணிதிரட்ட அறைகூவல் விடுக்கிறது; மற்றப் பாதை புரட்சிக்கு துரோகம்செய்து தமிழீழமக்களின் தலைகளில் புதிய சுமைகளை சுமத்தும்பாதை; அவர்களது பாதங்களில் புதிய தளைகளைப் பிணைக்கும் பாதை; இது மக்களை தேசியவாத அலையில் அள்ளுப்பட்டு வருமாறு அறைகூவல் விடுக்கிறது. பார்வைக்கு கவர்ச்சிகரமாகவும், ஆர்வமூட்டுவதாகவும் இருக்கும் இப்பிற்போக்காளரின் பாதையின் பின்னுல் நிற்கும் ஆபத்தை மாக்சியம் எமக்குச் சுட்டிக் காட்டுகிறது. நினைத்தாலே மலைப்பூட்டும் கரடுமுரடான புரட்சிப் பாதையின் பின்னுல் உள்ள வெற்றியையும் அது கூடவே நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

தேசிய விடுதலைப் போராட்டம் பூர்ஷ்வா வர்க்கத்தின் தலைமையிலேதான் நடைபெற வேண்டும்; அது ஏதோ ஒருவகையில் அந்நிய உதவிகளை சார்ந்துநின்றே வெற்றி பெறமுடியும்; தேசங்களின் சுயச் - சார்பு இன்றைய நிலையில் சாத்தியமில்லை என்பதை போன்ற வெளிப்படையான மக்கள் விரோதக் கருத்துக்களை பெரும் பூர்ஷ்வா வெளிப்படையாகவே சொல்கிறது மக்களுக்கு எதிரி மீது பயத்தையும், தம்மீது நம்பிக்கையின்மையையும் புரட்சிப்பாதையின்மீது அவதூறுகளையும் இவர்கள் விதைக்கிருர்கள். ஆனுல் மக்கள் விரோதிகள் எப்போதுமே வெளிப்படையாக தமது விசக் கருத்துக்களை வெளியிடுவதில்லை. புதிய சனநாயகப் புரட்சியை ஏற்றுக்கொள்ள மறுப்பதன் மூலம், தாம் மாக்சிய விரோதிகள் எனக் காட்டிக் கொள்வது, பரந்துபட்ட மக்களிடமிருந்து தம்மை அந்நியப்படுத்திவிடும் என அஞ்சும் பிற்போக்காளர்கள் வாயளவில் மாக்சியத்தையும் புதிய சனநாயகப் புரட்சியையும் ஏற்றுக்கொள்வதாகக் கூறிவருகிருர்கள். இவர்கள், புதிதாக வைக்கின்ற கோசம்தான் மேற்சொன்ன எமது பிரச்சினையாகும். அவர்கள் இவ்வாறுதான் பேசுகிருர்கள்:

> 'நாம் தமிழீழத்தின் புரட்சி புதிய சனநாயகப்புரட்சி என்பதை அங்கீகரிக்கிறோம். பாட்டாளிவர்க்க 'விடுதலை'யை நோக்கமாகக் கொண்டுள்ள நாம் புதிய சனநாயகப் புரட்சியை முன்னெடுக்க பாட்டாளிவர்க்கம் அணிதிரள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனுல், இன்று நம்முன்னுள்ள பிரதான பிரச்சினை என்ன? தமிழீழத்தின் பரந்துபட்ட மக்களுக்கும் அதாவது தமிழ்த்தேசிய இனத்திற்கும் அரசுக்கும் இடையிலான முரண்பாடு மிகவும் கூர்மையடைந்துள்ள பிரதான முரண்பாடாக உள்ளது. இந்நிலையில் தமிழ்த் தேசிய இனம் தன்னை தேசிய ரீதியில் விடுவித்துக்கொள்ளாமல், புதிய சனநாயகப் புரட்சிக் கடமையினை நிறைவு செய்ய முடியாது. எனவே முதற்படியாக இலங்கை அரசின் பாசிசக் கரங்களிலிருந்து எமது தேசத்தை விடுவிப்பதும், அதைத் தொடர்ந்து அங்கு புதிய சனநாயகப் புரட்சிக்கான பணியில் ஈடுபடுவதுமே சரியானது.

—இவ்வாறுதான் இவர்கள் விவாதிக்கிருர்கள். இந்தப் புகழ்பெற்ற 'மாக்சிய' வாதிகள் என்னதான் மாக்சிய சொற்ருெடர்களை உச்சரித்தபோதிலும், இவர்கள் காட்டும் பாதையானது மிகத் தெட்டத் தெளிவாக குறிப்பிடுவது ஒன்றைத்தான். அதாவது, தமிழீழ பெரும் பூர்ஷ்வா வர்க்கக் குரலையே இவர்கள் ஒலிக்கிருர்கள். அல்லது, இவர்கள் பெரும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கு தனது அதிகாரத்தை நிறுவிக்கொள்ள வாய்ப்பளிக்கிருர்கள்.

சொந்த நாட்டின் புரட்சியினை இரண்டாம் பட்சமானதாகவும், அதன் 'தேசிய விடுதலையை' முதன்மையாகவும் காட்டும் போக்கு வரலாற்றில் இங்குமட்டும் முதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தட்டவையாக எழுந்துள்ள ஒன்றல்ல. வரலாற்றின் ஒவ்வொரு கட்டங்களிலும் இவர்கள் இடையறுது போராடி வந்துள்ளார்கள் இவர்களது பிற்போக்குத்தனங்களை அம்பலப்படுத்தியும், புரட்சி மார்க்கத்தை சரிவர முன்னெடுக்கவும், மாக்சிஸ்ட்டுக்கள் விட்டுக்கொடுக்காது போராடி வந்துள்ளார்கள்.

இவர்களது இந்தத்திட்டமானது, சந்தேகமில்லாமல் பாட்டாளிவர்க்கத்தையும், மற்றும் பரந்துபட்ட வெகுசன மக்களையும் பூர்ஷ்வா வர்க்கத்தின் வாலாக அணிதிரளுமாறு கோருகின்றது. இவர்கள் தமது விவாதத்தை பின்வரும் முறையில் சற்று வித்தியாசமாகவும் கூறுகிறார்கள். நாம் விரும்பியோ விரும்பாமலோ, இன்று தேசிய விடுதலையின் தலைமை இன்றுள்ள பூர்ஷ்வா, பெரும் பூர்ஷ்வாக்களின் கையிலேயே தங்கியுள்ளது. எனவே, பரந்துபட்ட மக்கள் திரளினர் அவர்களைச் சார்ந்து நின்றுபோராட வேண்டும். பாட்டாளிவர்க்கம், மற்றும் கூலி விவசாயிகள், வறியவிவசாயிகள், தமது பிரச்சினைகளை விட்டுவிட்டு தேசிய விடுதலைப் போல் குதிக்கவேண்டும். இன்னும் ஒரு பகுதியினர் சற்று உணர்வு பூர்வமாக இவ்வாறு கூறுவர் 'தமிழினம் வாழ்வா சாவா என்று போரிட்டுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் கூலி விவசாயிகளின் கூலிப் போராட்டம், விவசாயிகளின் நிலப்புரட்சி என்று நிற்பதா? இது தமிழினத்தை நெருக்கடியான நிலையில் கூறுபோடுகின்ற செயல் அல்லவா?'

எல்லாவகை விவாதங்களும் சாரத்தில் பாட்டாளி வர்க்கத்தின் செயல் பூர்வமான தலைமைப் பாத்திரத்தை நிராகரிக்கவும், தொழிலாளவிவசாயிகள் எழுந்து வருவதை தடுக்கவும், புரட்சியை பூர்ஷ்வா வர்க்கத்திடம் கைவிட்டுவிட்டு பாட்டாளிவர்க்கத்தை துணைப்போகும் படையாளாக' மாற்றவுமே பயன்படுகின்றன. தேசிய விடுதலையை முதன்மைப்படுத்துவது என்பது, தமிழீழம் என்ற ஒரு தனி நாட்டை உருவாக்குகிறதே ஆகும். இதற்கென நிலவும் சமூக அமைப்பைப் பேணுகின்ற விதத்தில் ஒரு இராணுவத்தைக் கட்டுதலும் அதனூடாக ஒரு பூர்ஷ்வா அரசை ஸ்தாபிப்பதும் இதன் நோக்கமாகும். இதன் பின்னணியில் குறுந்தேசியவாதம், இனவாதம் மற்றும் பிற்போக்கு அம்சங்கள் நிறைந்த சக்திகள் நிறையவே நின்று செயல்படுகின்றன. இன்னும் தேசியவாத, தேசிய பூர்ஷ்வாப் பிரிவினரும் இந் நோக்கங்களையே பிரதானப்படுத்தி செயல்பட்டு வருகின்றார்கள். அதாவது தேசிய விடுதலையை நிதானமாகக் கருதும் போக்கை ஆயினும் இது தேசவிரோத மக்கள் விரோத சக்திகளும் தேசியப் பதாகையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு தமது மக்கள் விரோத நடவடிக்கைகளை செயல்படுத்தவே வழி செய்யும். புரட்சிப்பாதை தான் மக்களையும் மக்கள் விரோதிகளையும் இனங்காட்டும் துல்லியமான பாதையாகும். சீன வரலாற்றாசிரியர் கோகான்-சி தமது சீனப் புரட்சியின் வரலாற்றில் ஐந்தாவது தேசிய காங்கிரஸின் தீர்மானங்கள் பற்றி இவ்வாறு எழுதுகிறார்;

> "காங்கிரஸ் மேலும் சுட்டிக் காட்டியது: தீவிரமானதொரு நிலச் சீர்திருத்தத்தை (நிலப்புரட்சியை - கட்டுரையாளர்) நிறைவேற்றும் முன்பாகவும், மேலும் ஒரு ஜனநாயக அரசை நிலைநாட்டுவதற்கு முன்பாகவும் வடக்கத்திய படையெடுப்பு நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தும் பூர்ஷ்வா வர்க்கத்திற்குத் தான் உதவி செய்யும். பூர்ஷ்வா வர்க்கம் ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பலனளிக்கக் கூடிய முறையில் கடற்கரையோர மாநிலங்களில் தங்களை இணைத்துக் கொள்வதற்கு தேசிய முகமூடியினை அணிந்திருந்தார்கள் (அழுத்தம் கட்டுரையாளர்) அதாவது நிலச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு வடக்கத்திய படையெடுப்பை பூர்த்தி செய்வது என்ற தத்துவம் சியாங்காய் ஷேக் ஒரு தேசியவாதி என்ற முகமூடியைப் போட்டுக் கொள்வதையும் தென் கிழக்கு மாநிலங்களில் அவனுடைய நிலைமையினைப் பலப்படுத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதையும் சுலபமாக்கி இருக்கும். ஏனெனில் அவனுங்கூட 'படையெடுப்பதைத் தொடர்ந்து நடத்துவதையும் நாடு முழுவதையும் ஒற்றுமைப் படுத்துவதையும்' ஆதரித்துப் பேசி வந்தான்.

கோகான்சியின் இந்தக் குறிப்பு மிகவும் முக்கியமானது. தமிழீழத்தின் புரட்சிப் பாதையை, விவசாயப் புரட்சி மார்க்கத்தை இரண்டாம் பட்சமானதாக்கி, சிறிலங்கா இராணுவத்துடனை மோதலை முதன்மைப் படுத்துகின்ற போக்கு அதாவது தமிழீழ விடுதலையே முதன்மையானது என விவாதிக்கிற போக்கு புரட்சியில் மக்கள் விரோதிகளை இனங்காண முடியாது செய்து விடுகிறது. பூஷ்வா வர்க்கத்தின் வாலாக பாட்டாளி வர்க்கத்தை இழுபடச் செய்கின்றது.

தமிழீழ புதிய ஜனநாயகப் புரட்சியினைப் பற்றி திருத்தல் வாதிகள் மூன்று விதங்களில் விவாதிக்கிறார்கள். ஒரு தேசம் பரந்த பேரெழுச்சியினை முன்னெடுப்பதையும், பரந்தளவில் ஒரு பலமான இராணுவத்தை கட்டிப் போரிடுவதையும், தமிழீழ விடுதலைக்கான பாதையாகவும் புதிய ஜனநாயகப் புரட்சி சாத்தியமில்லை எனவும் ஒரு பகுதியினர் விவாதிக்கின்றனர். இன்னொரு பிரிவினர் புதிய ஜனநாயகப் புரட்சியை ஏற்றுக் கொண்டுள்ள போதும் விவசாயிகளின் செயலூக்கமான பாத்திரத்தை மறுக்கிறார்கள். விவசாயப் பிரதேசங்கள் – கிராமங்களே புரட்சியின் தொடக்க நிலைகள் என்பதை மறுத்து ஒரு அருபமான புரட்சியினை இவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். தெளிவு படுத்தக் கோரும் போதெல்லாம், கிராமப்புற வேலைகளை நிராகரிக்கவில்லை. ஆனால் அதற்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டாம் என்று தான் சொல்கிறோம் என்றும் நிலப் பிரபுத்துவ எதிர்ப்புக் கோசங்கள், நிலப்புரட்சி என்பவை பிரதானமல்ல எனவும் வாதிக்கின்றனர். சாராம்சத்தில் இவர்களும் தன்னெழுச்சியால் அள்ளுப்பட்டுச் செல்லும் குட்டிப் பூர்ஷ்வா செல்வாக்குப் படைத்தவர்களாகவே செயற்படுகின்றனர் நகர்ப்புற கெரில்லா நடவடிக்கைகள், நகர்ப்புற வேலைகள் போன்றவற்றை முதன்மைப் படுத்தும் இவர்களின் போக்கு விவசாயிகளின் பாத்திரத்தை தாம் மறுக்கவில்லை என்ற போதும் சாராம்சத்தில் அதுவே இவர்களது செயலாக இருக்கிறது.

இன்னொரு பகுதியினர் புதிய சனநாயகப் புரட்சியினை ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஆயினும் நாம் முதலில் குறிப்பிட்டது போல தேசிய விடுதலைக்குப் பிற்பட்டதாகவே அதைக் கருதுகின்றனர்.

ஆக, இம் மூன்று பிரிவினரும் சாராம்சத்தில் செய்வதெல்லாம் பாட்டாளி வர்க்கத்தின் உலக சோசலிசப் புரட்சிக் கடமையை நிறைவு செய்தலை, தேசிய விடுதலையைத் தடுத்து நிறுத்தப் பெரும் பூர்ஷ்வா வர்க்கத்தினர் செய்யும் தீவிர நடவடிக்கைகளுக்குத் துணை போதலேயாகும்.

## 6

## தமிழீழத்தின் புதிய சனநாயகப் புரட்சி

தமிழீழப் பாட்டாளி வர்க்கம், ஒரு அரைக்காலனிய அரைநிலப் பிரபுத்துவ நாட்டின் பாட்டாளி வர்க்கம் என்ற வகையில் அது இரண்டு பிரதான கடமைகளைக் கொண்டுள்ளது. முதலாவது அது தனது சொந்தத் தேசத்தின் ஏகாதிபத்திய நிலப் பிரபுத்துவ தளைகளை உடைத்து தேசத்தின் ஜனநாயகப் புரட்சியினை நிறுவுவது. இரண்டாவது அது தனது சொந்த நாட்டில் சோசலிசப் புரட்சிப் கடமையை நிறைவு செய்வது. இந்த இரண்டு கடமைகளை நிறைவு செய்வதன் மூலமே தமிழீழப் பாட்டாளி வர்க்கம் தனது தேசத்தின் உலக சோசலிசப் புரட்சிக்கான தனது வரலாற்றுக் கடமையை நிறைவு செய்ய முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டாளி வர்க்கத்தின் இந்த இரண்டு கடமைகளை ஏற்றுக் கொள்கிற அரை வேக்காட்டு மாக்சியவாதிகளும், பூர்ஷ்வாக்களும் பாட்டாளிவர்க்கத்திடம் எதிர்பார்ப்பதெல்லாம் ஜனநாயகப் புரட்சித் தலைமையை பூர்ஷ்வாக்களிடம் பாட்டாளி வர்க்கம் கையளித்து விட வேண்டுமென்பதையே இதற்கேற்ற விதத்தில் இத்திரிபுவாத அரைவேக்காட்டு மாக்சியவாதிகள் பாட்டாளிவர்க்கம் இன்னும் போராட்ட அரங்கில் குதிக்காதமையையும், ஜனநாயகப் புரட்சியில் ஐக்கியப்பட்ட பல்வேறு வர்க்கங்களின் கூட்டு முயற்சியின் தேவையையும் சுட்டிக்காட்டி விவாதிக்கிறார்கள். பாட்டாளி வர்க்கம் செயலூக்கமுள்ள தலைமைப் பாத்திரம் வகிப்பதும் ஐக்கிய முன்னணியை பாட்டாளிவர்க்க நலனுக்கு இசைவாக வழிநடத்திச் செல்லலையும் எதிர்க்கிறார்கள். மாறாகப் பாட்டாளிவர்க்கத் தலைமைப் பாத்திரத்தை வெறும் தத்துவார்த்த அரசியல் ரீதியாக (கவனிக்கவும்: ஸ்தாபன ரீதியாக அல்ல.) தலைமையில் இருப்பதாகக் கோசித்துக் கொண்டு ஸ்தூலமாக அதை நிறுவுவதை எதிர்த்த வண்ணம் ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் பங்காற்ற வேண்டும் — என்று கோரிவருகிறார்கள். இவர்களது இந்தப் பசப்பல் தனமான 'தலைமை'ப் பாத்திரம் வெற்று வேட்டுத்தனமான ஒரு பொய்யுரையாகவும், புரட்சியின் கனிகளை பூர்ஷ்வா வர்க்கம் அறுவடை செய்ய அனுமதிப்பதற்கான பேரவாவாகவும் வெளிப்பாடடைகின்றது!

பாட்டாளிவர்க்கம் எக்காரணம் கொண்டும் எக்காலத்திலும் தனது நலன்களை விட்டுக் கொடுக்காது உறுதியாகப் போரிட்டாக வேண்டுமென்பது மார்க்சியம் போதிக்கும் அடிச்சுவடியாகும். ஏனென்றால் பாட்டாளிவர்க்கம் விட்டுக் கொடுக்கின்ற ஒவ்வொரு கணமும், அதன் கரங்களில் மேலும் அதிக விலங்குகளைப் பூட்டத் தயாராகவுள்ள பூர்ஷ்வா வர்க்கத்திற்கு வாய்ப்பளிப்பதாகும். எனவே தமிழீழத்தின் புதிய ஜனநாயகப் புரட்சியைப் பாட்டாளிவர்க்கம் தானே தலைமையேற்று முன்னெடுத்துச் சாதித்தாக வேண்டும்.

ஆனால் தமிழீழத்திலோ பாட்டாளிவர்க்கம் தனக்கென ஒரு கட்சி கூட இல்லாத நிலையில் இருக்கிறது. ஒரு புரட்சிகரமான கம்யூனிஸ்ட் கட்சி இல்லை என்பது—தனக்கென உருக்குப் போன்ற ஒரு ஸ்தாபனம் இல்லை என்பது பாட்டாளிவர்க்கம் தமிழீழத்தில் நிராயுதபாணியாக நிற்பதையே குறிக்கிறது. இந்த நிலையில் அது விட்டுக் கொடுக்கின்ற ஒவ்வொரு சிறு விட்டுக்கொடுப்பும் மிக மோசமாகப் புரட்சியைப் பின்னடையச் செய்வதாகும். எனவே தமிழீழப் பாட்டாளிவர்க்கம் ஒருபோதும் ஜனநாயகப் புரட்சிக்கான தனது தலைமையினை விட்டுக் கொடுக்கப் போவதில்லை. விட்டுக்கொடுக்கவும் முடியாது.

இன்று தமிழீழத்தின் யதார்த்த நிலமை எத்தகையது? தமிழீழ விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களின் போக்கு எத்தகையதாக உள்ளது? என்பன தமிழீழப் பாட்டாளி வர்க்கம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான பிரச்சினைகளாகும். தமிழீழத்தில் இன்று புரட்சிக்குச் சாதகமான சூழ்நிலைகள் வளர்ந்து வருகின்றன. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களும் அவர்களது அடிவருடிகளும் மக்கள் முன் அம்பலமாகி வருகிறார்கள். புரட்சி யுத்தம் ஒரு தவிர்க்க முடியாத தேவையாக உணரப்படுகிறது. இங்குள்ள ஆளும் வர்க்கங்கள் என்ன செய்கின்றன? தமிழீழத்தின் புரட்சி எழுச்சியை, மக்களது விழிப்புணர்வை இந்திய விஸ்தரிப்புவாதிகளுக்குச் சாதகமாகவும், தமது சுரண்டல் நலன்களுக்குச் சாதகமாகவும் திசைதிருப்பி விட்டுள்ளார்கள். சனநாயகப் புரட்சியைக் காட்டிக் கொடுக்கவும் ஏகாதிபதியச் சுரண்டலுக்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கவும் விடுதலை இயக்கங்களைக் கையாண்டு வருகிறார்கள். தமிழீழத்தின் வர்க்கங்களைக் கடந்த ஒற்றுமையைக் கோருகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைக்கான இயக்கங்களோ தமிழ் மக்களின் ஒற்றுமை என்ற பெயரில் வர்க்கங்கள் நிலவுவதையும், வர்க்க முரண்பாடுகள் நிலவுவதையும் மறுத்து வருகிறார்கள். இதன் மூலம் பூர்சுவா பெரும்கள். இதன் மூலம் பூர்ஷ்வா நலன்களை உயர்த்திப் பிடிக்கிறார்கள்.

ஆனால், எல்லாம் வர்க்க நலன்களின் அடிப்படையிலேயே நடக்கின்றன என்பது தான் தமிழீழத்தின் யதார்த்த நிலை. பாட்டாளி வர்க்கம் தனது வர்க்க நலனின் அடிப்படையிலேயே இத் தேசிய இனப்பிரச்சினையில் கவனம் செலுத்துகிறது. தனது முன்னணிப் படையான கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டிக் கொள்வதையும், புதிய ஜனநாயகப் புரட்சியை நிறுவுவதையும் நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது.

சரி, இந்தத் தேசியவாதக் குழுக்களின் போராட்டத்தின் மூலமே — தசியவாதப் பாதையில் தொடர்ந்து செல்வதன் மூலமே ஒரு தொழிலாள, விவசாயிகள் சனநாயக சர்வாதிகாரத்தை உருவாக்கி விட முடியுமா? இல்லை ஆனாலும் இப்படிப்பட்ட ஒரு அரசு நிச்சயம் வரத்தான் போகிறது. விவசாயப் புரட்சியானது தனது முழு நிறைவையும் நோக்கி நடைபோட்டுச் செல்லும் போது அத்தகைய சனநாயக சர்வதிகாரம் உருவாகும்; உறுதிப்படும்; [illegible]த விவசாயப் புரட்சிப் பாதையில் [illegible]ல்லாத வரைக்கும் அத்தகைய சர்வாதி[illegible]த்தின் உறுப்பாக அரசு உருப்பட[illegible]யாது.

[illegible]சிய விடுதலையின் வழியே பெறப்பட[illegible]கும் அரசு தொழிலாள விவசாயிகளின் [illegible]நாயக சர்வாதிகாரத்தின் கருவியாக [illegible]மைய வேண்டுமானால் அது விவசாயி[illegible]ன் நிலப்புரட்சியில் இருந்து தோன்[illegible] அரசாகவும், விவசாயிகளின் நிலப்[illegible]சியினையும் பாதுகாத்து அதற்காகப் [illegible]ரிடுவதாகவும் அமைய வேண்டும்— [illegible]த்தகைய அரசும் சரி, அத்தகைய அர[illegible] கொண்டுவரப் போவதாகக் கூறிக் கொள்ளும் ஸ்தாபனங்களும் சரி, விவசாயிகளது இயக்கத்தின், வழித்தோன்றல்களாக தொழிலாள விவசாயிகளின் புரட்சிப் பள்ளியில் புடமிடப்பட்ட அவர்களின் சிறந்த புதல்வர்களால் கீழ் இருந்து மேல் வரை தலைமை தாங்கப் படுவதாகவும் அமைவது மட்டுமல்ல தனது அத்திவாரத்தில் எண்ணற்ற விவசாயி அமைப்புக்களையும், தொழிற் சங்க அமைப்புக்களையும், இதர புரட்சிகர அமைப்புக்களையும் நாடு பரந்தளவில் கொண்டதாக அமைய வேண்டும்.

அந்த நிலைமைகள் உத்தரவாதமளிக்கப் படுமானால் மட்டுமே இந்தத் தேசிய விடுதலைப் போராட்டமும் சரி, தேசிய விடுதலைக்காகப் போராடும் ஸ்தாபனமும் சரி, புதிய சனநாயகப் புரட்சியைச் சாதிப்பதற்காகத் தொழிலாள விவசாயிகளின் புரட்சிகர சனநாயக சர்வாதிகாரத்தைக் கட்டியெழுப்பத் தகுதி படைத்ததாக இருக்கும். அத்தகைய ஸ்தாபனத்தைக் கட்டாது அதற்காக உழைக்காது, அதற்கான பாதையில் போர்க்குணத்துடனும், பொறுப்படனும் நடந்து செல்லாது அத்தகைய புரட்சிப் போராட்டத்தின் வழியே அரசை நிறுவாது புதிய சனநாயகப் புரட்சி என்பதற்கு என்ன அர்த்தம் இருக்கமுடியும்?

மேலும் தேசிய விடுதலைப் போராட்ட அரங்கில் தேசியவாத சக்திகளின் அணிகளில் பெரும் (தரகு) பூர்ஷ்வா நிலப்பிரபுத்துவ ஏகாதிபத்திய விஸ்தரிப்புவாதக் கும்பல்களும் கலந்து நிற்கும் வேளையில் வர்க்கப் போராட்டத்தில் உறுதியாகக் கால் தரித்து நின்று போரிடாது தன்னை அணிதிரட்டுவதும் முன்னணி வகிப்பதும் தொழிலாள விவசாயிகளுக்குச் சாத்தியமா? தலைமையை யார் நிறுவுவது என்னும் போராட்டமானது, போராட்டம் எந்த வர்க்கத்தை வலுவூட்டுவதாக செல்கிறது என்பதைப் பொறுத்து இங்கு கணிசமான வர்க்க மோதல்களையும் விளைவுகளையும் தேசியவாத அணிகள் சந்திப்பதினைத் தவிர்க்க முடியாது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தில் ஒவ்வொரு அடக்கப்பட்ட வர்க்கப் பிரிவும் தத்தமக்குரிய பாதையினை வகுத்துக் கொள்கின்றன. அனைவருக்கும் பொதுவான பாதை ஒன்று என்பது சாத்திய மற்றதே. பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சக்திகளைத் திரட்டிப் போராட்டத்தில் புரட்சிகர சமூக அடிப்படைகளை உருவாக்கும் மார்க்கத்தைப் பின்பற்றி 'மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசு' வடிவத்தின் மொத்த வெற்றிக்கான யுத்தப் பாதையிலே புதிய சனநாயகப் புரட்சி, சோசலிசப் புரட்சிக் கடமையை நிறைவு செய்ய முடியும். அல்லாத போது முதலாளித்துவப் பாதையிலேயே சென்று புரட்சி சிதையும்.

பாட்டாளி வர்க்கம் தனது தலைமையில் ஏனைய வர்க்கத்தினைத் திரட்டிச் கொள்ளவும் முதலாளியத்தின் பின்னால் அவை இழுபடாதிருக்கவும் தனது முன்னணிப் படையான செயலூக்கமுள்ள ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் புரட்சிகரமான ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டிக் கொள்ளும். விவசாயப் புரட்சி மார்க்கத்தினை அது முன்னெடுத்துப் புரட்சியில் முன்னேறிச் செல்லும்.

தமிழீழத்தின் புதிய சனநாயகப் புரட்சியே தமிழீழத்தின் தேசிய விடுதலையையும் தமிழீழ மக்களுக்கு சனநாயக வாழ்வையும் அளிக்கும். ஒரே திட்டமாக இருக்க முடியும் என்பதைப் பாட்டாளி வர்க்கம் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.

தமிழீழத்தின் புதிய சனநாயகப் புரட்சி, பரந்து பட்ட விவசாயிகளின் நிலப் புரட்சியினைத் தனது மைய அச்சாகக் கொண்டிருக்கும்; பாட்டாளி வர்க்கத் தலைமையில் விவசாயிகள் நடாத்தும் புரட்சிகர யுத்தத்தை அது பிரதானமாகக் கொண்டிருக்கும்; பின் தங்கிய பிரதேசங்களில் இருந்து முன்னேறிய பிரதேசங்களை நோக்கி முன்னேறிச்செல்லும் புரட்சி அலையினை அது தமிழீழத்தில் ஒலிக்கும்; கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி அது முன்னேறும்; தமிழீழ மக்களின் அடிமைத் தளைகளையும், சுரண்டல் கொடுமைகளையும் துடைத்தெறியும். தொழிலாள விவசாயிகள் மற்றும் புரட்சிகர வர்க்கங்களின் ஐக்கிய முன்னணி நடாத்தும் இப் புரட்சிப் பேரலை தமிழீழத்தின் விடிவினை வரலாற்றில் எழுதும்; தமிழீழப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி முத்திரைகளை அது இம் மண்ணில் பொறிக்கும்.

இவ்வாறு தமிழீழப் பாட்டாளி வர்க்கம் தன் சர்வதேசியக் கடமையைத் தமிழீழத்தில் நிறுவிக் காட்டும்!

★

*மக்களுக்கு முழுமனதுடன் தொண்டு செய்வது, ஒரு கணமேனும் பொதுமக்களிடமிருந்து நம்மைப் பிரியாமல் வைத்திருப்பது; எதைச் செய்தாலும் மக்களின் நலன்களிலிருந்தன்றி, ஒருவரின் சுயநலத்திலிருந்தோ அல்லது ஒரு சிறு கும்பலின் நலன்களிலிருந்து தொடங்காமலிருப்பது; மக்களின் மீதான தமது பொறுப்பையும் கட்சியின் தலைமை ஸ்தாபனங்கள் மீதான தமது பொறுப்பையும் ஒன்றாகக் கருதுவது—இவையே நமது தொடக்கப்புள்ளியாகும்.*

— மாஓ —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்டாலின்

# சுன்யாட்சன் பல்கலைக்கழக மாணவர்களுடன் நடத்திய உரையாடல்

1927 மே 13

## முதல் மூன்று கேள்விகள்

"சீனாவின் நாட்டுப் புறத்தில் விவசாய வர்க்கத்தின் போராட்டம் முதலாளி வர்க்கத்திற்கு எதிராக நடத்தப் படுவது போல பிரபுத்துவ மிச்ச சொச்சங்களுக்கு எதிராக நடத்தப்படவில்லை என்று 'றடெக்' வற்புறுத்துவதில் என்ன தவறு?"

சீனாவில் வர்த்தக மூலதனமா அல்லது பிரபுத்துவ மிச்ச சொச்சங்களா, எது மேலோங்கி இருக்கிறது என்பதை வரையறுத்தம் செய்ய முடியுமா?"

"பெரும் தொழிற்துறை முயற்சிகளுக்கு உரிமையாளராய் உள்ள சீன இராணுவ வாதிகள் அதே வேளையில் பிரபுத்துவத்தின் பிரதிநிதிகளாய் இருப்பது ஏன்?"

இந்தக் கேள்வியில் சொல்லப்பட்டது போன்ற ஏதோ ஒன்றை றடெக் வலியுறுத்துவது உண்மைதான். எனது ஞாபகத்தின் பிரகாரம் மாஸ்கோ நிறுவனத்தின் உற்சாகிகளுக்கு ஆற்றிய தமது உரையில் அவர் சீனாவின் கிராமப் புறத்தில் நிலப் பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் இருப்பதை முற்றாக மறுத்துள்ளார் அல்லது அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

அது உண்மையில், றடெக்கைப் பொறுத்தவரையில், ஒரு பாரதூரமான தவறு.

சீனாவில் பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் இல்லாவிட்டால் அல்லது சீனாவின் நாட்டுப் புறத்தில் அவை மிகப் பெரும் முக்கியத்துவம் பெற்றிராவிட்டால் அங்கு நிலப் புரட்சிக்கான களமே இருக்காது. சீனப் புரட்சியின் இன்றைய கட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான கடமைகளில் நிலப் புரட்சியும் ஒன்று என்று சொல்வதில் அர்த்தமே இல்லை.

சீனாவின் நாட்டுப் புறத்தில் வர்த்தக மூலதனம் இருக்கின்றதா? ஆம், இருக்கின்றது. அது இருப்பது மட்டுமல்ல, விவசாயிகளின் இரத்தத்தையும் உறிஞ்சிக் குடிக்கிறது. அதன் உறிஞ்சும் திறன் எந்த நிலப் பிரபு உறிஞ்சுவதிலும் பார்க்கக் குறைந்ததல்ல. ஆனால் புராதன முறையில் திரண்ட இந்த வர்த்தக மூலதனம் பிரபுத்துவ எஜமானின் நிலப்-பிரபுவின் ஆதிக்கத்துடன் சீனாவின் நாட்டுப் புறத்தில் பிரத்தியேகமாக ஒன்றிணைந்து, விவசாயிகளைச் சுரண்டுவதிலும் ஒடுக்குவதிலும் நிலப்பிரபுவின் மத்தியகால முறைகளைக்கைக்கொள்கின்றது.

றடெக்கின் தவறு என்னவென்றால் இந்தப் பிரத்தியேகத்தன்மையை, விவசாய வர்க்கத்தைச் சுரண்டுவதிலும் அடக்கி ஒடுக்குவதிலும் மத்தியகாலப் பிரபுத்துவ முறைகள் பேணிக் காக்கப்படுவதோடு, சீனாவின் கிராமப் புறத்தில் வர்த்தக மூலதனத்துடன் பிரபுத்துவ மிச்ச சொச்சங்களின் ஆதிக்கம் ஒன்றிணைந்திருப்பதை கிரகித்துக் கொள்ளாததாகும்.

ராணுவவாதமும், துச்சுன் முறைகளும், எல்லா விதமான ஆளுநர்களும் இன்றைய தீ—உள்ளம் படைத்த பேராசைக்கார ராணுவ, ராணுவமற்ற அதிகாரத்துவம் முழுவதும் சீனாவின் இந்தப் பிரத்தியேகத் தன்மையின் அடிப்படையில் ஒரு மேலமைப்பை உருவாக்கியுள்ளன.

ஏகாதிபத்தியம் இந்தப் பிரபுத்துவ—அதிகாரத்துவ யந்திரம் முழுவதையும் ஆதரித்து வலுவூட்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராணுவவாதிகளில் சிலர் நிலப்பண்ணை களின் சொந்தக் காரராக இருக்கும் அதே சமயம் தொழிற்துறை முயற்சிகளின் உரிமையாளராக இருப்பது அடித்தளத்தில் எவ்வித மாற்றத்தையும் உண்டாக்கவில்லை. பல ரஷ்ஷிய நிலப் பிரபுக்கள் கூட ஆலைகளையும் தொழில் முயற்சிகளையும் வைத்திருந்தார்கள். இருந்தும் அவர்கள் பிரபுத்துவ மிச்சசொச்சங்களின் பிரதிநிதிகளாய் விளங்குவதை அது தடுக்கவில்லை.

பல பிராந்தியங்களில் விவசாயிகளின் சம்பாத்தியத்தில் 70 வீதம் கிளார்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் சென்றால் நிலப்பிரபு யதார்த்தத்தில் பொருளாதாரத் துறை, நிர்வாக, நீதித்துறை இரண்டிலும் அதிகாரம் செலுத்தினால், மாகாணங்கள் பலவற்றில் பெண்களையும் பிள்ளைகளையும் வாங்குவதும் விற்பதும் இன்னும் நடைமுறையில் இருந்தால்—பின்னர் இந்த மத்திய கால நிலைமையில் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரமானது வர்த்தக மூலதன அதிகாரத்துடன் பிரத்தியேகமான முறையில் இணைந்துள்ள பிரபுத்துவ மிச்ச சொச்சங்களின் அதிகாரம், நிலப்பிரபுக்களினதும், ராணுவ ராணுவமற்ற நிலவுடமை அதிகாரத்துவத்தினதும் அதிகாரம் என்பதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

இந்தப் பிரத்தியேக நிலைமைகள் தான் சீனாவில் வளர்ந்து கொண்டிருக்கின்ற தொடர்ந்து வளரப்போகின்ற விவசாயிகளின் நிலச் சீர்திருத்த இயக்கத்திற்கான விளை நிலத்தை வழங்குகின்றன.

இந்த நிலைமைகள் இல்லாவிட்டால், பிரபுத்துவ மிச்ச சொச்சங்களும் பிரபுத்துவ ஒடுக்கு முறைகளும் இல்லா விட்டால் சீனாவில் நிலப்புரட்சி நிலச் சுவாந்தார்களின் நிலத்தைப் பறிமுதல் செய்வது போன்ற கேள்விக்கே இடமில்லை.

இந்த நிலைமைகள் இல்லாவிட்டால், சீனாவில் ஒரு நிலப் புரட்சி பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

## நாலாவது கேள்வி

"வூஹான் அரசாங்கம் பாட்டாளிவர்க்கத்தினதும் விவசாயி வர்க்கத்தினதும் ஒரு ஜனநாயக சர்வாதிகாரமா? இல்லாவிட்டால், ஒரு ஜனநாயக சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கு மேற்கொண்டு நடாத்த வேண்டிய போராட்ட வழிகள் யாவை?"

"ஒரு 'இரண்டாவது' புரட்சி இல்லாமல் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திற்கு மாறிச் செல்வது சாத்தியம் என்று மார்ட்டினேவ் வலியுறுத்துவது சரியா? அப்படியென்றால் சீனாவில் ஜனநாயக சர்வாதிகாரத்திற்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும் இடையேயுள்ள எல்லைக்கோடு யாது?

வூஹான் அரசாங்கம் இன்னும் ஒரு பாட்டாளிவர்க்கத்தினதும் விவசாயிவர்க்கத்தினதும் ஜனநாயக சர்வாதிகாரமாக அமையவில்லை. அப்படி ஒன்றாக மாறலாம். நிலப் புரட்சி பூரணமாக வளர்ச்சியடைந்தால், அது ஒரு ஜனநாயக சர்வாதிகாரமாக மாறுவது நிச்சயம். ஆனால் அது இன்னும் இத்தகைய ஒரு சர்வாதிகாரத்தின் உறுப்பாக இல்லை.

வூஹான் அரசாங்கம் ஒரு பாட்டாளி வர்க்கத்தினதும் விவசாய வர்க்கத்தினதும் ஜனநாயக சர்வாதிகார நிறுவனமாக மாறுவதற்கு என்ன தேவை? அதற்குக் குறைந்த பட்சம் இரண்டு விஷயங்கள் தேவை.

முதலாவதாக, வூஹான் அரசாங்கம் சீனாவில் ஒரு நில—விவசாயப் புரட்சியின் அரசாங்கமாக, அந்தப் புரட்சிக்கு இயன்றளவு ஆதரவு அளிக்கின்ற ஒரு அரசாங்கமாக மாற வேண்டும்.

இரண்டாவதாக, விவசாயிகள் தொழிலாளர் அணிகளில் இருந்து வரும் நிலச் சீர்திருத்த இயக்கத்தின் புதிய தலைவர்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் மேல்மட்டத் தலைமையில் சேர்க்க வேண்டும்; விவசாய சங்கங்களையும் தொழிலாளரின் தொழிற்சங்க கவுன்சில்களையும் நகரிலும் நாட்டிலும் உள்ள இதர புரட்சிகர நிறுவனங்களையும் அதன் கீழ்ப்பட்ட ஸ்தாபனங்களில் சேர்ப்பதன் மூலம் அவற்றை விஸ்தரிக்க வேண்டும்.

இன்று கோமிந்தாங்கில் சுமார் 500,000 உறுப்பினர்கள் உண்டு. சீனவைப் பொறுத்தவரையில் இது ஒரு சிறிய, மிக அற்பமான தொகையாகும். கோமிந்தாங் பல பத்து லட்சம் புரட்சிகர விவசாயிகளையும் தொழிலாளர்களையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் கோடிக் கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட பலமுள்ள ஒரு புரட்சிகர ஜனநாயக அமைப்பாக மாற வேண்டும்.

இத்தகைய நிப்பந்தனைகள் மூலம் தான் கோமிந்தாங் ஒரு பாட்டாளிவர்க்கத்தினதும் விவசாயிவர்க்கத்தினதும் புரட்சிகர ஜனநாயக சர்வாதிகார நிறுவனமாய் விளங்கக் கூடிய ஒரு புரட்சிகர அரசாங்கத்தை நிறுவும் நிலையைப் பெற முடியும்.

தோழர் மார்ட்டினேவ் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்குச் சமாதானமாய் மாறிச் செய்வது பற்றி உண்மையில் கூறினரா என்பது எனக்குத் தெரியாது. தோழர் மார்ட்டினேவின் கட்டுரையை நான் வாசிக்கவில்லை; நான் வாசியாத காரணம் நமது நாளாந்த படைப்புக்கள் அனைத்திலும் கண்வைப்பது என்னைப் பொறுத்த வரையில் அசாத்தியம். சீனவில் முதலாளித்துவ ஜனநாயக புரட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு சமாதான மாற்றம் பற்றி அவர் உண்மையில் குறிப்பிட்டிருந்தால் அது ஒரு தவறாகும்.

சுருனேவ் ஒரு தடவை, ''என்ன நினைக்கிறீர்கள்? தோழர் ஸ்டாலின்! சுற்றிவளைத்து போகாமல், கோமிந்தாங் மூலம் சமாதான முறையில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்துக்கு உடனடியாகச் செல்லக் கூடிய வகையில் விஷயங்களை ஒழுங்கு செய்வது சாத்தியமாகாதா?'' என்று என்னைக் கேட்டார். நான் திருப்பி, ''சீனவில் நிலைமை எப்படி இருக்கிறது தோழர் சுருனேவ் அங்கு வலதுசாரி கோமிந்தாங் உறுப்பினர், ஒரு மூலதன முதலாளி வர்க்கம், ஏகாதிபத்தியவாதிகள் உண்டா?'' என்று கேட்டேன். அவர் 'ஆம்' என்று பதிலளித்தார் ''அப்படியென்றால் ஒரு போர் தவிர்க்க முடியாதது'' என்றேன் நான்.

அது சியாங்கை ஷேக்கின் திடீர் ஆட்சிக் கவிழ்ப்பிற்கு பின்பாகும். உண்மையாக சிந்தாந்த ரீதியில், சீனவில் புரட்சியின் சமாதான வளர்ச்சிச் சாத்தியப்பாடு பற்றி எண்ணிப் பார்க்கலாம், உதாரணமாக ரஷியாவில் சோவியத்துக்கள் மூலம் புரட்சியின் சமாதான மாற்றம் பற்றி லெனின் ஒரு காலத்தில் யோசித்தார். அது 1917 ஏப்ரல் முதல் ஜூலை வரையான காலத்தில். ஆனல் ஜூலைத் தோல்விக்குப் பின், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு சமாதானமாய் மாறுவது பற்றி யோசிப்பது கேள்விக்கு அப்பாற்பட்டது என்பதை அவரே அங்கீகரித்தார். ஆக, சீனவில் பாட்டாளிவர்க்கப் புரட்சிக்குச் சமாதான மாற்றம் பற்றி எண்ணுவது மேலும் அசாத்தியம் என நான் கருதுகின்றேன்.

ஏன்?

முதலாவதாக, சீனப் புரட்சியின் எதிரிகள் (சாங் சோலின், சியாங் கை ஷேக், பெரு முதலாளிவர்க்கம், துரைத் தனத்தார், நிலப்பிரபுக்கள் முதலிய) உள்நாட்டு, (ஏகாதிபத்தியவாதிகள் போன்ற) வெளிநாட்டு எதிரிகள் இரு சாராரும் அளவில் பலராகவும் உள்ளனர். இந்த நிலையில் பெரும் வர்க்கச் சமர்கள் இல்லாமல் பாரதூரமான பிளவுகளும் விட்டோடல்களும் இல்லாமல் புரட்சியின் மேல்வளர்ச்சிச் சாத்தியப்பாடு பற்றிச் சிந்திக்கவே முடியாது.

இரண்டாவதாக, கோமிந்தாங் அரச அமைப்பு வடிவம் முதலாளித்துவ - ஜனநா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யகப் புரட்சியில் இருந்து பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கு மாறிச் செல்வதற்கு ஒரு தகுதியான வடிவம் என எண்ண எவ்வித நியாயமும் இல்லை.

கடைசியாக உதாரணத்திற்கு, பாட்டாளிவர்க்கப் புரட்சியின் முன்மாதிரி வடிவமான சோவியத்துகள் மூலம் பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கான ஒரு சமாதான மாற்றம் வெற்றி பெறவில்லை என்றால் கோமிந்தாங் மூலம் இத்தகைய ஒரு மாற்றம் சாத்தியமாகும் என எண்ணுவதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது?

எனவே சீனாவில் பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கு சமாதானமாற்றம் பற்றிச் சிந்திப்பது கேள்விக்குப் புறம்பானது என நான் கருதுகின்றேன்.

## ஆறுவது கேள்வி

சீனாவில் கமாலிஸ்ட் புரட்சி ஒன்று சாத்தியமா?

※ சீனாவில் அது நிகழ முடியாது; எனவே அசாத்தியம் என நான் கருதுகிறேன்.

தொழில்துறைப் பாட்டாளிவர்க்கம் இல்லாத அல்லது யதார்த்தத்தில் ஒன்றுமே இல்லாத, பலமுள்ள நில-விவசாயப் புரட்சி நிலவாத துருக்கி, பாரசீகம், அல்லது ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் மாத்திரம் ஒரு கமாலிஸ்ட் புரட்சி சாத்தியம். கமாலிஸ்ட் புரட்சி என்பது ஒரு மேல் தட்டுப் புரட்சி, அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் எழுகின்ற தேசிய வர்த்தக முதலாளிகளின் ஒரு புரட்சி, அதன் பின்னைய தளர்ச்சி சாராம்சத்தில் விவசாயிகள் தொழிலாளர்களுக்கு எதிராக ஒரு நிலப் புரட்சி நடைபெறும் சாத்தியப்பாட்டுக்கு எதிராக செலுத்தப் படுகிறது.

சீனாவில் ஒரு கமாலிஸ்ட் புரட்சி அசாத்தியம் காரணம்:— அ) சீனாவில் விவசாயிகள் மத்தியில் பெரும் செல்வாக்கு வகிக்கின்ற ஒரு குறிப்பிட்ட அளவு போராட்ட எழுச்சியுடைய உற்சாகமுள்ள தொழில்துறைப் பாட்டாளிவர்க்கம் உண்டு.

ஆ) முன்னேற்றப் போக்கில் பிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்களை வாரியடித்துச் செல்லுகின்ற வளர்ச்சியடைந்த ஒரு நிலப்புரட்சி அங்கு உண்டு.

பல மாகாணங்களில் ஏற்கனவே பல தடவை நிலங்களைப் பறிமுதல் செய்த சீனாவின் புரட்சிகர பாட்டாளிவர்க்கத்தால் அதன் போராட்டத்தில் தலைமை தாங்கப் படுகின்ற பிரமாண்டமான விவசாய வர்க்கம்—அதுவே கூறப்படும் கமாலிஸ்ட் புரட்சிக்கெதிரான ஔடதம்.

துருக்கியை சீனாவுடன் எப்படிச் சம நிலையில் வைக்கமுடியாதோ, அப்படியே கமாலிஸ்ட் கட்சியையும் வூஹானிலுள்ள கோமிந்தாங் கட்சியுடன் ஒரே தட்டில் வைக்க முடியாது. துருக்கி, ஷங்காய், வூஹான், நான்ஜிங், தியென்ஸின் முதலியவை போன்ற கேந்திரங்களை உடையதல்ல. கமாலிஸ்ட் கட்சி இடது கோமிந்தாங்கை விட எவ்வளவு தாழ்ந்ததோ, அங்காராவும் வூஹானை விட அவ்வளவு தாழ்ந்ததாகும்.

அவற்றின் சர்வதேச அந்தஸ்தைப் பொறுத்த வரையில் சீனாவுக்கும் துருக்கிக்கும் உள்ள வேறுபாட்டையும் ஒருவர் மனதில் கொள்ள வேண்டும். துருக்கி சம்பந்தப்பட்ட வரையில் ஏகாதிபத்தியவாதிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த சிரியாவையும் பலஸ்தீனத்தையும், மொசெபொத்தேமியாவையும் பிறவற்றையும் பலவந்தமாய்ப் பறித்துக் கொண்ட ஏகாதிபத்தியம் அதன் பிரதான கோரிக்கைகளுக்கும் ஏற்கனவே உத்தரவாதம் பெற்றுள்ளது. ஏறக்குறைய ஒரு கோடி முதல் ஒரு கோடி இருபது லட்சம் சனத்தொகையுடைய துருக்கி பரிமாணத்தில் ஒரு சிறிய நாடு போல் சீரழிக்கப்பட்டு விட்டது. ஏகாதிபத்தியத்திற்கு அது எவ்வித முக்கியத்துவமும் வாய்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு சந்தையாக்வோ அல்லது முதலீட்டுக்கு ஒரு தீர்க்கமான களமாகவோ திகழவில்லை. இப்படி ஏற்பட்டதற்கான காரணங்களில் ஒன்று என்னவெனில் அனட்டோலியாவில் மாத்திரம் ஒரு நெருக்கமான சனத்தொகையுடைய பழைய துருக்கி தேசிய இனங்களின் ஒரு சாம்பாராக இருப்பதேயாகும்.

சீனு அப்படியல்ல. அது பல கோடி மக்களையுடைய, தேசிய ரீதியில் செறிவான ஒரு நாடு. உலகிலே மிக முக்கியமான சந்தைகளையும் மூலதன ஏற்றுமதிக்கான துறைகளையும் உடைய ஒன்று. துருக்கியில் ஏகாதிபத்தியம் துருக்கியருக்கும் அராபியருக்கும் இடையில் நிலவும் தேசிய இனப் பகைமைகளைப் பயன்படுத்திக் கிழக்கில் உள்ள மிக முக்கியமான துருக்கியில் இருந்து துண்டிப்பதோடு திருப்தி அடைந்து விட முடியும். ஆனுல் சீனுவில் ஏகாதிபத்தியம் அதன் பழைய நிலைகளைப் பாதுகாக்க அல்லது அவற்றில் சிலவற்றையேனும் நிலைநிறுத்த அதைப் பாகம் பாகமாக துண்டிக்கவும் அதில் இருந்து சில மாகாணங்களை முழுமையாகப் பிரித்தெடுக்கவும் தேசிய சீனுவின் உயிர் நிலையத்தில் தாக்க வேண்டியுள்ளது.

இதன் விளைவாக, துருக்கியில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம் கமாலிஸ்டுகளின் ஒரு குறுகிய ஏகாதிபத்திய—எதிர்ப்புப் புரட்சியுடன் முற்றுப்பெற முடிந்தது. சீனுவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமானது ஒரு ஆழமான, ஜனரஞ்சகமான, தெளிவான தேசிய குணும்சத்தை மேற்கொள்வது திண்ணம். ஏகாதிபத்தியத்துடன் துணிகரமான மோதல்களாக வளர்ந்தும் உலகம் பூராவுமுள்ள ஏகாதிபத்தியத்தின் அத்திவாரங்களையே ஈடாடச் செய்தும் படிப்படியாக ஆழமாவது திண்ணம்.

எதிரணியின் (சினேவியேவ், றடெக், ட்ரொஸ்கி, போன்ருரின்) மிகப் பாரதூரமான தவறுகளில் ஒன்று என்னவென்ருல் அது துருக்கிக்கும் சீனுவுக்கும் உள்ள ஆழமான வேறுபாட்டைக் கிரகித்துக் கொள்ளத் தவறுகின்றது; கமாலிஸ்ட் புரட்சியை நிலப்புரட்சியுடன் போட்டுக் குழப்புகின்றது. ஒன்றையும் வேறுபடுத்திப் பாராமல் ஒரே குப்பையாகப் போட்டுக் குவிக்கின்றது.

சீன தேசியவாதிகள் மத்தியில் கமாலிஸ்ட் கருத்துக்களை ஆதரிக்கும் நபர்கள் இருப்பதை நான் அறிவேன்—இன்று சீனுவில் கமாலின் பாத்திரத்தை நடிப்பவர்களும் ஏராளமாக உள்ளனர். அவர்களில் முக்கியமானவர் சியாங் கை ஷேக். அவரை ஒரு சீனக் கமால் என்று கருதும் யப்பானிய பத்திரிகையாளர் சிலரையும் எனக்குத் தெரியும்—ஆனுல் இது எல்லாம் ஒரு கனவு; பீதியடைந்த முதலாளிகளின் பிரமை. சீனுவில் வெற்றியானது சாங் சோலின், சாங் சுங் சாங் போன்ற சீனுவின் முசோலினிகளுக்கு அல்லது வூஹானுக்குக் கிடைக்கும். முன்னவருக்குக் கிடைத்தால் அவர்கள் நிலப் புரட்சியின் வீச்சால் விரட்டியடிக்கப்படுவர்.

இந்த இரு முகாங்களுக்கும் இடையில் நடுநிலை வகிக்க முயலும் சியாங் கை ஷேக்கும் அவரது பரிவாரங்களும் வீழ்ச்சியடைவதும், சாங் சோலின், சாங் சுங் சாங் ஆகியோரின் அதே தலைவிதியைப் பகிர்ந்து கொள்வதும் தவிர்க்க முடியாதவை.

## ஏழாவது கேள்வி

''விவசாய வர்க்கம் உடனடியாக நிலத்தைப் பறிமுதல் செய்வது பற்றிய சுலோகம் சீனுவில் இத் தருணத்தில் முன்வைக்கப்பட வேண்டுமா? ஹுனுனில் நிலம் அபகரிக்கப் படுவதை எவ்வாறு மதிப்பீடு செய்ய வேண்டும்?

✱ இப்பொழுது முன்வைக்கப்பட வேண்டும் என நான் எண்ணுகிறேன். உண்மையில் நிலப்பறிமுதல் பற்றிய சுலோகம் ஏற்கனவே சில பகுதிகளில் நடைமுறைப் படுத்தப் படுகிறது. ஹுனுன், ஹுபெய் முதலிய பல பிரதேசங்களில் விவசாயிகள் ஏற்கனவே நிலத்தைக் கீழிருந்து பறிக்கிருர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள். தமது சொந்த நீதிமன்றங்களையும், தண்டனை உறுப்புக்களையும் தற்காப்பு நிறுவனங்களையும் நிர்மாணிக்கின்றனர். மிகக் கிட்டிய எதிர்காலத்தில் சீன விவசாய வர்க்கம் முழுவதும் நிலப் பறிமுதல் பற்றிய சுலோகத்திற்கு மாறிச் செல்லும்—அங்கு தான் சீனப் புரட்சியின் ஆற்றல் புதைந்து கிடக்கிறது.

வூஹான் வாகை சூட விரும்பினால் சாங் சோ லின், சியாங் கை ஷேக் இருவருக்கும் அதேபோல ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிராக உண்மையான ஒரு சக்தியை உருவாக்க விரும்பினால் நிலச் சுவாந்தார்களின் நிலங்களை அபகரிக்க நில—விவசாயப் புரட்சிக்கு அது இயன்றளவு ஆதரவை அளிக்க வேண்டும்!

சீனாவில் நிலப்பிரபுத்துவத்தையும், ஏகாதிபத்தியத்தையும் ஆயுத பலத்தால் மட்டும் தூக்கியெறிய முடியும் என எண்ணுவது பேதமையாகும். ஒரு நிலப் புரட்சி இல்லாமல், பரந்துபட்ட விவசாயிகளும் தொழிலாளர்களும் வூஹான் துருப்புகளுக்கு உற்சாகமாக ஆதரவு இல்லாமல், இத்தகைய சக்திகளைத் தூக்கி எறிய முடியாது.

சியாங் கை ஷேக்கின் ஆட்சிக் கவிழ்ப்பை சீனப் புரட்சியின் அழிவு என்று எதிரணி அடிக்கடி மதிப்பீடு செய்கின்றது. அது ஒரு தவறு. சியாங் கை ஷேக்கின் ஆட்சிக் கவிழ்ப்பை சீனப் புரட்சியின் சிதைவாகக் கணிப்பவர்கள் உண்மையில் சியாங் கை ஷேக்கின் பக்கம் சார்கிறார்கள். யதார்த்தத்தில் சியாங்கை ஷேக்கை வூஹான் கோமிந்தாங் கட்சிக்குள் திரும்பவும் கொண்டுவர ஆதரவு அளிக்கிறார்கள். சியாங் கை ஷேக் பிரிந்து சென்றிரா விட்டால் புரட்சி லட்சியம் நன்கு முன்னேறியிருக்கும் என நினைக்கிறார்கள் போலும்! அது முட்டாள் தனமானது, புரட்சிகரமற்றது. சியாங் கை ஷேக்கின் ஆட்சிக் கவிழ்ப்பு கோமிந்தாங்கை தூசு நீக்கிச் சுத்திகரிப்பதற்கும், அதன் மையத்தை இடது பக்கம் நகர்த்துவதற்கும் உதவியது உண்மை. சியாங் கை ஷேக்கின் ஆட்சிக் கவிழ்ப்பு யதார்த்தத்தில் பல பாகங்களில் உள்ள தொழிலாளர்களுக்குத் தற்காலிக தோல்வியை ஏற்படுத்துவது நிச்சயம். ஆனால் அது ஒரு அரை குறை, தற்காலிக தோல்வி மட்டுமே. உண்மையின் படி சொன்னால் சியாங் கை ஷேக்கின் ஆட்சிக் கவிழ்ப்புடன் முழுப்படியாகப் புரட்சியானது வளர்ச்சியில் ஓர் உயர்ந்த கட்டத்தில், ஒரு நிலச்சீர்திருத்த இயக்கக் கட்டத்தில் பிரவேசித்துள்ளது. இங்கு தான் சீனப் புரட்சியின் பலமும் வலுவும் பதுங்கிக் கிடக்கிறது.

புரட்சியின் வளர்ச்சியை முறிவு தறிவின்றி மேலோங்கிச் செல்லும் முன்னேற்றமாகக் கருதக் கூடாது. அது புத்தகவாதமன்றி' புரட்சி பற்றிய தத்ரூபக் கருத்தல்ல, ஒரு புரட்சியானது எப்பொழுதும் சில இடங்களில் முன்னேறியும் பழைய ஒழுங்கை உடைத்துக் கொண்டும், வேறு சிலவற்றில் தற்காலிக தோல்விகளைத் தழுவியும் பின்னடைந்தும் வளைவு சுளிவாகவே செல்கிறது. சியாங் கை ஷேக்கின் ஆட்சிக் கவிழ்ப்பு சீனப் புரட்சியின் போக்கில் காணும் அந்த வளைவு சுளிவுகளில் ஒன்று. புரட்சியின் தூசுகளைத் துடைத்து, ஒரு பலம் வாய்ந்த விவசாய இயக்கத்தை முன்னோக்கித் தள்ளி விடுவதற்குத் தேவையான ஒன்று ஆகும்.

ஆனால் இந்த விவசாய இயக்கம் உருவாக்கம் பெற வேண்டும் என்றால், அதற்கு பொதுவான ஒரு சுலோகம் வேண்டும். அந்தச் சுலோகம் ''பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்'' என்பதாகும்.

## ஒன்பதாவது கேள்வி

''இன்றைய கட்டத்தில் சீனாவில் ஓர் ஒழுங்கான செஞ்சேனையை உருவாக்குவது பற்றிய பிரச்சனையை எழுப்புவது சாத்தியமா?''

**✱ ஓர் எதிர்கால நோக்காக இந்தப் பிரச்சினை மனதில் பதிக்கப்பட வேண்டும் என நான் கருதுகிறேன். ஆனால், அனுஷ்டான**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீதியில் நோக்கினுல், இப்பொழுது இந்தத் தருணத்தில் இன்றைய ராணுவத்தை ஒரு புதிய படையால், ஒரு செஞ்சேனையால் பதிலியாக்குவது சாத்தியம். ஏனென்றுல் அதைப் பதிலியாக்குவதற்கு இதுவரை ஒன் றுமே இருக்கவில்லை.

இப்போது உள்ள பிரதான விஷயம் இயன்ற வழிகள் அனைத்திலும் இருக்கின்ற இராணுவத்தை விருத்தி செய்து, புரட்சி மயப்படுத்தும், அதே வேளையில் நிலப்புரட்சிப் பரீட்சையில் சித்தியெய்திய புரட்சிகர விவசாயிகளையும் புரட்சிகரத் தொழிலாளர் களையும் கொண்ட புதிய புரட்சிகர றெஜி மெண்டுகள், டிவிஷன்களுக்கான அத்திவாரத்தை உடனடியாக அமைப்பதும் நம்பக மான தளபதிகளுடன் உண்மையில் நம்பக மான புத்தம் புதிய சேனைகள் பலவற்றை சிருஷ்டிப்பதும் வூஹானில் உள்ள புரட்சிகர அரசாங்கத்தின் கோட்டையாக அவற்றை நிர்மாணிப்பதும் ஆகும்.

அந்தப் படைகள் எதிர் காலத்தில் ஒரு செஞ்சேனையாய் வளரக் கூடிய புதிய ராணுவத்தின் மையக் கருவாக அமைய வேண்டும்.

சமர் முனைகளில் சண்டையிடுவது, சிறப்பாக சகல விதமான எதிர்ப் புரட்சி அற் பர்களுக்கும் எதிராகப் பின்னணியில் போரிடுவது இரண்டுக்கும் இது அவசியம்.

இது இல்லாவிட்டால், விட்டோடிகளுக் கும் துரோகிகளுக்கும் எதிராக, பின்னணி யிலும், முன்னணியிலும் ஏற்படும் பின்ன டைவுகளுக்கு எதிராக எவ்வித உத்தரவா தமும் கிடையாது.

இந்தக் காலகட்டத்துக்கான ஒரே ஒரு சாத்தியமான புத்தி பூர்வமான வழி இந்த வழி தான் என நான் எண்ணுகி றேன்.

---

# தாராளவாதத்தை எதிர்ப்போம்

நாம் ஊக்கமான சித்தாந்தப் போராட்டத்திற்காக நிற்கிறோம். காரணம் அது நமது போராட்டத்திற்கு உதவியாக, கட்சிக்குள்ளும் புரட்சிகர ஸ்தாபனங்களுக்குள்ளும் ஐக்கியத்தை உருவாக்கும் ஒரு ஆயுதமாக விளங்குகின்றது. ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டும் ஒவ்வொரு புரட்சிவாதியும் இந்த ஆயுதத்தை கையில் எடுத்துக் கொள்ள வேண் டும்.

ஆனுல் தாராளவாதம் சித்தாந்தப் போராட்டத்தை நிராக ரித்து, கோட்பாடற்ற சமாதானத்திற்காக நிற்கிறது; இதன் விளை வாக உளுத்துப் போன பண்பற்ற மனுேபாவம் தோன்றி, கட்சியி லும் புரட்சிகர ஸ்தாபனங்களிலுமுள்ள சில பிரிவுகளையும், தனி நபர்களையும் அரசியல் சீர்குலைக்கிறது.

மாவோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சனநாயகவாதிகளுக்கு
# ஒரு கடிதம்

தோழர்களே!

இது தேசிய விடுதலைப் போராட்ட காலகட்டம்; தேசிய விடுதலையும் சனநாயக புரட்சியும் முற்றிலும் வேறுபட்ட இரண்டு கட்டங்கள்; இந்த தேசியப் (புரட்சி) போராட்ட காலத்தில் அனைத்து அடக்கப்பட்ட வர்க்கங்களிடையேயான ஐக்கியமே முதன்மையானது; இந்த காலகட்டத்தில் வர்க்கப் போராட்டங்களை நடத்துவதும், தொழிலாள விவசாயிகளின் புரட்சிகர அணியை கட்டி ஸ்திரப்படுத்துவதும் ஐக்கியத்தை குலைத்துவிடும் என்ற கருத்துக்கள் அரசியல் அரங்கில் பலமாக பேசப்படுகின்றன. தேசிய (சனநாயக) புரட்சியாளர்கள் மத்தியில் இந்தக்கருத்துக்கள் மிகுந்த செல்வாக்கு வகிக்கின்றன என்பது உண்மையே ஆகும்.

தேசிய போராட்டமானது எல்லா அடக்கப்பட்ட வர்க்கங்களுக்கும் தேவையானது. எல்லா வர்க்க ஐக்கியமே அதனைப் பெறுவதற்கு அவசியம் என்றெல்லாம் பேசப்படுவது உண்மை. ஆனல் ஒரு வர்க்கம்—அதிலும் மிக மோசமாக சுரண்டப்படுவதும் ஒடுக்கப்படுவதுமான ஒரு வர்க்கம்—தனது விடுதலைக்கான போராட்டத்தை அப்போராட்டத்திற்காக தன்னை அணிதிரட்டும் வேலையை கைவிட்டு விடும் என்று எப்படி இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்படியாக போராட்டத்தையும் சுதந்திரமான ஸ்திரமான அணியை கட்டும் பணியையும் கைவிட்டு அல்லது ஒப்பு நோக்காக கைவிட்டு—பாட்டாளிவர்க்கமானது ஐக்கியத்திற்கு வருமென்றல் அது தனது அடிமை நிலையை ஏற்றுக் கொள்வதும் இதே ஆண்டான் அடிமைச் சமூக நிலையைக் கட்டிக் காக்க துணைபுரிவதுமேயாக இருக்குமல்லவா? அத்தகையை ஒரு நிலைக்கு பாட்டாளிவர்க்கம் சம்மதிக்கு மென இவர்கள் எப்படி எதிர்பாக்கிறார்கள்? படுமுட்டாள்தனமாக அல்லவா இது இருக்கிறது.

சரி, அது ஒருபுறம் இருக்கட்டும் தேசியவிடுதலைப் புரட்சி நமது நாட்டிலேயே இரத்தம் சிந்திப் பெற்றுக்கொண்டுள்ள அனுபவங்களை சீர்தூக்கிப் பார்ப்பது நமக்கு நமது கடந்த காலத்திலிருந்து படிப்பினைகளைப் பெற்று முன்னேற உதவும்.

இங்கே தேசிய விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு பல ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டதை நாம் அறிவோம். அந்த தேசிய விடுதலை ஸ்தாபனங்கள் பலவும் சுலபமான லாபகரமான வழிதேடி இந்திய அரசுடன் உறவு ஏற்படுத்திக் கொண்டன. இன்று இந்திய உறவின் பின்பு அந்த இயக்கங்களில் இருந்த 'தேசியவாதிகள்' எங்கே? அவற்றின் முற்போக்கான தேசியவிடுதலைக்குணும்சம் இல்லாதொழிந்து இந்திய விஸ்தரிப்புவாத கையாள்களாகும் நிலை எப்படிவந்தது?

எப்போதும் தேசியவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதில் தேசிய முதலாளி வர்க்கம் முன்னணிவகிக்கும். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள்—தேசிய சுதந்திரத்தை உயர்த்திப்பிடிக்கும் தேசிய முதலாளிய பிரதிநிதிகளான முதலாளிய புத்திஜீவி, மாணவர்கள் தான். இவர்களை பாட்டாளி வர்க்க சக்திகளென அசட்டுத்தனமாக கூறிவிடமாட்டீர்கள் என நம்புகிறோம்.

தேசிய முதலாளியம் 'சுதந்திரத்'தை உயர்த்திப் பிடிக்கும் இயல்பைக் கொண்ட அதேசமயம் 'இலாபத்'தை நோக்காக கொண்டதாலும் தொழிலாள வர்க்கத்தின் தீவிர பாத்திரத்தைகண்டு அஞ்சுவதாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது எப்போதும் ஏகாதிபத்திய சக்திகளுடன் 'சமரசம்' செய்து கொள்ளவும் கூடியதாக உள்ளது. அந்த இரட்டை குணும் சம் அதன் பிறவி இயல்பாகும்.

நமது வரலாற்றையும் ஒரு தடவை பாருங்கள். இந்திய—சோவியத் வலைக்குள் சிக்கிய போராட்டத்தை காணமுடியும். தேசியவாதிகள் தலைமையிலான போராட்டம் மக்களிடமிருந்து தனிமைப்பட்டிருந்ததும் ஏகாதிபத்தியத்திடம் சரணடைந்ததும் அறிந்த விடயங்கள்.

அந்த ஸ்தாபனங்களுக்குள் திடமான தேசியவாத சக்திகள் நசுக்கப்பட்டன— சிறு குழுவினராக அவர்கள் விரட்டப்பட்டனர். (அவர்களது அரசியல் அஞ்ஞானத்தால் நடந்து விட்டது என்ன என்பதையே அவர்கள் புரிந்து கொள்ள முடியவில்லை) வலது சாரி தேசிய முதலாளியப் பிரிவுகள், தேசிய சுதந்திரத்தை இன்னமும் உயர்த்திப் பிடித்த இடதுசாரி தேசியவாத (முதலாளிய) அணிகள் மீது கொடியஅடக்குமுறையை - அழித்தொழிப்பை கட்டவிழ்த்து விட்டன. இது இங்கு இன்று நடப்பது.

தேசிய முதலாளியம் எப்போதும் ஒரு லட்சியபூர்வமான தேச சுதந்திர இயக்கத்தை மலரச்செய்ய அயராது பாடுபடுகிறது. புரிந்து கொள்ளப்பட முடியாத ஒரு தீமையின் விளைவாக அதிலேயே ஒரு கொடிய வலது பிரிவு தோன்றி ஏகாதிபத்திய சார்பையும் பாசிசப் பாதையையும் உருவாக்கி விடுகிறது என இத்தேசிய முதலாளியம் கருதுகிறது. வரலாற்றின் விதிகளை புரிந்துகொள்ளமுடியாத முதலாளியத்தால் இது தூய நேர்மை, இலட்சிய வாதங்களினால் வென்றுவிடக் கூடியதாகவும் அகிம்சைப் பாதையினால் நல்வழிப்படுத்த வேண்டியதாயும் கருதப்படுகிறது. முதலாளியம் எப்போதுமே ஒரு 'உன்னதத்தூய இலட்சிய பூர்வமான சனநாயக பண்புடைய ஸ்தாபனம்' என்னும் அகனிலைப்பட்ட கற்பனையை கைவிட்டு விடப் போவதில்லை. அது இறுதிவரை அந்த நைப் பாசையுடன் தவித்தபடியும் புலம்பியபடியும் இருக்கவே செய்யும்.

சனநாயக விடுதலையை நேசிப்பவர்களேனும் வகையில் நீங்களாவது தவறுகளை களைய, சரியான வழிநடக்க விடயங்களை ஆராயவும், சரியான பாதையை, தேடவும் முயற்சி செய்யுங்கள்.

தமிழீழத்தின் எல்லா அடக்கப்பட்ட வர்க்கங்களுக்கும் இன்றைய அடிமை நிலையிலிருந்து விடுபட ஒரு தேசியப் புரட்சியே பொது வழியாக உள்ளது. இந்த தேசிய புரட்சியானது ஒருபோதும் மக்களை சார்ந்து நடத்தப்படும் மக்கள் யுத்தப் பாதையிலன்றி வேறு வழியில் சாதிக்கப்பட முடியாதது. அவ்வாறல்லாத எல்லா தாக்குதல் முறைகளும் ஏகாதிபத்திய பின்பலத்துடன் பொருதும் அரசை தகர்ப்பதில் வெற்றி பெறப் போவதில்லை. ஏகாதிபத்திய பிடிகளை தகர்த்தெறிய பலமிக்க மக்கள் சக்தியை மக்களை திரட்டி பலப்படுத்துவதே முதன்மையான தேவையாகும். இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் வர்க்கங்களிலேயே மிக மோசமான அடக்குமுறைக்குள்ளாக்கப்படும் வர்க்கங்கள் தொழிலாள விவசாயி வர்க்கங்களே! அவை தாம் சுரண்டல், அடிமைத்தனம், சனநாயக மறுப்பு, இனஒதுக்கல் ஆகிய பல தரப்பட்ட வடிவங்களாலும் பாதிக்கப்படுவனவாகும். அந்த வர்க்கங்களின் நலன் அதனது விடுதலை ஒன்றினாலேயே, வென்றெடுக்கப்படமுடியும். புரட்சிதான் அவற்றின் ஒரேவழியாகும். சமரசம் என்பது அவர்களுக்கு எதையும் தருவதில்லையாதலால் அது இயல்பிலேயே மிகவும் புரட்சிகரமாகவுள்ளது. அது உரிமைகளை போர்க்களத்தில் மட்டுமே வென்றெடுக்க முடியுமென்பதால் சமரசப் பாதையற்ற வர்க்கமாகவுள்ளது. தேசிய புரட்சி உட்பட எந்தப் புரட்சியும் அந்த வர்க்கத்தை சார்ந்திருக்கும் போதுதான் ஆற்றல் உள்ளதாக மாறுகிறது. சமரசமற்றதாயும் வெல்லற்கரியதாயும் ஆகிவிடுகிறது. ஆனால் உங்களில் சிலர் தொழிலாள விவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாய வர்க்கங்கள் வர்க்க உணர்வோடு செயலூக்கம் அடைவது தேசிய விடுதலைப் பாதைக்கும் ஐக்கிய முன்னணிக்கும் பிளவுகளையும் பின்னடைவையுமே கொண்டுவருமென கூறியிருந்தார்கள். தொழிலாள விவசாயிகள் ஆற்றல் உள்ள சக்தியாக வளர்ந்து வருவதென்பது எப்படி தேசிய விடுதலை ஐக்கிய முன்னணியை பலமிழக்கச் செய்யுமென எம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை. மாறாக அது தேசிய விடுதலைக்கான ஐக்கிய முன்னணியை பலமடையச் செய்யவும் புரட்சிகரமானதாக ஆக்கவுமே செய்யுமெனவே கருதுகிறோம். இந்நாட்டின் 90 வீதமான தொழிலாள விவசாய மற்றும் புரட்சிகரமான மக்கள் பிரிவுகளனைத்தும் புரட்சிகர உறுதியுடன் பங்கேற்கும் ஓர் முன்னணியை கற்பனை செய்து பாருங்கள். அந்த ஆற்றல் எத்தனை மகத்தானது. அதன் முன் நமது பிற்போக்கான எதிரி எவ்வளவு மோசமாக தோற்றுப் போவானென்பதை உங்களால் உணரமுடியவில்லையா? ஆனால் நீங்கள் புரட்சிகர வர்க்கங்களது வர்க்க உணர்வை, விழிப்பை செயலூக்க வேகத்தை கண்டஞ்சுகிறீர்கள். இது (அச்சம்) உங்களுக்கு 'நீங்கள் இதய சுத்தமாக' விரும்பும் தேசிய விடுதலைக்கு நன்மை செய்யுமென்று, வெற்றிபெற உதவுமென்று நம்ப முடிகிறதா? பாட்டாளி வர்க்கமானது வர்க்க உணர்வையும் புரட்சிப் பாதையையும் கைவிட்ட நிலையில் ஐக்கிய முன்னணியில் பங்கேற்க இயலாதா என விரும்புவது எம்மால் உணரப்படக் கூடியதாக உள்ளது. ஆனால் நண்பர்களே அது சாத்தியமில்லை. அந்த வகையில் உங்களால் தொழிலாள விவசாய வர்க்கத்தை ஒரு பெரும் சக்தியாக வென்றெடுக்க முடியப் போவதில்லை நீங்கள் மீண்டும் ஒரு சில நபர்களுக்குள்ளும் குழு நிலைக்குள்ளும் சுருங்கிப்போகவே நேரும்.

தோழர்களே! மக்கள் யுத்தப்பாதையொன்று மட்டுமே ஏகாதிபத்திய பின் பலத்துடன் அடக்கு முறையை பிரயோகிக்கும் எதிரியை ராணுவ, அரசியல் ரீதியில் முகம் கொடுக் சாத்தியமான ஒரே வழியாகும். அந்தப் பாதைமட்டுமே வெற்றிக்கு வழி சமைக்கும்.

ஆனால் தோழர்களே! **நீங்கள்** மக்கள் என்பதை யார் என்று புரிந்து கொள்ளவில்லை போல தெரிகிறது. தமிழர் என்பதையும், சாரத்தில் 'மனித இனம்' என்பதையும் மக்கள் என்பதையும் ஒன்றாக போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். மக்கள் என்போர் அடக்கப்படும் வர்க்கப் பிரிவினர் ஆவர். இன்றைய சூழலில் தொழிலாள, விவசாய, குட்டிப்பூர்ஷ்வா, தேசிய பூர்ஷ்வா பிரிவினர் சேர்ந்து மக்கட் பிரிவினராக அமைகிறார்கள். அப்படி எனின் மக்கள் விரோதிகள் என்போரும் உளரா என நீங்கள் கேட்கலாம். ஆம் உள்ளனர். ஏகாதிபத்தியங்களும் அவர்களது ஏஜென்டுகளான தரகு முதலாளிகளும் நிலபிரபுக்களும் (தேசிய விடுதலை காலமதினால் தேசபக்தி நிலப்பிரபுத்துவம் பற்றி விவாதிக்க தயாராயுள்ளோம்) மக்கள் விரோதிகளாவர். மக்கள் தமது விரோதிகட்கெதிராக நடத்தும் யுத்தமே 'மக்கள் யுத்தம்' ஆகும். அதனாலேயே 90% பேரினது முன் முயற்சியையும் திரட்டி பலமிக்க புரட்சி அணியையும், வெல்லற்கரியதாயும் அமைய முடிகிறது.

இன்று பிரதானம் பெற்ற முரண்பாடு தேசிய இனத்துக்கும் சிறிலங்கா அரசு, ஏகாதிபத்தியங்களுக் கிடையிலானதே என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். எனினும் கூட நிலபிரபுத்துவத்திற்கும் - விவசாயிகட்கும், ஏகாதிபத்தியங்கட்கும் - பரந்துபட்ட பொது மக்களுக்கும் இடையேயான முரண்பாடுகள் நாட்டினதும், மக்களதும் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் அடிப்படையானவையாக உள்ளன என்பதை மறக்கமுடியாது. நமது நாடு பிரதானமாக ஒரு விவசாய நாடு என்பதனால் நிலத்துக்கான விவசாயிகள் போராட்டமே அவர்களது அடிப்படையானதும் ஜீவாதாரமானதுமான தேவையாக உள்ளதென்பதை மறந்து விட வேண்டாம். ஒரு நிலத்துக்கான போராட்டத்தினால் தான் பரந்த விவசாய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களது முன் முயற்சியை தட்டியெழுப்ப முடியும் உழுபவனுக்கே நிலம் சொந்தம் எனும் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் ஒரு போராட்டம் மட்டுமே இந்த நாட்டின் மிகப் பெரும் பகுதியினரான விவசாய தொழிலாளரையும் வறிய விவசாயிகளையும் தட்டியெழுப்பவும் அணிதிரட்டவும் சாத்தியமான வழியாகும்.

மக்கள் எவரும் தமது அடிப்படை பிரச்சனைகட்கு தீர்வளிக்கும் போக்கில்லாத எப் போராட்டத்திலும் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்க வேண்டாம். அப்படி அன்றி நீங்கள் திரட்டக்கூடியது பரந்துபட்ட தொழிலாள விவசாய பொது மக்களாக இராது உதிரியான நபர்களைத்தான், உங்களால் கட்டியமைக்கக் கூடியது மக்களிடமிருந்து தனிப்பட்ட குழுக்களைத்தான் என்பதை மறந்து விடவேண்டாம்.

தோழர்களே! இது ஏகாதிபத்திய காலம். இதில் ஒரு மக்கள் யுத்தம் மட்டுமே எதிரியை முறியடித்து தேசிய சுதந்திரத்தை பெற உதவும். ஒரு மக்கள் பங்கேற்கும், அவர்களை சார்ந்து வாழும் ஒரு மக்கள் அரசினால் மட்டுமே ஏகாதிபத்திய சுற்றி வளைப்புக்குள்ளும் தப்பிப் பிழைக்க முடியும் அன்றேல் நீங்கள் இராணுவ பலத்தின் முன்போ பொருளாதாரப் போரின் முன்னாலோ உங்களுடைய 'தேசிய சுதந்திரத்தை' பறி கொடுத்தே தீருவீர்கள் என்பதை கூறிவைக்க விரும்புகிறோம். உலகில் இன்று எங்கே தேசிய வாதத் தலைமையில் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றிக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளது?

நிலப் புரட்சியையும் மக்கள் சனநாயக சர்வாதிகார அரசை தோற்றுவித்தலையும் காலனியாதிக்கத்தை முடிவு கட்டலையும் முதன்மைப்படுத்துவது மட்டுமே உங்கள் முன்னால் முன்னேறுவதற்காகவுள்ள சாத்தியமான ஒரே வழியாகும். அந்த வழியில் மட்டுமே மக்களை திரட்டவும் அவர்களது முன்முயற்சியிலும், பலத்திலும் தங்கியிருந்து மக்கள் யுத்தத்தை நடத்தி வெற்றியீட்டுவதும் சாத்தியம் என்பதை ஏற்றுக்கொண்டேயாகவேண்டும்.

நாம் நடத்துவது, முன்னெடுப்பது ஒரு சனநாயகப் புரட்சியையே! நாம் முதலாளிய புரட்சியின் வரையறைகளை கடக்கவில்லை. நாம் தனியுடமையை ஒழிக்கவில்லை. உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் நிலத்திற்கான மறுபங்கீட்டையே கோருகிறோம். எனவே சனநாயகவாத சக்திகள் அனைவரும் ஓர் அணியில் திரளப் பாதைகள் அடைபட்டுப்போய்விடவில்லை சனநாயகப் புரட்சியில் ஈடுபடும் ஒவ்வொரு பிரிவும் தத்தம் நோக்கங்களை நிறைவேற்றவும், நலன்களை அடையவும் பாடுபடும். முதலாளியப் பிரிவும், பாட்டாளி வர்க்க சக்திகளும் (தொழிலாள விவசாயிகள்) தத்தம் தலைமையை ஐக்கிய முன்னணியில் நிறுவ இடையறாது பாடுவடுவது இயற்கையானது. இதன் வெற்றி தோல்விகள் புரட்சி பூர்ஷ்வா ஜனநாயக பாதையா, புதிய சனநாயக பாதையா என்பதை தீர்மானிக்கும்.

தேசிய விடுதலைக்கு விதிக்கப்பட்ட ஒரே பாதை மக்கள் யுத்தப் பாதையே! அடிப்படை முரண்பாடுகளை தீர்க்கும் பாதையிலான தேசிய விடுதலை யுத்தமே மக்கள் சக்தியை திரட்டும் ஒரே பாதை!

எனினும் கூட தேசிய முதலாளிகள் நிலப்பிரபுத்துவத்தின் அடியாக தோன்றியவர்கள் அதனுடன் இன்னமும் வேர்களைக் கொண்டவர்கள் நிலப்புரட்சிப் பாதையை அங்கீகரிக்க தயங்கும் போக்கு அவர்களில் கணிசமான பகுதியிடம் இருக்கவே செய்யுமென்பது நாம் அறியாதது அல்ல. ஆனால் அவர்கள் ஒன்றில் எதிரியுடன் (ஏகாதிபத்தியத்துடன்) சமரசப்பாதையை ஏற்க வேண்டியிருக்கும். அது வலது சாரி பிற்போக்காளரின் பாதையாக இருக்கும்.

* * *

எமது கருத்துக்களை நாம் முன்வைப்பதை கண்டதும் மக்களிடமிருந்து தனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மைப்படவும் சிறு குழுவாக சிதைந்துவிடவுமே நேரும் என்ற அச்சம், சஞ்சலம் உங்களை பாதித்துள்ளதா? ஆனால் எந்த அச்சத்தாலோ, சஞ்சலங்களாலோ நமது அடிப்படை வர்க்கநலன்களையே கைவிடும் அளவுக்கு செய்வோமாயின் அது படுமோசமான சந்தர்ப்பவாதமே அல்லவா? எங்களிடம் நீங்கள் சந்தர்ப்பவாத சேரழிவையா எதிர்பார்க்கிறீர்கள். இல்லை, இத்தகைய சந்தர்ப்பவாதங்களெல்லாம் பாட்டாளிவர்க்கத்தின் புரட்சி நலன்களுக்கு விரோதமானவையே என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

மக்களது மனநிலைபற்றி நாம் கவனிக்க வேண்டியது ஒரு நடவடிக்கையில் இறங்குவதற்கான தருணத்தை தேர்ந்தெடுக்கும் வேளையில்தான். நமது அடிப்படை மார்க்கத்தை திட்டமிடுவதற்கே மக்களின் மனநிலையைக் கணக்கிட்டு அதனால் இழுபட்டு செல்லமுடியுமா? இதனால்தான் "நடவடிக்கைக்கான தருணத்தை தேர்ந்தெடுக்கும்போது தொழிலாளரின் மனோநிலையை கணக்கில் எடுப்பது முக்கியமானதாகும். ஆனால் தொழிலாள வர்க்கத்தின் தந்திரோபாய செயல் மார்க்கத்தை தீர்மானிப்பதற்காக அல்ல' என்று லெனின் அறிவுறுத்தல் சொல்லுகிறார்— இதுபற்றி சிந்திக்கவும். மேலும் நாம் விடுதலை யுத்தத்திற்கான படைகட்டுவது பற்றியும் பேச வேண்டியுள்ளது.

படை கட்டுதல் எனும் இந்தப் பிரச்சினைதான் இன்று அனைவரதும் கவனத்தையும் கவர்ந்துள்ள பிரச்சினையாகும். தேசியவாதப் பிரிவினர் சிலர் எப்படியாவது ஒரு படையைக் கட்டிக் கொள்வது எனவும் அதன் வலுவின் மூலம் ஒரு நாட்டைப் பெற்று அதை மக்கள் சனநாயக குடியரசாக மாற்றுவதெனவும் திட்டமிட்டு வருவது புலனாகிறது. இவர்கள் காரிய வாதிகள். காரியவாதம் (Pragmatism) பொருளின் முடிவுதான் சாரத்தை தீர்மானிக்கிறது என்கிறது. இதனாலேயே காரியவாதிகள் ஒரு குறித்த முடிவை அடைய எந்த வாழ்வையும் பின்பற்றத் தயாராக உள்ளனர். ஆனால் மார்க்சிசவாதிகள் இயங்கியலைத் தமது பார்வையாக கொண்டுள்ளனர். ஒரு வழியானது உள்ளடக்கியுள்ள முரண்பாடான அம்சங்களின் வளர்ச்சிப் போக்குதான், அதன் விளைவை - வழியின் இறுதிக்கட்டத்தை தீர்மானிக்கிறது, எனக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒரு போக்கு ஆரம்பிக்கும் போதே அதன் வளர்ச்சி விதிகளை உணர்ந்து கொள்வதால் விளைவை உய்த்துணரக்க கூடியவர்களாக உள்ளனர். சரியான வழியை கவனமுடனும் ஊக்கமுடனும் பின்பற்றத் தவறும் போது ஏற்படும் விளைவு சரியானதாக அமையப்போவதில்லை என்பதை திடமாக கூறுகின்றனர்.

இதனால் தான் இவர்கள் படைகட்டும் முயற்சியானது, அரசியலானது, வர்க்க உள்ளடக்கமானது, வர்க்கத் தன்மையானது அதனது எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது என திடமாக தெரிவித்து வருகின்றனர். பாட்டாளி வர்க்கமானது திட்டவட்டமாக தனது வர்க்கத்தினதும் புரட்சிப் போராட்டங்களினதும் அடிப்படையில் கட்டியெழுப்பும் படை மட்டுமே அதனது தேவைகட்காக போரிடுவதாயும் அதன் நலன்களைப் பாதுகாப்பதாகவும் அமையுமென்பதை உணர்ந்துள்ளது. இந்த தெளிவினடிப்படையில் தமது நடவடிக்கைகளை வகுத்துக் கொள்வதனாலேயே மார்க்சிச வாதிகளால் புரட்சிப்படைகளை தோற்றுவிக்கவும் கட்டி வளர்க்கவும் முடிந்திருக்கிறது.

இதற்கு மாறாக கூலிப்படைகளை நம்பி அவற்றில் தங்கியிருந்து புரட்சியை நடத்தியவர் யார்? இதெல்லாம் வர்க்கப்போராட்டத்துக்குத் தானே!, எமது போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமாயிருக்கையில் எதற்கு இந்த வழியை அனுஷ்டிக்க வேண்டும் எனக் கேட்கலாம். வர்க்க விடுதலை பற்றி கண்ணோட்டத்தினடியா கட்டப்படாத படைகள் எல்லாம் முதலாளியப் படைகளே! முதலாளித்துவப் படைகள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் போது இரட்டைக் குணம்சமுள்ள படையாகவுள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளன. ஒன்று விடுதலை பற்றியது. மற்றது முதலாளித்துவ கண்ணோட்டமான அதிகார நாட்டம். முதலாளியப் படைகள் அத்தகைய அதிகாரத்துவ உறவுகளின் அடிப்படையி லேயே உருவாகின்றன. மக்களிடமிருந்து பிரிந்ததாகவும் மக்கள் மீது அதிகாரம் செலுத்துவனவாயும் அவை தம்மை வெளிப் படுத்திக் கொள்ள நீண்டகாலம் செல்வ தில்லை.

உற்பத்திச் செயன்முறையிலிருந்து பிரிந்த படையானது அதனாலேயே பிற் போக்கான கண்ணோட்டத்தைக் கொண்ட தாக அமைகிறது. அதனாலேயே லெனின் "நிலையான படையென்பது எப்போதுமே எதிர்ப் புரட்சியின் கருவியாகும்" என்று கூறினார். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து அவர் எக்காலமும் அரசியல் நடவடிக்கை களிலிருந்து பிரிந்த அவற்றுக்கு புறம்பான முறையில் இராணுவ அமைப்புக்கள் (சட்டவிரோத அமைப்புக்கள் அனைத்துமே) அமைக்கப்படுவதினை எப்போதுமே எதிர்த்து வந்தார்.

"மனிதனது வாழ்நிலைதான் அவனது உணர்வைத் தீர்மானிக்கிறது. அன்றி அவ னது உணர்வு வாழ்நிலையை தீர்மானிப்ப தல்ல" ஒரு குறித்த நடைமுறையிலிருந்து —வர்க்கப் போராட்ட நடைமுறையிலி ருந்து பிரிந்து நின்றபடி ஒருவன்—வர்க்க உணர்வைக் கொண்டிருக்கமுடியாது. இத னாலேயே பாட்டாளி வர்க்கமானது ஒரு வர்க்கமாக உருப் பெறு வது வர்க்கப் போராட்டங்களினூடாக விழிப்படைந்து வர்க்க உணர்வு பெற்று அமைப்பாகும் போதே என்று கூறுகிறோம் அதுவே தன்னுணர்வுடைய வர்க்கமாகும். மக்கள் விடுதலை யென்பதும் மக்களது விடுதலைக்கான அயராத போராட்டங்களி னூடாகவே பெறப்படுகிறது. ஒரு சக்தி யாக பரிணமிக்கிறது. அத்தகைய போராட் டங்களிலே புடம் போடப்பட்ட, அப் போராட்டங்களில் விடுதலை உணர்வைக் கற்றுணர்ந்து கொண்ட நபர்களை மூலக் கூறாக கொண்டு உருப்பெறும் படையே— மக்கள் விடுதலைப் படையாக அமைகிறது. வர்க்கப் போராட்டத்தின் கருவியாக செயற் படுகிறது. மக்கள் படையானது இந்தப் போராட்ட விளை நிலத்திலிருந்தே தனது வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமான ஊட்டத்தை பெற்றுக் கொள்கிறது. இந்த வழியில் உரு வாகாத எல்லாப்படைகளுமே மக்கள் விரோ தக் கூறுகளை - வர்க்க விரோத கூறுகளை தம்மகத்தே அடக்கி நிற்கின்றன என்பது தெளிவானதாகும்.

மக்கள் படையானது இத்தகைய மக் கள் விடுதலைப் போராட்டங்களினூடே தான் தனது அளவில் வளர்ந்து செல்ல வும் வடிவங்களில் மாற்றங்களை பெறவும் செய்கிறது. செங்காவலர்களிலிருந்து செம் படை வரையிலான அளவு, பண்பு மாற் றங்களை இந்த உண்மையினடிப்படையி லேயே விளங்கிக்கொள்ள முடியும்.

இந்த பொருள் முதல்வாத, இயங் கியல் உண்மைகள் புரியாதபோதே அவலை நினைத்து உரலை இடிக்கும் பாவனையில் மார்க்ஸ, ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டா லின், மாவோ ஆகியோரது இராணுவப் படைப்புக்களை மேற்கோள் காட்டுவதே தமது செயல்களை நியாயப்படுத்த முனை யும், அவற்றையே தமக்கு ஆதாரமாக்க முனையும் அசட்டுத்தனங்களைச் செய்ய முடிகிறது. பெருந் தலைவர்கள் கற்பித்த வர்க்க அடிப்படையை உணராது வடிவங் களை கட்டவும் கடைப்பிடிக்கவும் முயலும் இவர்கள் சாரத்தை விட்டுச் சக்கையை விழுங்கிய பிறவிகள் எனக் கேலிக்குள் ளாவது தவிர்க்கவியலாததாகும். இந்த வேலைமுறையானது இவர்களுக்கு உதவிய விக்கப்போவதில்லை. பதிலாக உபத்திர வத்தை தோற்றுவிப்பதாகவே அமையும்.

நாம் புதிய ஜனநாயகப் புரட்சியை முன் னெடுப்பவர்கள். புதிய ஜனநாயக புரட்சி யின் பணிகளை முன்னெடுக்கவும், புரட்சி யைப் பாதுகாக்கவும் நமக்கு ஒரு படை தேவையானதாகும். அது ஒரு "செம்படை யாகவே" இருக்கமுடியும். அத்தகைய செம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெனினிஸ்ட் இணைப்பு

பிழை-திருத்தம்

| பக்கம் | பத்தி (Coulmn) | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 9 | 1 | 33 | ஏகாதியம் | ஏகாதிபத்தியம் |
| 10 | 1 | 7,8 | ஆரம்பமாகவுள்ளது. | ஆரம்பமாகவுள்ள, |
| 10 | 1 | 13, 14, 15 | ஜனநாயகப் புரட்சியின் நியதிகளுக்கு அமைவாகவும் நடாத்தப்பட வேண்டியதுடன், | ஜனநாயகப் புரட்சியின் நியதிகளுக்கு அமைவாகவும், புதிய ஜனநாயகப் புரட்சியின் நியதிகளுக்கு அமைவாகவும் நடாத்தப்படவேண்டியதுடன், |
| 11 | 2 | 16 | ''நல்லதாகவே செல்வதில்'' | ''நல்லதாகவே செய்வதில்'' |
| 16 | 1 | 34 | யாத்திவீக | யாந்திரீக |
| 17 | 1 | 5 | முளுமையாக | முழுமையாக |
| 17 | 2 | 9,10 | கருத்துக்களிடையாகவே | கருத்துக்களினடியாகவே |
| 17 | 2 | 30,31 | திறமையை | தலைமையை |
| 17 | 2 | 35,36,37 | ஒன்றில் முட்டாள் தனமாகவோ வஞ்சகத்தனமாகவோ மட்டுமே இருக்க முடியும். | ஒன்றில் முட்டாளின் அசட்டுத்தனமாகவோ, வஞ்சகனின் கபடத்தனமாகவோ மட்டுமே இருக்க முடியும். |
| 30 | 2 | 37 | -2 | 2 |
| 52 | 1 | 1 | முதல் மூன்று கேள்விகள் | முதலாவது கேள்வி |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படையை நாம் விவசாயப் புரட்சி எனும் பாடசாலையைக் கடந்து வரும் புரட்சிகர விவசாயிகள், புரட்சிகரத் தொழிலாளர் என்பவர்களை ஒன்றிணைத்து கட்டப்படும் குழுக்கள்; படைப்பிரிவுகள் அவற்றிலிருந்து உருவாகிவரும் தளபதிகள், போராளிகள் எனும் அத்திவாரத்தின் மீது தான் கட்டியெழுப்ப முடியும். அப்படியாக தோன்றும் கெரில்லாக் குழுக்கள் தான் நாளை வரப்போகும் செம்படையின் கருநிலையாக அமையும்.

அத்தகைய கருநிலைகளிலிருந்து அபிவிருத்தியடையும் படை ஒன்று மட்டுமே போர்க்களத்தில் மட்டுமல்லாது எதிர்பாராது கிளர்ந்தெழக் கூடிய எதிர்ப்புரட்சிக் கிளர்ச்சிகளின் எல்லா முயற்சிகட்கும் எதிரான போர்க் களத்திலும் [illegible] போன்ற காலங்களிலும் நம்பகமானதாகவும் இருக்கும். இத்தகைய ஒரு படையைக் கட்டி வளர்க்காதும் ஆயுதபாணிகட்கும் பின்னணியை அமைக்காதும் எதிரான போராட்டத்தில் புரட்சியின் வெற்றிக்கு உத்தரவாதம் வழங்க முடியாது. இந்தப்பணி பூர்த்தியுறுவதற்கு நீண்டகாலம் எடுக்கலாம். ஆனால் இது மட்டுமே புரட்சியின் வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்கும் ஒரே பாதையாகும்.

## ஏன் லெனி...

(பின் அட்டைத் தொடர்ச்சி)

டம் என்ற போக்கினூடே மட்டும் தான் வளரும் என்பதை வரலாறு எமக்குக் கூறுகிறது. இந்தக் கோட்பாடானது ஒரு புறத்தில் 'இடது' சந்தர்ப்பவாதத்தையும், மறுபுறத்தில் வலது சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்துப் போராடி தோற்கடித்தாக வேண்டும். புரட்சிக்கும் புரட்சிகர யுத்தத்திற்கும் சேதம் விளைவிக்கும், தீங்கு பயக்கும் போக்குகளை எதிர்த்துப் போராடாமல்- முற்றுச வெல்லாமல் ஒரு சரியான கோட்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதோ யுத்தத்தில் வெற்றி பெறுவதோ இயலாததாகும்.''

அரசியல் அதிகாரத்தை வெல்வதற்கான புரட்சிகர இயக்கத்தின் போராட்ட வடிவங்கள், அதற்கேற்ற அமைப்பு வடிவங்களை உருவாக்குதல், நடைபெறும் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை உத்தரவாதப்படுத்துவது போன்ற கடமைகளை நிறைவேற்ற தத்துவப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது, அதை நடைமுறைப் போராட்டத்துடன் இணைப்பது, அதிலிருந்து சரியானவற்றை சரியாக அறிவது, இந்த அறிவை பரந்துபட்ட மக்களிடம் போதிப்பது போன்ற புரட்சிகரக் கடமைகளை **லெனினிஸ்ட்** முழுமூச்சுடன் செயற்படுத்தும்.

லெனினியம் என்பது ஒரு கொள்கையின், நடைமுறையின் பள்ளிக்கூடமாகும். அது ஒரு பிரத்தியேகமான அச்சில் வார்த்த கட்சி ஊழியர்களையும், மக்களின் ஊழியர்களையும் பயிற்சி பெறச் செய்கிறது. அது வேலை செய்வதில் ஒரு பிரத்தியேகமான '**லெனினிஸ்ட்**' நடையை உருவாக்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஏன் லெனினிஸ்ட்?

'லெனினிஸ்ட்' என்ற மார்க்சிய—லெனினிய—மாசேதுங் சிந்தனைப் பதாகையை உயர்த்திப் பிடிக்கும் அரசியல், தத்துவார்த்தப் பத்திரிகையின் முதல் இதழ் உங்களுக்கு அறிமுகம் செய்யப்படுகிறது.

மேலும் மேலும் ஆழமாகி வரும் பொருளாதார நெருக்கடியுள் முழு உலக ஏகாதிபத்திய அமைப்பும், இலங்கையும் ஆழ்ந்துள்ள நிலையில் இப்பத்திரிகை வெளிவருகிறது. ஆளும் வர்க்கங்களான தரகு அதிகார வர்க்க நிலவுடைமை வர்க்கங்களுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு மேலும் மேலும் கூர்மையடைந்து வருகிறது. ஒடுக்கப்படும் வர்க்கங்கள் ஒடுக்கும் வர்க்கங்களின் கையிலுள்ள அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதற்காக வீராவேசத்துடன் போராடி வருகின்றனர். ஆனால் ஒடுக்கும் வர்க்கங்களோ அரசியல் அதிகாரத்தை தங்களின் கைகளில் தக்கவைத்துக் கொள்வதற்காக மூர்க்கத்தனமாக முயன்று வருகின்றனர். மக்களுக்கும் மக்கள் விரோதிகளுக்கும் இடையிலான விடுதலைப் போராட்டத்தில் இவ்வேடு போராடும் மக்களைச் சார்ந்து நிற்கிறது.

முன்னெப்போதும் நிலவியிராத அளவிற்கு இன்று மிகச் சாதகமான புரட்சிகரமான புற நிலைமை உலக அளவிலும், இலங்கைத் தீவிலும் நிலவி வருகிறது. இலங்கைத் தீவைப் பொறுத்தளவில் அகநிலையான புரட்சிகரமான சக்திகளின் அமைப்பு ரீதியான பலம் பல்வேறு இடங்களில் சிதறிக்கிடக்கின்ற வருந்தக்க நிலைமை நீடித்துள்ளது. புரட்சிகரமான சக்திகளுக்கிடையிலான ஐக்கியத்தைப் பலப்படுத்துவதன் மூலம் சாதகமற்ற சூழ்நிலையை சாதகமானதாக மாற்றி புரட்சியைச் சாதிக்கவேண்டியது எமது உடனடிக் கடமையாக கண்முன்னே முன் நிற்கிறது. மார்க்சீய - லெனினிய - மாசேதுங் சிந்தனை என்ற கொள்கைப் பதாகையின் கீழான தத்துவார்த்த ரீதியான போராட்டத்தின் மூலமும், சரியான கருத்துக்களை உயர்த்திப் பிடித்து, தவறான கருத்துக்களை முறியடிப்பது என்ற போராட்டத்தின் மூலமும் மட்டும் தான் புரட்சிகர இயக்கத்தினுள் நிலவும் முரண்பாடுகளைத் தீர்த்து ஐக்கியப் படுத்த முடியும். இந்த அரசியல் கடமையை 'லெனினிஸ்ட்' தனது தலையாய பணியாக ஏற்கிறது.

வெகுஜன இயல்புள்ளதும், சித்தாந்த, அரசியல் ரீதியில் ஒரு முகப்பட்டதும், ஸ்தாபனரீதியில் ஒன்றுபட்டதுமான முற்றாக உறுதிப் படுத்தப்பட்ட போல்ஷ்விய மயமான கம்யூனிஸ்ட் கட்சியொன்றை கட்ட உதவுவதே லெனினிஸ்ட்டின் நோக்கமாகும்.

"ஒரு சரியான அரசியல், இராணுவக் கோட்பாடுகள் என்பன தன்னெழுச்சியாகவோ அமைதியாகவோ தோன்றாது, வளராது; ஆனால் போராட்

65-ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்